# புதுமலர்

சமூக அரசியல் கலை இலக்கியக் காலாண்டிதழ்

## வள்ளலார் சிறப்பிதழ்

**புதுமலர் பதிப்பகம்**

ஈரோடு.

**புதுமலர் ( 1 )** வள்ளலார் சிறப்பிதழ் ( சனவரி - மார்ச்சு 2023 )
திருவள்ளுவர் ஆண்டு 2054

*ஆசிரியர்* : கண. குறிஞ்சி
இதழ் முகவரி : 6, முதல் வீதி,
சக்திநகர் மேற்கு, திண்டல் ( அஞ்சல் )
ஈரோடு - 638 012.
இதழ் தொடர்பு எண் : 94433 07681.
மின்னஞ்சல் : gana.kurinji@gmail.com
ஒளியச்சு : மன்பதை பதிப்பகம், சென்னை.
வடிவமைப்பு : புதுமலர் பதிப்பகம்.
வள்ளலார் ஓவியம் - ஓவியர் சுந்தரன்
பா.செயப்பிரகாசம் நிழற்படம் - இயக்குநர் சிரீராம்
இருவருக்கும் நன்றி

தனி இதழ் - ரூ. 100.
ஆண்டுக் கட்டணம் ரூ.400.
மூன்றாண்டுக் கட்டணம் ரூ.1000
புரவலர் கட்டணம் ரூ.5000.

இதழுக்கான கட்டணம் அனுப்புபவர்கள் உரிய தொகை அனுப்பிய பிறகு, மறவாமல் கீழ்க்காணும் எண்களில் அதன் விவரத்தைத் தெரிவிக்குமாறு கனிவுடன் வேண்டுகிறோம். இல்லாவிடின், இதழை அனுப்புவதில் சிரமம் நேரிடும்.

புலனம் (வாட்ஸ் அப் ) மூலம் தகவல் தெரிவிப்பதை உறுதியாகத் தவிர்க்கவும்.

ஆண்டுக் கட்டணம் குறித்துத் தகவல் தெரிவிக்க வேண்டிய தொடர்பு எண்கள் - 94433 07681, 72009 88681.

**புது மலர் இதழுக்கு ஆண்டுக் கட்டணம் செலுத்த வேண்டிய வங்கிக் கணக்கு விவரம்:**

G. SHANMUGA SUNDARAM
INDIAN BANK, THINDAL Branch, ERODE.
S/B A/C No. -- 73 90 144 253.
IFSC No. -- IDIB 000 T 202.

G Pay -- 94433 07681/
G.Shanmuga Sundaram.

# உள்ளடக்கம்

பக்கம்

(1) இதழின் குரல் 05

(2) அஞ்சலி

செ. நடேசன் 08
க. நெடுஞ்செழியன் 11
பா. செயப்பிரகாசம் 13

(3) வ.உ.சி. ஆவணச் சிறப்பிதழ் குறித்த கருத்துக்கள். 15

(4) தமிழர் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட வள்ளலார். 21
**- பழ. நெடுமாறன்**

(5) வள்ளலார் - வேதமரபு மறுப்பாளர் 28
**- கொளத்தூர் மணி**

(6) வடலூரும் ஈரோடும் **- பொதிகைச்சித்தர்** 40

(7) சனாதனச்சூழலில் வள்ளலாரின் தேவை 53
**- கண. குறிஞ்சி**

(8) வள்ளலாரின் இருநூறாம் ஆண்டும் நமது கடமையும் 63
**- பொழிலன்**

9) ஆறாம் திருமுறை இருட்டடிக்கப் படுவது ஏன்? 74
**- விடுதலை இராசேந்திரன்**

(10) வெள்ளை வேட்டி மரபும் காவி வேட்டி மரபும் 82
**- ரெங்கையா முருகன்**

(11) வள்ளலாரின் திரு அருட்பா பதிப்பு அரசியல் 86
**- முனைவர் வி. தேவேந்திரன்**

12) சைவ சமய மரபிற்குள் வள்ளலாரைக் கட்டமைக்கும் அரசியல் 106
**- கு. கலைவாணன் & ஜ. சிவகுமார்**

(13) புத்தகப் பேழை 117

(14) வள்ளலார் இயற்றிய நூல்கள். 122

# இதழுக்கு ஆதரவு
# நல்கியோருக்கு நன்றி

| திருவாளர்கள் | உருபா |
|---|---|
| வேலாயுதம், விஜயா பதிப்பகம், கோவை | ரூ.1000 |
| நக்கீரன் எழுத்தாளர். | ரூ. 1000 |
| வி.கே. கோபாலன் சென்னை.<br>( இரண்டாம் முறை ) | ரூ. 1000 |
| கே.சுப்ரமணியம், வழக்கறிஞர், கோவை.<br>(இரண்டாம் முறை ) | ரூ. 1000 |
| மணிமாறன், சிதம்பரம். | ரூ. 1000 |
| கோவிந்தசாமி, திருப்பூர். | ரூ. 1000 |
| பேராசிரியர் பஞ்சாங்கம், புதுச்சேரி. | ரூ. 1000 |
| பொன். சந்திரன், கோவை.<br>( இரண்டாம் முறை ) | ரூ. 1000 |

## புதுமலர் கிடைக்கும் இடங்கள்

- **பாரதி புத்தகாலயம், சென்னை**
- **டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை**
- **தடாகம் புத்தக நிலையம், சென்னை**
- **மன்பதை பதிப்பகம், சென்னை**
- **விஜயா பதிப்பகம், கோவை**
- **என்சிபிஎச், மதுரை/ஈரோடு**
- **எதிர்வெளியீடு, பொள்ளாச்சி**
- **பாலம் புத்தக நிலையம், சேலம்**

# இதழின் குரல்

'இடது' எனும் பெயரில் இதுவரை வெளிவந்த காலாண்டு இதழின் நீட்சியாகப் 'புதுமலர்' எனும் இதழ் தற்பொழுது வெளிவருகிறது.

'புதுமலர்' இதழ், பிரகடனங்கள் எவற்றையும் உரத்து முழங்கப் போவதில்லை.

நேற்று - இன்று - நாளை எனும் காலவெளியில் கருத்தில் கொள்ள வேண்டிய விவரங்களின் கல்வெட்டுப் பதிவாகப் புதுமலர் விளங்கும். தமிழ் விழுமியங்களில் காலூன்றி, உலக வானில் இது சிறகு விரிக்கும்.'

சமூக, அரசியல், கலை, இலக்கியப் பண்பாட்டு இதழாக வருவதுடன், தேவைப்படும் தருணங்களில் முக்கிய ஆளுமைகளின் ஆவணச் சிறப்பிதழாகவும் இவ்விதழ் வெளிவரும். அவ்வகையில், சனவரி 2023 இதழ் வள்ளலாரின் 200-ஆம் ஆண்டுப் பிறந்தநாளை முன்னிட்டு, அவரின் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தும் வண்ணம் ஆவணச்சிறப்பிதழாக வெளி வருகிறது.

இவ்விதழில், வள்ளலார் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது இவ்விதழில் வள்ளலார் குறித்துக் காத்திரமான கட்டுரைகள் வெளிவந்துள்ளன. திருவாளர்கள் பழ.நெடுமாறன் / கொளத்தூர் மணி / பொதிகைச்சித்தர் / கண. குறிஞ்சி / பொழிலன் / விடுதலை இராசேந்திரன்/ வி.தேவேந்திரன் / ரெங்கையா முருகன் / சிவகுமார் கலைவாணன் ஆகியோரது கட்டுரைகள், வள்ளலாரின் பன்முகப் பரிமாணங்களைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

வள்ளலாரது முக்கியப் படைப்பான திருஅருட்பா ஆறு திருமுறைகளைக் கொண்டது. முதல் ஐந்து திருமுறைகளும் அவரது சமய ஈடுபாட்டை எடுத்துரைப்பவை. ஆனால், சமயங்களைப் புறந்தள்ளி, மிகவும் முற்போக்கான கருத்துக்களைக் கொண்டதாகத் திருஅருட்பாவின் ஆறாம் திருமுறை உள்ளது. எனவே இந்த இதழில் வந்துள்ள கட்டுரைகளில் சில கருத்துக்கள், மீண்டும் மீண்டும் வெவ்வேறு கட்டுரைகளில் வந்திருப்பது தவிர்க்க முடியாததாகும். அந்தப் புரிதலில் கட்டுரைகளை அணுகுமாறு வேண்டுகிறோம்.

வள்ளலார் ஏதோ தமிழ்ப்புலவர்களில் ஒருவர் என்பதாக யாரும் ஒதுக்கிவிட முடியாது. சாதி / மதத்தின் பெயரால் நடைபெறும் கொடுமைகளை எதிர்த்து, தன் மென்மையான இயல்புக்கு மாறாக, வெஞ்சினத்தோடு சாட்டையைச் சுழற்றியவர் அவர். 'கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக' எனச் சாபமிட்டவர்.

வள்ளலாரது பல்வேறு கூறுகளில் நினைவுகூரத்தக்க ஒரு செய்தி, அவரது அறிவியல் மனப்பான்மையாகும். தனது கருத்துக்கள் அறிவியல் வழியிலானது என அவர் வலியுறுத்தி வந்ததும் இத்தருணத்தில் கருதத் தக்கதாகும். மூடப்பழக்கங்கள் / கருமாதி / திதி போன்ற சடங்குகள் / உருவழிபாடு போன்றவற்றை வாழ்வில் தவிர்க்க வேண்டும் என உரத்துப் பேசியவர் வள்ளலார். சமயத்துறையில் இருந்து வந்த ஒருவர் இத்தகைய அறிவியல் மனப்பான்மையை முன்நிறுத்துவது அரிதினும் அரிதாகும். அதுவும் நிலவுடைமை கோலோச்சிய அவரது காலத்தில் இத்தகைய குரல் தனித்துவமானது.

அறிவியல் மனப்பான்மையை (Scientific Temper) வளர்க்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது என இந்திய அரசமைப்புச் சட்டம் வலியுறுத்துகிறது. ஆனால் அரசை நிர்வகிப்பவர்களே இன்றைய காலகட்டத்தில் மூடநம்பிக்கையை உயர்த்திப் பிடிக்கின்றனர். பிள்ளையாருக்கு யானைத்தலை இருப்பதைச் சுட்டிக்காட்டி, அந்தக் காலத்திலேயே பிளாஸ்டிக் சர்ஷரி இருந்தது என இந்த நாட்டின் பிரதம மந்திரியே விஞ்ஞானிகள் மாநாட்டில் பேசிய கேலிக்கூத்தைப் பார்த்து இந்த நாடே கைகொட்டிச் சிரித்தது. இதன் காரணமாகவே சில அறிவியல் அறிஞர்கள் இனி இந்தியாவில் நடக்கும் அறிவியல் மாநாடுகளில் நாங்கள் பங்கேற்க மாட்டோம் என அறிவித்ததையும் மக்கள் கேட்டுக்கொண்டுதான் இருந்தனர்.

அது மட்டுமல்ல, இராமயணக் காலத்திலேயே விமானம் இருந்ததாகவும், மகாபாரதக் காலத்திலேயே தொலைக்காட்சி இருந்ததாகவும் அருள்வாக்குகள் வழங்கப்பட்டன. இப்படிப்பட்ட முட்டாள்தனமான கருத்துக்களைக் கூறியவர்கள் சாதாரண மக்களல்ல. அதிகாரப் பொறுப்பில் இருந்தவர்களே இப்படிக் கூறும் அதிசயத்தை நாம் காண நேர்ந்தது.

புல்புல் பறவையில் ஏறிப் பறந்து சென்று, பிறகு மீண்டும் அந்தமான் சிறைக்குத் திரும்பிய சவார்க்கரின் அதிமானுடச் சக்தியை அறியும் அரிய செய்தியும் இந்நாட்டிற்குக் கிடைத்தது. இத்தகைய சாதனை புரிந்ததால்தான் இப்பொழுது கர்நாடகச் சட்டமன்றத்தில் சவார்க்கர் படம் திறந்து வைக்கப்பட்டது போலும்!

சனாதன தர்மத்தையும், வகுப்புவாதத்தையும் எதிர்த்துச் சமரசமின்றிப் போராடிய **எம்.எம்.கல்புர்கி, கௌரி லங்கேஷ்** போன்றவர்களைச் சுட்டுப் படுகொலை செய்த கர்நாடகத்தில் இத்தகைய படத்திறப்பு நடந்திருப்பது வியப்பிற்குரியதல்ல!

இவை மட்டுமல்ல! 2014-க்குப் பிறகு இந்தியத் துணைக்கண்டத்தில்

*நடக்கும் கேலிக்கூத்துக்களுக்கு அளவே இல்லாமல் போய்விட்டது. இந்தியாவின் சாதி அமைப்பைப் புகழ்ந்து ஆய்வுக்கட்டுரைகள் இந்திய வரலாற்று ஆய்வு மையத்திலிருந்து வெளியானதைச் சகித்துக் கொள்ள முடியாமல், அதில் பணியாற்றிக் கொண்டிருந்த புகழ்பெற்ற ஆய்வறிஞர் ரோமிலா தாபர் அவர்கள் அந்நிறுவனத்திலிருந்தே வெளியேறினார் என்பது சமகால வரலாறாகும்.*

*அறிவியலுக்கு ஒவ்வாத மூடப்பழக்கங்களையும், சடங்குகளையும் புனிதப்படுத்தப் படுத்தும் அளவுக்கு இன்று இந்துத்துவ சக்திகள் வளர்ந்து விட்டன. இத்தருணத்தில் மராட்டிய மண்ணின் மைந்தர் நரேந்திர தபோல்கரை நினைவு கூர்கிறோம். தனது வாழ்நாள் முழுவதும் மூட நம்பிக்கைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியதாலேயே, சநாதனச் சதிகாரர்களால் அவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.*

*இருப்பினும் வாழ்நாள் முழுவதும் மூட நம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்பதற்காகப் போராடிய காரணத்தால், நரேந்திர தபோல்கர் நினைவாக மகராஷ்டிர அரசு வேறு வழியில்லாமல் அதற்கான சட்டத்தை அவரது நினைவாகக் கொண்டு வந்தது. இதனால், மூடப்பழக்கங்கள் அங்கே சற்றுக் குறைந்துள்ளன என்பது சிறு ஆறுதல்.*

*அவ்வகையில், இந்தியத் துணைக் கண்டத்திற்கே எடுத்துக்காட்டாக மூட நம்பிக்கைகளை எதிர்த்துச் சமரசமின்றிப் போர் தொடுத்தவர் தந்தை பெரியார் அவர்கள். எனவே தந்தை பெரியாரின் மண்ணில் மூடப்பழக்கங்களுக்கு எதிராக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது வள்ளலாரது 200 - ஆவது பிறந்த ஆண்டில், அவருக்குச் செலுத்தும் சிறந்த அஞ்சலியாக இருக்கும். தமிழக அரசு இக்கோரிக்கையை ஏற்று விரைந்து செயல்படுத்த வேண்டும் என்பதே அனைத்துச் சனநாயக சக்திகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.*

❖ ❖ ❖

# செ.நடேசன் - சிலநினைவுகள்

( 1944 - 2022 )



தமிழகஅரசியல் பண்பாட்டுச்சூழலில் அறுபதுகளின் பின் பாதியில் இருந்து எண்பதுகள் வரை (1965-1980) நிலவிய காத்திரமான இயக்கங்களின் போக்குகள்-சிந்தனைகள் இவற்றின் பின்னணியில் தோன்றி வளர்ந்தவர் செ. நடேசன் அவர்கள்.

ஆரம்பகாலத்தில் நம் எல்லோரையும் போலத்திராவிட இயக்கத்தின் தாக்கத்தில் இருந்த நடேசனையும், கவிஞர் முத்துப் பொருநனையும் அவரது இல்லத்தில் சந்தித்தபோது ‘‘திடீரென்று வந்து இவ்வளவு நாளாக நாங்கள் ஆசானாக ஏற்றுக் கொண்டிருக்கிற அறிஞர் அண்ணாவைப் புறக்கணித்துவிட்டு அந்தத் தாடிக்காரக் கிழவனைப் பின்பற்றச் சொல்லுகிறீர்களே’’ என்று நகைச்சுவையோடு குறிப்பிட்டார்.

சமூகஅரசியல் இன்னபிற சூழல்கள் அவரை மார்க்சியத்தின் பக்கம் அழைத்துவந்தது. இந்நாட்களில் எங்களுடன் கம்யூனிஸ்டுப் புரட்சியாளார்களின் ஒருங்கிணைப்புக் குழுவில் அல்லது மக்கள் யுத்தக் குழுவில் இயங்கிய தோழர் கருணாமனோகரன் எங்களோடு இணைகிறார்.

கருணாமனோகரன் இயங்கிய மார்க்சிய லெனினிய அமைப்பின் பெயர் சரியாக எனக்கு இப்போது நினைவில் இல்லை.

எழுபதுகளில் வானம்பாடி இயக்கம் எல்லாவகையிலும் தமிழ்க் கவிதைளில் மாற்றங்களைக் கொண்டுவந்தபோது நாங்கள் (இலக்கியதீபன், முத்துப் பொருநன், பொன்-கண்ணன், நடேசன்) விவேகசித்தன் எனும் இதழைப் பெருந்துறையில் இருந்து நடத்தினோம்.

தமிழகத்தின் முக்கியமான ஆளுமைகளான வெங்கட்சாமிநாதன், தருமுசிவராம் (பிரமிள்) போன்றவர்கள் பங்கெடுத்த அந்த இதழில் இலக்கியத்தில் உள்வட்டம், வெளிவட்டம், பரபக்க லோகாயதம் பற்றியெல்லாம் விரிவான அளவில் விவாதிக்கப்பட்டன. இந்தப் பணிகளிலெல்லாம் நடேசன் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்டார்;.

மேகங்கள் எனும் அமைப்பினைத் தொடங்கி 'பரணி" எனும் கவிதைத் தொகுதியினை வெளியிட்டார்; சேலம் தமிழ்நாடனின் (தமிழ்நாடன் இக்காலங்களில் எங்களோடு குடும்பஅளவில் நெருக்கமானவராக இருந்தார்;). முன்னுரையோடு வெளியான பரணி தொகுப்பு எல்லோருடைய கவனத்தையும் பெற்றது. கலையரசு எனும் பெயரில் நடேசன்

'துப்பாக்கிகளை
ஆட்சிக் கட்டிலில்
அமர்த்தியபோதே
துளைக்கும்
உரிமைகளும்
தோட்டாக்களுக்கு
வழக்கப்பட்டு
விட்டன"

- என அந்தக் காலங்களின் உணர்வினைப் பதிவு செய்திருப்பார்.

எழுபதுகளின் இறுதிவரை கவிஞராய், படைப்பாளியாய்ச் செயல்பட்ட நடேசன் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியில் இணைந்து அந்த அமைப்பின் மாநிலப் பொதுச் செயலாளர், அகில இந்திய அரசு ஊழியர், ஆசிரியர், அமைப்பின் பொறுப்பாளர் எனப் பரிணமிக்கிறார் பொருளாதாரப் பயன்களுக்காகவே செயல்பட்டு வந்த ஆசிரியர் இயக்கத்தை அரசியல்படுத்தி அதுவும் இடதுசாரி அரசியல் சிந்தனையோடு செயல்பட வைத்தவர் நடேசன். இக்காலங்களில் ஆசிரியர் இயக்கப் பணிகளோடு கருணாமனோகரனின் அம்பேத்கர் நூல்களின் தமிழ்ப்பதிப்புக்களுக்கும் உதவி செய்துவந்தார்.

தமது பணிநிறைவுக்குப் பின்னர் நடேசன் அவர்களின் செயல்பாடு இந்துத்துவா எதிர்ப்பில் தடம் பதித்தது. சிவாஜியைத் தங்கள் தலைவன் என ஆர்.எஸ்.எஸ் நிறுவ முயன்றபோது, மகாராஷ்ட்டிர மாநில இந்தியக்

கம்யூனிஸ்டுக் கட்சியின் செயலாளராக இருந்த தோழர் கோவிந்த் பன்சாரே எழுதிய 'சிவாஜி யார்' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நூலை ஆங்கிலம் வழித் தமிழில் 'மாவீரன் சிவாஜி - காவித் தலைவனல்ல - காவியத் தலைவன்" எனும் பெயரில் அவரே வெளியிட்டார்.

பின்னர் 2014-ல் கருணாமனோகரன் காலமான நிலையில் அவரது நூல்களை 'சாதி-வர்க்கம்-தேசியம் ஒரு பார்வை' எனும் பெயரில் நாங்கள் தொகுத்து வெளியிட்டதில் நடேசனின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதுதவிர 'இடது" இதழின் ஆசிரியர் குழுவில், முதல் இதழில் இருந்து தமது இறுதிநாள்கள் வரைசெயல்பட்டார். இந்துத்துவா ஆர்.எஸ்.எஸ் சங்கிகளை அம்பலப்படுத்தும் (FRONTLINE, FRONTIER, CARAVAN) இதழ்களில் வெளியான கட்டுரைகளை இயல்பான மொழிநடையில் மொழியாக்கம் செய்து 'இடது" இதழுக்குப் பெருமை சேர்த்துள்ளார்;.

எல்லோரையும் ஒருங்கிணைக்கும் ( Inclusive Politics ) அரசியல் பார்வைக்கு முன்னோடியான நடேசன் இரண்டு குறிப்பிடப்படவேண்டிய நூல்களையும் மொழியாக்கம் செய்திருக்கிறார். அவை -

நந்திதா ஹக்சாரின்

(1) காக்ஷ்மீர் தேசியத்தின் பன்முகங்கள்)

(2) GROVER FURR - KURUSECHEV LIED
(ஸ்டாலின் பற்றிய குருச்சேவின் பொய்கள்)

இந்த இரண்டு நூல்களும், எதிர் வெளியீடு மற்றும் பொன்னுலகம் பதிப்பகம் ஆகிய பதிப்பகங்களில் கிடைக்கும்.

காலங்கள் கடந்துசென்றாலும், நடேசனின் பணிகள் நிலைத்து நிற்கும்.


- ஓடை - பொ. துரைஅரசன் -

❖ ❖ ❖

# தமிழ்வானிலோர் நட்சத்திரம் வீழ்ந்தது!

## ஆய்வாளர் க. நெடுஞ்செழியன்

( 15 / 6 / 1944 - 04 / 11 / 2022.)




தொன்மையையும், விழுமியங்களையும் உரத்து முழங்கிய குரல் ஓய்ந்துவிட்டது. ஆசீவகம் குறித்து அறிவுறுத்திய அண்ணல் மறைந்தார்.

கருத்தியல் தளத்தில் மட்டுமல்லாமல், செயற்களத்திலும் காத்திரமான பங்களிப்பு வழங்கியவர் பேராசிரியர் நெடுஞ்செழியன் அவர்கள்.

அதன் காரணமாகவே குறிவைத்து அவர் மீது பொய் வழக்குப் புனைந்து சிறையில் அடைத்தது அதிகார வர்க்கம். அதிலிருந்து மீள்வதற்கு அவர் பட்டபாடு தாளம்படுமோ, தறிபடுமோ என்றாகி விட்டது.

கர்நாடக வெஞ்சிறையில் அவர் வாடிக் கொண்டிருந்த பொழுது, அவர் மீது புனையப்பட்ட பொய் வழக்கில் அவருக்கு ஆதரவாக வாதிடுவதற்காக மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் ( பியூசிஎல் ) அனைத்திந்தியத் தலைவராக அப்பொழுதிருந்த **மூத்த வழக்கறிஞர் கண்ணபிரான்** அவர்களை நான் தொடர்பு கொண்டேன். எவ்விதக் கட்டணமும் வாங்காமல் உயர்நீதி மன்றத்தில் வாதிட அவரும் முன்வந்தார். ஆனால், அவர் கேட்ட வழக்கு விவரங்களை உரிய காலத்தில் வழங்க முடியாத சூழல் ஏற்பட்டது. இருப்பினும், தன் மீது புனையப்பட்ட பொய் வழக்கினைத் தகர்த்தெறிந்து, குகையிலிருந்து வெளியேறும் சிறுத்தையைப் போல வெளிவந்தார் பேராசிரியர் அவர்கள்.

அதன்பின் அவ்வப்பொழுது அவரைச் சந்திக்கும் நல்வாய்ப்பினைப் பெற்று வந்தேன். நினைவில் வாழும் பேரறிஞர் ஆனைமுத்து அவர்களோடு இணைந்து செயலாற்றி வந்த தோழர் சங்கமித்ரா அவர்கள் மறைந்த சமயத்தில்

பின் இரவில் பேராசிரியரும் நானும் சங்கமித்ராவிற்கு இறுதி அஞ்சலி செலுத்தினோம். அதே போல் மேட்டூர் தாய்த்தமிழ்ப் பள்ளித் தாளாளர் தோழர் தமிழ்க்குரிசில் அவர்களது இறுதி நிகழ்விலும் பேராசிரியரோடு பங்கேற்றேன்.

இடையில் ஓரிரு முறை திருச்சியில் சந்திப்பு. கடைசியாகத் தமிழக வாழ் ஈழ ஏதிலியர் அமைப்பு சார்பாக நடைபெற்ற கருத்தரங்கில் கருத்துரை ஆற்றத் திருச்சி சென்ற பொழுது, பேராசிரியர் அவர்களையும், சக்குபாய் அம்மையார் அவர்களையும் அவர்களது இல்லத்தில் சந்தித்து நீண்ட நேரம் உரையாடும் வாய்ப்புக் கிட்டியது.

தமிழையும், தமிழ் மக்களையும் நேசித்ததோடு மட்டுமல்லாமல், அவர்களது பெருமை எத்தகையது என்பதைச் சலியாமல் நினைவூட்டிக் கொண்டிருந்த மாபெரும் ஆளுமை நெடுஞ்செழியன் அவர்கள். தமிழக வரலாற்றில் அவரது சுவடுகள் என்றும் அழியாதவை. அவருக்குச் செம்மாந்த வீரவணக்கம்.


- கண. குறிஞ்சி -

❖ ❖ ❖

# கரிசல்காட்டுச் சூரியன் காலத்தில் கரைந்தது.

## சூரியதீபன் (எ) பா.செயப்பிரகாசம்

(1941- 2022 )



முற்போக்கு இலக்கிய வட்டத்தில் தவிர்க்க முடியாத ஆளுமையாக விளங்கியவர் ஜே.பி. எனத் தோழர்களால் அன்போடு அழைக்கப் பட்ட சூரியதீபன் ( எ ) பா.செயப்பிரகாசம் அவர்கள்.

எழுத்தாளர்களிலேயே மிகவும் மாறுபட்டவர் ஜே.பி. எழுத்தோடு வேலை முடிந்துவிட்டது என ஓய்வெடுப்பவரல்ல இவர். மக்களின் மீதான தாக்குதல் எங்கிருந்து வந்தாலும் களத்தில் குதிக்கும் போராளி. போராட்ட உணர்வு அவரது இரத்த அணுக்களிலேயே இருந்த ஒரு நற்கூறு ஆகும்.

அதனால்தான் கல்லூரிக் காலத்திலேயே இந்தித்திணிப்பை எதிர்த்து இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார். இத்தகைய போராட்டக் கனல் இறுதிவரை அவரது உள்ளத்தில் கனன்று கொண்டே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மொழிக் காப்புப் போராட்டமானாலும், ஈழத் தமிழர் சிக்கலானாலும், எழுதுகோலை வாளாகப் பயன்படுத்தியவர் அவர்.

மனித உரிமை மீறல் குறித்து எந்தவொரு முன்னெடுப்பினை எடுக்க நினைத்தாலும், எழுத்தாளர்களில் நமக்கு முதலில் நினைவுக்கு வருபவர் ஜே.பி. அவர்கள்தான்.

முற்போக்கு இலக்கிய உலகில் அடர்த்தியான சுவடுகளைப் பதித்த 'மன ஓசை' இதழ் மூலம் அவராற்றிய பணி காத்திரமானது. எண்ணற்ற இளம்

எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்கியவர்.




கதைகளையும், புதினங்களையும், விமர்சனங்களையும் எழுதிக் குவித்தவர்.

பட்டங்கள், விருதுகளுக்குப் பின்னால் ஓடாதவர்.

எப்பொழுதும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே இருந்தவர். தோழமைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்.

அவரோடான நினைவுகள் மறக்க முடியாதவை. அவரது சிறுகதைத் தொகுப்பாகிய இரவு மழை ( 2000 ) ஈழம் - வன்மமும் அவதூறுகளும் ( 2009 ) ஈழம் - உலகை உலுக்கிய கடிதங்கள் ( 2009 ) ஆகிய நூல்களை எமது புதுமலர் பதிப்பகம் சார்பாக வெளியிட்டோம்.

அவரது பங்களிப்போடு உருவான, தமிழ்ப் படைப்பாளிகள் முன்னணியோடு புதுமலர் பதிப்பகமும் இணைந்து வெளியிட்ட ஈழத்து எழுத்தாளர்

மு. திருநாவுக்கரசு அவர்களது ‘தமிழீழ விடுதலைப் போராட்டமும் இந்தியாவும்‘ எனும் நூல், மிகப்பெரும் அதிர்வலைகளை அந்தக் காலகட்டத்தில் உருவாக்கியது.


அவரது மறைவு ஈடு செய்ய முடியாதது என்றாலும், அவரது இடம் வெற்றிடமாகி விடக்கூடாது. சனாதனம் சமூகத்தில் மட்டுமல்ல, இலக்கிய உலகிலும் மேலோங்கி வரும் நெருக்கடியான இக்காலகட்டத்தில் தோழரது இழப்பு, உறுதியாக ஈடுசெய்யப்பட வேண்டிய ஒன்றாகும். அதையே அவர் விரும்புவார் என்பதை மீண்டும் சொல்ல வேண்டியதில்லை.

தோழருக்கு எமது நெஞ்சார்ந்த அஞ்சலி.

-கண. குறிஞ்சி

# வ.உ.சி. சிறப்பு இதழ் பற்றிய கருத்துக்கள்.. ஆசிரியர் கி. வீரமணி அவர்களின் பதிவு

### (வாழ்வியல் சிந்தனைகள்)



## ஈரோட்டில் இது ஒரு 'இடுபொருள்' பயிர் விளைச்சல் 'இடது' என்ற முற்போக்குக் காலாண்டிதழ்

கொங்குநாட்டுப் பகுதியில் அந்நாள் முதலே மக்களது பேரன்பைப் பெற்றது பழையகோட்டை பட்டக்காரர் குடும்பம். அந்நாளில் கருஞ்சட்டை அணிந்த இளைய பட்டக்காரரும் இணையற்ற திராவிடர் இயக்கக் கொள்கைக் கோமானும் ஆகிய தளபதி ந. அர்ச்சுனன் அவர்களின் நூற்றாண்டு விழா துவக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்ள 1410.2022 அன்று ஈரோட்டிற்குச் சென்றிருந்தேன்..

அப்போது காலையில் சந்தித்த பல முக்கிய நண்பர்கள், சான்றோர்கள் பலரில் தோழர் முற்போக்கு சிந்தனையாளர் மானமிகு ஈரோடு **கண, குறிஞ்சி** அவர்களைச் சந்தித்து உரையாடியபோது, அவர்களது

அமைப்பு கடந்த சில ஆண்டுகளாக நடத்தி வரும் 'இடது' என்ற சமூக, அரசியல், கலை, இலக்கியக் காலாண்டிதழ் என்ற கருத்துப் பேழைகள் மூன்றினைத் தந்தார்.

ஆகஸ்டு - அக்டோபர் 2022 காலாண்டு இதழ் **'இடது' வ.உ.சி. ஆவணச் சிறப்பிதழாக** மலர்ந்துள்ளதும் அவற்றில் ஒன்று. - அன்று சில மணி நேரம் தங்கியிருந்த இடத்தில் ஓய்வு கிட்டிய போதே அந்த இதழ்களைப் புரட்டிப் படித்து மகிழ்ந்து மாலை தளபதி அர்ச்சுனன் அவர்களது நூற்றாண்டு விழா மேடையில் கண. குறிஞ்சி அவர்களை மீண்டும் சந்தித்தேன். அது மிகவும் சிறப்பான முறையில் - நல்ல கருத்தியல் இதழாக - அறிவுக்கு விருந்தளிக்கும் பல்வகை ஆய்வுக் கட்டுரைகளை அறிஞர் பெருமக்கள் பலரும் எழுதியிருப்பது, மற்ற இதழாளர்களிடம் காணாத புதுமையைப் பாய்ச்சிய இதழாக இது தனித்துவத்துடன் திகழ்கிறது. பாதுகாத்து வைக்க வசதியாக புத்தக வடிவமைப்புடன் அது அமைந்துள்ளது சிறப்பானது எனப் பாராட்டி மகிழ்ந்தேன்,

விலை 100 ரூபாய் - 4 காலாண்டு இதழ்களுக்கு 400 ரூபாய் கட்டணம் - புரவலர் ரூ. 1000 என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரோட்டிலும் பிற ஊர்களிலும் வாழும் முற்போக்கு சிந்தனையாளர்கள்- ஆதரவாளர்கள் பலர் தரும் நன்கொடைகளை வைத்து 'இந்த வெள்ளை யானையைக் கட்டித் தீனிபோட முன்வந்துள்ள துணிவுக்காக **கண. குறிஞ்சியாரை** மிகவும் பாராட்டியே ஆக வேண்டும்.

நம் நாட்டில் ஏடு நடத்துவது என்பது பெரிய பெரிய சுமையாகும். அதற்குரிய பணம் தேடுதல் உரியவர்களை ஒத்துழைக்கக் கண்டறிதல் என்பதெல்லாம் எளிதானதல்ல.

இந்த காலாண்டு இதழ் வ.உ.சி. 150 ஆண்டு ஆவணச் சிறப்பிதழாக - அவரது முகப்போவியம் தாங்கிவந்துள்ளது முழுமையாகப் படித்தபோது இதுவரை பலரும் அறியாத அரிய தகவல்கள். பல் சான்றோர்கள் ஆய்வுக் கட்டுரைகளாகவும் படைத்துள்ளனர்.

எல்லாக் கட்டுனரகளும் கருவூலத்தில் கருத்து பளு மிக்கவைகளாகவும், வஉசி பற்றி பலரும் அறிந்திராத அருமையான செய்திகள் - தகவல்களின் தொகுப்பாகவும் - உள்ளன. வெறும் கப்பலோட்டிய தமிழராக மட்டுமே இதுவரை அறிந்திருக்கிற தலைமுறைக்கு, அவரது தலைசிறந்த சமரசம்



வாழ்வியல் சிந்தனைகள்

*விடுதலை நாளிதழ் (18-10-2022)*

செய்து கொள்ளாத சமூகம் சார்ந்த பரட்சிகர சிந்தனைகள் - சமூக நீதிக்காக 1920-லேயே திருநெல்வேலி மாநாட்டில் அவர் கொணர்ந்த வகுப்புரிமைத் தீர்மானம் பற்றிய வரலாறும் மூடநம்பிக்கைகளைத் தோலுரித்தத் தன்மை, சிறந்த முற்போக்குக் கொள்கைகளை பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் அனைவரும் ஒருங்கிணைந்து நலம் காக்க, உரிமைப் போராளியாக குரல் கொடுத்திருப்பது -

இதுவரை கண்டிராத கேட்டிராத **- ஒரு வைராக்கிய வீரர் வ.உ.சியை** அவரின் கொள்கையுள்ளம் - துணிவு கொப்பளிக்கும் துல்லியமான முற்போக்கு - பகுத்தறிவு கொள்கை முழக்கம் பற்றிப் படிக்கையில் எவரையும் வியப்பின் எல்லைக்கே தள்ளிவிடுகிறது.


கண. குறிஞ்சி அவர்களது கட்டுரை, ப. திருமாவேலனின் செறிவு எப்படி பெரியார் வழியில் மரியாதை, சமூகநீதி இறுதியில் களம் காணத் தயார் என்ற புதிய பல பயனுறு தகவல்கள் தரும் கட்டுரை உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன.

அவற்றை நமது ஏடுகளில்- நாட்டில் மீள்பரப்ப வேண்டியதும் - வ.உ,சி அவர்களது 150ஆம் ஆண்டு விழாக் காலத்தில் பரப்ப வேண்டும்.

**‘இடது’** இதழ் வளர பலரும் வாங்கிப் படிப்பதுடன் கருத்து வளத்தை செழுமைப்படுத்திட முன் வருதல் வேண்டும். அனைவருக்கும் நம் நெஞ்சம் நிறைந்த பாராட்டு - நல்ல ஏடுகள் நாடெங்கும் பரவ வேண்டும்.

❖ ❖ ❖

# அய்யா பழ. நெடுமாறன் அவர்களின் பதிவு



*18-10-2022*

*வ.உ.சி. பற்றிய இடது சிறப்பிதழ் அவரைக் குறித்த மிகமிக முதன்மையான செய்திகள் நிறைந்த ஆவணமாகும். இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டிய பல உண்மைகள் அவற்றில் பொதிந்துள்ளன. இந்த இதழ் குறித்து விரிவான மதிப்புரையை விரைவில் 'தென்செய்தி' இணைய இதழில் வெளியிட உள்ளேன்.*

# மூத்த ஊடகவியலாளர்

# சாவித்திரி கண்ணன் அவர்களின் பதிவு

## வ.உ.சியை வாழ்க்கைத் துணையாக்கும் நூல்!


இடது சமூக அரசியல்,கலை இலக்கியக் காலாண்டிதழ் வ.உ.சியை நினைவு கூர்ந்து, சிறப்பிதழ் ஒன்றை வ.உ.சியின் 150 ஆவது பிறந்த நாளுக்கான ஆவணச் சிறப்பிதழாக நேர்த்தியாகக் கொண்டு வந்துள்ளது. வ.உ.சி குறித்து இது வரை ஏராளமான செய்திகள் வெளி வந்துள்ளது. ஆனால், இந்த இதழை படித்த போது இன்னும், இன்னும் வ.உ..சி பற்றிப் பேசவும், எழுதவும் நிறைய உள்ளது எனத் தோன்றியது! அவ்வளவு அரிய தகவல்களைத் தொகுத்து தந்துள்ளனர்!

(18 / 11 / 2022)

'மக்கள் வாழ்வில் வ.உ.சியின் அறியப் படாத வாய்மொழிக் கதைகள்' என்ற முதல் கட்டுரையே படு சுவாரசியமாக உள்ளது. குடியானவருக்குப் பரிவு காட்டிய வாய்மொழிக் கதையில் தன்னைத் தேடி வந்தவர்களை மட்டுமல்ல, சாலையில் தான் நடக்கும் போது சந்திக்க நேரும் குடியானவனின் முகக் குறிப்பறிந்து விசாரித்துப் பரிவோடு அவர்களின் தீராப் பிரச்சினைகளையும் எளிதில் தீர்த்து வைத்தவர் எனத் தெரிய வருகிறது! மற்றொரு வாய் மொழிக்கதையில் அன்றைய உணவிற்கான வருமானத்திற்குச் சாணி வறட்டி தட்டி விற்கும் நிலையில் அவர் குடும்பச் சூழல் இருந்தது தெரிய வரும் போது மெய் சிலிர்த்தது. இப்படியாக ஒன்பது வாய்மொழிக் கதைகளையும், அந்தக் கதையின் மூலத்தையும் சில ஆதாரங்களோடு ரெங்கையா முருகன் ஆவணப்படுத்தி உள்ளார்!

'வ.உ.சியின் மொழியும், பொருளியலும்' என்ற கதிர் நம்பியின் கட்டுரை வ.உ.சியின் மொழி வழித் தேசியச் சிந்தனை குறித்து அழகாக விளக்கி எழுதப்பட்டுள்ளது. மொழியின் முக்கியத்துவம், பிற மொழிக் கலப்பற்ற தமிழின் தனித்தன்மை குறித்து வ.உ.சி ஆழமாகவே சிந்தித்து உள்ளார். அத்துடன் பொருளியல் தற்சார்புத் தேசியம் என்ற கருத்தாக்கத்தையும் வ.உ.சி முன் வைத்துள்ளார்! புறவயமாகப் பொருளியல் மேம்பாட்டையும், அகவயமாக மொழித் வழித்தேசத்திற்கான கட்டுமானத்தையும் வடிவமைக்க வ.உ.சி எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றி இந்தக் கட்டுரை புதுப் பரிமாணங்களைத் தருகிறது!

‘வ.உ.சி அவர்களின் சமூகப் பார்வை” என்ற கொளத்தூர் மணியின் கட்டுரை வ.உ.சியின் முற்போக்குச் சிந்தனைகளை, சாதி, சமயங்களைக் கடந்த உன்னதங்களை, பற்பல நிகழ்வுகள் வழியே படம் பிடித்துக் காட்டுகிறது. வ.உ.சி மறைவுக்குப் பெரியார் எழுதியுள்ள கட்டுரை நம்



கண்களைக் குளமாக்குகிறது. மற்றொரு கட்டுரையில் வ.உ.சி இறப்பை ஹிந்து, தினமணி, மெயில், மித்ரன் போன்ற இதழ்கள் அலட்சியப் படுத்தியமைக்குக் கொந்தளித்துள்ளார் பெரியார்!

‘பெரியாரின் சுயமரியாதையும், வ.உ.சியின் தன் விடுதலையும்’ என்ற கட்டுரையில் ப.திருமாவேலன் வ.உ.சிக்கும், பெரியாருக்கும் உள்ள நட்பு, நெருக்கம் ஆகியவற்றோடு, வ.உ.சி என்ற ஆளுமையைப் பார்த்து, தான் பொதுத் தொண்டில் இறங்கியதாகக் குறிப்பிடும் பெரியாரின் வாக்குமூலத்தையும் திருமாவேலன் பதிவு செய்துள்ளார். வ.உ.சியின் காலத்தை 1904 முதல் 12 வரை அரசியல் விடுதலைக்காகன காலமாகவும், 1918 முதல் 36 வரை சமூக விடுதலைக்கான காலமுமாகக் குறிப்பிடும் திருமாவேலன், அது பற்றியே இந்த கட்டுரையை எழுதியுள்ளார். ‘பார்ப்பன ஆதிக்கத்தைக் குறித்தும் , அதன் தாக்கங்கள் குறித்தும் பெரியாரைப் போலவே வ.உ.சியும் பல கருத்துக்களைக் கொண்டிருந்தார்’ என இந்த கட்டுரை ஆவணங்களோடு நிறுவுகிறது.

‘வ.உ.சிதம்பரனாரின் சிந்தனைப் புலம்’ என்ற கட்டுரையை கண.குறிஞ்சி எழுதியுள்ளார். ‘சாதி ஒழிப்பு பற்றி வெறுமனே பேச்சில் அல்லாமல் வாழ்ந்து காட்டியவர் வ.உ.சி’ எனப் பல சம்பவங்களை நினைவுபடுத்திச் சொல்கிறார் கண.குறிஞ்சி. வ.உ.சி காலம் கடந்து சிந்தித்தவர். ‘பெண்கள் குறித்த அவரது பார்வை இன்றைய பெண்ணியச் சிந்தனைகளுக்கு முன்னோடியாக இருக்கின்றன. ..’ என்று கூறும் ஆசிரியர், ஆண் - பெண் சம உரிமை குறித்தும், பெண் கல்வி குறித்தும் வ.உ.சி நிறையவே எழுதியும், பேசியும் வந்துள்ளதை மேற்கோள் காட்டியுள்ளார்!

”வறுமையினும், வியாதியினும் சகிக் கொணாக்
கொடியது அடிமைத்தனமே” என்கிறார் வ.உ..சி!

வ.உ.சி குறித்த பாரதிதாசனின் அருமையான கவிதை ஒன்றையும் இந்தச் சிறப்பிதழ் வெளியிட்டு உள்ளது!

'வ.உ.சியின் காலமும், இக்காலமும்' என்ற தலைப்பில் குருசாமி மயில் வாகனன் வ.உ.சியின் சுதேசிக் கருத்துக்களை இந்தக் காலகட்டத்தோடு பொருத்தி, அதன் அவசியத்தை நன்றாக விளக்கியுள்ளார். அன்னியப் பொருட்களை புறக்கணித்து, சுதேசியத்திற்காகப் பாடுபட்ட இந்திய தேசம் இன்று அன்னிய பொருட்களை அரவணைத்து வரும் அவலத்தையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

'ஒவ்வொரு இந்தியரும், ஒவ்வொரு சாதியாய் இருந்தால் என்ன?' என்ற கட்டுரையில் அறிவழகன் பெருஞ் சொல்லாக வ.உ.சி பேசியவற்றை மூன்றாகக் காட்டி, அடையாளப்படுத்துகிறார். சுய அரசாட்சி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், பிராமணரும் பிராமணரல்லாரும் ஆகிய மூன்றைக் குறித்த வ.உ.சியின் பார்வைகளை நன்கு விளக்கியுள்ளார்! "சுய அரசாட்சிக்கு அடிப்படையாய்ச் சாதி, மத வேற்றுமைகளை களைதல் முக்கியம்" என்கிறார் சிதம்பரனார்.

வ.உ.சி பற்றிய நாமக்கல் கவிஞரின் கவிதையும், கவிஞர் முத்துலிங்கம் எழுதிய கவிதையும், சுரதா கவிதையும் இந்த சிறப்பிதழுக்கு அழகுக்கு அழகூட்டுகின்றன!

கடைசியாகச் சொல்ல வேண்டுமென்றால், இடது வெளியிட்டுள்ள இந்த வ.உ.சி சிறப்பிதழ் வெறுமனே வ.உ.சியின் புகழ் பாடவில்லை. தற்காலச் சூழலில் வ.உ.சியின் பொருத்தபாட்டினை உணர்த்துகிறது! நம்மை இன்றைய சமூக, அரசியல் செயல்பாடுகளுக்கு முன் நகர்த்துவதாகவும் உள்ளது!

நூல் ; இடது காலாண்டிதழ், வ.உ.சி 150 ஆவணச் சிறப்பிதழ்

ஆசிரியர்; கண.குறிஞ்சி


வெளியீடு; புதுமலர் பதிப்பகம்

விலை; ரூ100

தொடர்புக்கு; 94433 07681

❖ ❖ ❖

# எழுத்தாளர் ரெங்கையா முருகன் அவர்களின் பதிவு



சிற்றிதழ் வரலாற்றில் பெரியவர் வ.உ.சி.யை தக்க சமயத்தில் வ.உ.சி.150 ஆவணச் சிறப்பிதழ் வெளியிட்டுக் கொண்டு வந்த இடது ஆசிரியர் கண.குறிஞ்சி அய்யா அவர்களை எவ்வளவு வாழ்த்தினாலும் தகும். சில அமைப்புகள் அதாவது டில்லி தமிழ்ச் சங்கம் சுடர் பம்பாய் தமிழ்சங்கம், கோவைச் சைவப் பேரவை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சார்பில் செந்தமிழ் செல்வி. சுரதா கொண்டு வந்த சிறப்பிதழ் சென்ற ஆண்டு காக்கைச் சிறகினிலே மூலம் வெளியான வ.உ.சி.சிறப்பிதழ், சைவமுரசு அமைப்பில் வெளிவந்த சிறப்பிதழ் வரிசையில் மிகவும் காத்திரமான , பாதுகாத்து வைக்கவேண்டிய இதழாக 'இடது' இதழ் தனது இதழ் பயணத்தில் பெரியவர் வ.உ.சி.க்குப் பெருமை சேர்த்திருக்கிறது. ஆசிரியர் கண.குறிஞ்சி அவர்கள் இல்லையெனில் இந்த இதழ் சாத்தியமில்லை. ஆசிரியர் கண.குறிஞ்சி அவர்களுக்கு **வ.உ.சி. ஆய்வு வட்டம்** மனதார நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது. இந்த இதழின் முக்கியத்துவத்தை முடிந்த வரை எல்லோரிடமும் கொண்டு சேர்ப்பது நமது கடமை. ம.பொ.சி. முதன் முதலாக தமிழ்முரசு இதழில் பெரியவர் வ.உ.சி. படத்தைப் போட்டுப் பெருமை சேர்த்தார்.அன்று அவர்போட்ட விதை இன்று விருட்சமாக வ.உ.சி.புகழ் பரவிவருகிறது. வரலாற்றில் இடது இதழ் மற்றும் ஆசிரியர் கண.குறிஞ்சி அவர்களும் அழுத்தமாக நினைக்கப் படுவர்.

14/10/2022

# தமிழர் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட வள்ளலார்

**பழ. நெடுமாறன்**

கி.பி. 1757 முதல் 1887ஆம் ஆண்டு வரையிலான நூற்றாண்டுக் காலம் இந்தியப் பெரு நாடு அந்நியர்களின் படையெடுப்பிற்கும், ஆக்கிரமிப்பிற்கும் உள்ளான காலகட்டமாகும். 700க்கும் மேற்பட்ட சிற்றரசர்களும், அவர்களை மிரட்டிப் பணிய வைத்து நாட்டின் வளங்களைச் சூறையாடுவதற்கு ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனம் ஓயாது முயன்று சிறுகச்சிறுக வெற்றி பெற்றுக்கொண்டிருந்த காலகட்டமாகும். கி.பி. 1806ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிரான முதல் புரட்சி தமிழ்நாட்டில் வேலூரில் வெடித்தது. அதற்கு முன்பாக மைசூரில் திப்புசுல்தானும் நெற்கட்டும் சீமை பூலித்தேவரும், சிவகங்கை இராணி வேலுநாச்சியாரும், மருது சகோதரர்களும், பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை போன்றவர்களின் ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்டம் மூண்டெழுந்து அவர்கள் அனைவரும் வீரச்சாவைத் தழுவினர். அதற்கு 50ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. 1857ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிரான சுதந்திரப் போராட்டம் வட இந்தியாவில் வெடித்தது..

“தடியெடுத்தவன் தண்டல்காரன்” என்ற நிலையில் நாடு அமைதியற்றுத் தத்தளித்தது. சமய வேறுபாடுகளும் சாதி வேறுபாடுகளும் மக்களைக் கூறுபோட்டுக் கொண்டிருந்தன. தீண்டாமை என்னும் தீமை புற்று நோயாக வளர்ந்திருந்தது. மொத்தத்தில் சமுதாயம் புரையோடிக்கிடந்தது. இந்தச் சூழ்நிலையில் வங்காளத்தில் இராசாராம் மோகன்ராய், இராமகிருட்டிணர், பஞ்சாபில் தயானந்த சரசுவதி சுவாமிகள், தமிழகத்தில் வள்ளலார் இராமலிங்க அடிகள் ஆகியோர் தோன்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டவும், சமுதாயக் கேடுகளைக் களையவும், ஆன்மநேய ஒருமைப்பாட்டை நிலை நிறுத்தவும் முயன்றார்கள்.

மேற்கண்ட சமுதாயச் சிந்தனையாளர்களில் தனித்தன்மை வாய்ந்தவராகவும், அனைவருக்கும் முன்னோடியாகவும் வள்ளலார் அவர்கள் விளங்கினார். விக்கிரக வழிபாட்டை அவர் ஏற்கவில்லை. சமயம் கடந்து அனைவரும் ஏற்கும் வண்ணம் சோதி வழிபாட்டை மக்களிடையே பரப்பினார்.

தொடக்க காலத்தில் வள்ளலார் அவர்கள் சைவ சமயத்தைச் சார்ந்து முருகன், தில்லை நடராசன் ஆகியோரை வழிபட்டுப் பாடினார். அவர் இயற்றிய

திருவருட்பாவில் முதல் ஐந்து திருமுறைகள் சைவத்தையும், சிவவழிபாட்டையும் போற்றியவையே ஆகும். அவருடைய ஆறாம் திருமுறைதான் சோதி வழிபாட்டினையும், சுத்த சன்மார்க்க நெறியையும் வலியுறுத்தியது. முதல் ஐந்து திருமுறைகளில் எவ்வளவு பாடல்கள் உள்ளனவோ அவைகளைவிட, அதிகமான பாடல்கள் ஆறாம் திருமுறையில் மட்டும் அடங்கியுள்ளன.

சாதி, சமய, வேறுபாடின்றி சன்மார்க்க நெறியில் வாழ்வதுதான் இகத்தில் பரத்தைப் பெறுவதாகும் என்பதே வள்ளலாரின் கோட்பாடாகும். மக்களிடம் புரையோடியிருந்த மூடநம்பிக்கைகள், சடங்குகள், பல கடவுளர் வழிபாடு, ஆகியவற்றை மாற்றிச் சீர்திருத்த முயன்றார். அனைவருக்கும் பொதுமையான ஒளி வடிவில் வழிபடுதல், சாதி, சமய வேறுபாடின்றி உலகோர் அனைவரும் ஆன்மநேய ஒருமைபாட்டை அடைதல், செல்வர் - வறியர் நிலை மாற்றல், ஆண் - பெண் யாவருக்கும் கல்வி அளித்தல், புலால் மறுத்தல், கொல்லாமை, ஒழுக்கம் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்ட சன்மார்க்க சங்கம் என்னும் மக்கள் இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

“தையலார் கொண்டாடும் விளக்கீடு” என மாணிக்கவாசகரும், “தீப மங்களா நமோ நம” என அருணகிரியாரும் சுட்டியது இம்மரபைதான். தமிழர் மரபில் நெடுங்காலமாக நிலவி வந்த சோதி வழிபாட்டை தத்துவ நெறிக்குக் கொண்டு சென்றவர் வள்ளலார் மட்டுமே. புறத்திலே விளங்கும் இறையொளி (அக்கினி, கதிரவன், சந்திரன், விண்மீன்களின் ஒளி) அகத்திலும் உண்டு. அவ்வாறு உள்ளொளியாக (ஆன்ம ஒளி, சீவ ஒளி, மன ஒளி, கண்ணொளி) விளங்கும் இறைவனைக் கண்டு தொழவேண்டும் என்பதை விளக்கவே சத்தியஞான சபையில் சோதி வழிபாட்டு முறையை எல்லோருக்கும் பொதுவான இறைவழிபாடாகச் செயல்படுத்தினார்.

## சமுதாயப் புரட்சியாளர்

வள்ளலார் உலகிற்கு வழங்கிய முழுமுதற் கோட்பாடு சீவகாருண்யம் என்னும் உயிரிரக்கப் பண்பாகும். உயிர்கள் யாவும் சமம் என்பதை உணர்ந்து அவற்றின் இன்ப - துன்பத்தில் பங்குகொண்டு ஒன்றிணையும் உணர்வைத்தான் சீவகாருண்யம் அல்லது ஆன்மநேயம் என்றார் வள்ளலார். அவரின் சீவகாருண்யம் என்பது ஒழுக்கத்தோடு இணைந்ததாகும். “சீவகாருண்ய ஒழுக்கம்” என்ற பெயரில் ஒரு நூலையே எழுதியுள்ளார்.

“பசித்திரு, தனித்திரு, விழித்திரு” என்பதே அவர் போதித்த மூன்று மந்திரங்களாகும். வள்ளலாருக்கு முன்பு வாழ்ந்த அருள்நெறிச் சான்றோர் அனைவரும் பிறவாமையை வேண்டினர். ஆனால். வள்ளலார் இறவாமையை வேண்டினார்.

தனக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருமூலரும், திருநாவுக்கரசரும் வேதங்களையும், சாத்திரங்களையும் மிகக் கடுமையாகச் சாடியதைப் போலவே வள்ளலாரும் அவற்றைச் சாடி புறத்தொதுக்கினார்.

*சாத்திர மோதும் சதுர்களை விட்டுநீர்*
*மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்*
*பார்த்தஇப் பார்வை பசுமரத் தாணிபோல்*
*ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே!"*
என்றார் திருமூலர்.

*"சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்*
*கோத்தி ரமுங்கு லமுங்கொண் டென்செய்வீர்!*
*பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்*
*மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே"*
என்றார் திருநாவுக்கரசர்

அவர்களைப் போலவே சாதி - சமயச் சடங்குகள் நிறைந்த வேதங்களிலும், சாத்திரங்களிலும் ஆன்மநேய ஒருமைப்பாடு காண அவர் விரும்பவில்லை. அவை அனைத்தும் பொய், சழக்கு எனக்கூறி வெறுத்தார்.

*சாதிகுலம் என்றும் சமயமதம் என்றுமுக*
*நீதியியல் ஆச்சிரமம் நீட்டென்றும் - ஓதுகின்ற*
*பேயாட்டம் எல்லாம் பிதிர்ந்தொழிந்த வேபிறர்தம்*
*வாயாட்டம் தீர்ந்தனவே மற்று,*
*வேதாக மங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்*
*வேதாக மத்தின் விளைவறியீர் - சூதாகச்*
*சொன்னவலால் உண்மைவெளி தோன்ற உரைக்கவிலை*
*என்ன பயனோ இவை.*

வேதங்களையும் விரிவுகளையும் புராண சாத்திரங்களையும் வடமொழி வாயிலாகவே திறம்படக் கற்றவர் எனினும் பகுத்தறிவுக்கும் உலகவொற்றுமைக்கும் உயிர் நலத்துக்கும் ஒவ்வாதவற்றைக் கடுஞ் சொற்களால் இகழ்ந்துரைத்தவர் வள்ளலார் போல் எவருமில்லை.

"உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் உடையவர்களெல்லாம் உறவினத்தார் அல்லர்; அவர் புறவினத்தார்" என்று கூறிய வள்ளலார் அவர்கள், உயிர்க்கொலை செய்பவரோ, புலால் தின்பவரோ பசி என்று வந்துவிட்டால் சத்திய தர்ம சாலையில் அவர்களுக்குச் சோறிடும்படி கூறிய பெருங்கருணையாளராகத் திகழ்ந்தார்.

தனது சமுதாயப் புரட்சிக்குக் கருவிகளாகக் கீழ்க்கண்ட நான்கு அமைப்புகளை அவர் நிறுவினார்.

(1) சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

(2) சத்திய தரும சாலை

(3) சத்திய ஞான சபை

(4) சித்தி வளாகம்

முதல் மூன்றும் வடலூரிலும், நான்காவது அருகிலுள்ள மேட்டுக்குப்பத்திலும் அமைந்துள்ளன. தனது கோட்பாடுகளைப் பரப்புவதற்கு புத்தர் தோற்றுவித்தப் பௌத்த சங்கத்திற்குப் பிறகு வள்ளலார் அவர்கள் தனது கோட்பாடுகளைப் பரப்ப சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவினார். வேறு யாரும் தங்கள் கோட்பாடுகளைப் பரப்புவதற்கு சங்கங்களை அமைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**மடமும் - சங்கமும்**

தமிழ்நாட்டில் வள்ளலாருக்கு முன்பிருந்த சமயத் துறவிகள் மடங்களையே நிறுவினார்கள். தீட்சைப் பெற்றுக் காவிக் ஆடைச் தரித்தார்கள். அந்தந்த சாதிகளைச் சேர்ந்த துறவிகள் தங்களின் சாதிகளைச் சேர்ந்தவர்களையே தாங்கள் நிறுவிய மடங்களின் தலைவர்களாக நியமித்தார்கள். இந்தப் போக்கு இன்றுவரை தொடர்கிறது.

ஆனால் வள்ளலார் எந்தக் குருவிடமும் போய்த் தீட்சைப் பெறவில்லை; மடம் அமைக்கவில்லை; காவி ஆடை தரிக்கவில்லை; வெள்ளாடை உடுத்திய துறவியாகி மடம் அமைக்காமல் சங்கம் அமைத்தவர் அவரே. மடம் என்பது துறவிகளுக்கு மட்டுமே உரியது. அதிலும் ஆண்களுக்கு மட்டுமே அங்கு இடமுண்டு. சங்கம் என்பது ஆடவர்க்கும், பெண்டிர்க்கும் பொதுவானது. பக்குவம் பெற்றவர்கள் பெறாதவர்கள் ஆகிய அனைவர்க்கும் அங்கு இடமுண்டு. இதற்காகத்தான் மடம் எனப் பெயரிடாமல் சங்கம் என்ற பெயரினை அவர் இட்டார். “தயை உடையார் எல்லோரும் சமரச சன்மார்க்கம் சார்ந்தவரே” எனவும் “அருளுடையார் எல்லோரும் சமரச சன்மார்க்கம் அடைந்தவரே” எனவும் அவர் பாடிய பாடலடிகளில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அமைத்த சங்கத்திற்குத் தானே தலைவராகிவிடவில்லை. “சுத்த சிவ சன்மார்க்க சங்கத் தலைவனே” என அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரையே சுத்த சன்மார்க்க சங்கத்தின் தலைவராக அவர் ஏற்றுக்கொண்டார்.

**தமிழ் நூல் புறக்கணிப்பு**

வள்ளலார் வாழ்ந்த காலத்தில் அவருக்கு முன்பாகவும், பின்பாகவும் தமிழ்நாட்டில் சாதிப் பூசல்கள் மட்டுமல்ல, சமயப் பூசல்களும் மலிந்திருந்தன. இந்தப் பூசல்கள் தமிழ் இலக்கிய உலகிலும் ஊடுருவின.

சைவ மடங்களில் சைவ சமய நூல்களைத் தவிர, மற்ற நூல்களைப் படிக்கவோ, ஓதவோ கூடாது என்ற கடுமையான கட்டுப்பாடு நிலவியது. தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை,

பெருங்கதை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சீவகசிந்தாமணி, சூளாமணி போன்ற நூல்களைப் பயில்வது பயனற்றது எனக்கூறி அவற்றை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கும் போக்கு நிலவியது. வைணவ மடங்களிலும் சைவ சமய நூல்களைப் புறக்கணிக்கும் போக்கு நிலவியது.

இந்த வேண்டாத வெறுப்பின் விளைவாக மடங்களில் இருந்த பழந்தமிழ்ச் சுவடிகள் பல பேணுவாரின்றி அழிந்தன அல்லது அழிக்கப்பட்டன. மடங்களில் வடமொழிக்கு முதன்மை கொடுக்கும் போக்குக் காணப்பட்டது. தமிழ்மொழி தனித்து இயங்க வல்லமைப் படைத்தது அல்ல என்ற கருத்தோட்டமும் பரப்பப்பட்டது.

இத்தகைய சூழலில் வள்ளலார் அவர்கள் தமிழ்க்கொடியை உயர்த்திப் பிடித்தார். வள்ளலாரின் மொழிக் கோட்பாடு என்பது சைவ சமயம் சார்ந்ததாக இருக்கவில்லை. அவரின் கோட்பாடு தமிழ்த் தேசியம் சார்ந்ததாக அமைந்திருந்தது. மொழி சார்ந்த தன்மான உணர்வு மிக்கவராக அவர் திகழ்ந்தார். தமிழைத் தாழ்த்திப் பேசியவர்களின் நடுவில் தமிழின் உயர்தனிச் சிறப்பை உரக்கக் கூவினார். மிகத் தொன்மையான மொழி தமிழ் என்றும், உலக மொழிகள் பலவும் அதிலிருந்து கிளைத்தவை என்றும் கூறினார்.

அவர் காலத்தில் வாழ்ந்த சங்கராச்சாரியார் “சமற்கிருதம் மாத்ருபாஜா” எனக் கூறியபோது “அவ்வாறாகின் தமிழ் “பித்ரு பாஜா” என ஆணித்தரமாகப் பதிலளித்தார். சமற்கிருதம் என்னும் தாய்மொழியிலிருந்துதான் பிறமொழிகள் பிறந்தன என்ற கூற்றை மறுக்கும் வகையிலேதான் தமிழ் தந்தை மொழி என வள்ளலார் பதிலடிக்கொடுத்தார். தந்தையில்லாமல் தாய் பிள்ளை பெற முடியாது தானே?.

## பற்றற்றவரின் தமிழ்ப் பற்று

உலகப் பற்றை துறந்தவரான வள்ளலார் அவர்கள் தமிழ்மொழியின் மீது மட்டும் என்றும் தணியாத பற்றுக்கொண்டிருந்தார். தமிழின் இனிமை குறித்தும் ஆரியம் முதலிய மொழிகளின் இன்னாமைக் குறித்தும் அவர் பின்வருமாறு கூறியது சிந்தையில் இருத்தத் தக்கதாகும்.

ஆரியம் முதலிய மொழிகள் இடம்பத்தை உண்டுபண்ணுவன.
தமிழில் இடம்பம் இல்லை.
ஆரியம் முதலிய மொழிகள் ஆரவாரத்தை உண்டுபண்ணுவன.
தமிழில் ஆரவாரம் இல்லை.
ஆரியம் முதலிய மொழிகள் பிரயாசத்தை உண்டுபண்ணுவன.
தமிழில் பிரயாசை இல்லை.
ஆரியம் முதலிய மொழிகள் பெருமறைப்பை உண்டுபண்ணுவன.
தமிழ் மறைப்பில்லாதது. உள்ளதனை உள்ளபடி உணர்த்துவது.
ஆரியம் முதலிய மொழிகள் போது போக்கை உண்டுபண்ணுவன.

தமிழில் போது போக்குக்கு இடமில்லை.
தமிழ் பயிலுவதற்கு மிகவும் இலேசுடையது.
ஆரியம் முதலியவை பயிலுவதற்கு இலேசுடையனவன்று.
தமிழ் அறிதற்கு மிகவும் இலேசுடையது.
ஆரியம் முதலியவை அறிதற்கு இலேசுடையனவன்று.

தமிழ் பாடுதற்கு மிகவும் இனிமையுடையது.
ஆரியம் முதலியவை பாடுதற்கு இனிமையுடையனவன்று.
தமிழ் துதித்தற்கு மிகவும் இனிமையுடையது.
ஆரியம் முதலியவை துதித்தற்கு இனிமையுடையனவன்று.
தமிழ் சாகாக்கல்வியை இலேசில் அறிவிப்பது,
ஆரியம் முதலியவை சாகாக் கல்வியை அறிவிக்கா.
தமிழ் திருவருள் வலத்தாற் கிடைத்தது.
ஆரியம் முதலியவை திருவருள் வலத்தாற் கிடைத்தனவன்று.

தமிழ்மொழி மீது தன்னுடைய உள்ளம் பற்றுக்கொள்ளச் செய்ததற்காகவும், ஆரிய முதலிய மொழிகளிடம் ஒட்டாது தடுத்ததற்காகவும் இறைவனுக்கு அவர் நன்றி தெரிவிக்கிறார்.

19ஆம் நூற்றாண்டில் புலவர்களுக்கு மட்டுமே உரிமையாக இருந்த தமிழை எளிய மக்களுக்கும் உரிமையாக்கிய பெருமை வள்ளலார் அவர்களையே சாரும். மக்கள் பேசும் மொழியில் தனது பாடல்களை அவர் யாத்தார். தமிழ் உரைநடையின் வளர்ச்சியில் அவருடைய பங்களிப்பு என்பது ஈடுஇணையில்லாததாகும்.

## பாரதியின் முன்னோடி

பாட்டுக்கொரு புலவன் பாரதி எனப் போற்றப்பட்ட சுப்பிரமணிய பாரதியாருக்கு முன்னோடியாகத் திகழ்ந்த பெருமைக்குரியவர் வள்ளலாரே. அவரின் திருவருட்பாவை நன்கு பயின்று அதன் சுவை நயத்தில் இன்புற்றவர் பாரதியார் என்பது அவருடைய பாடல் மூலமே வெளிப்படுகிறது. கோகலே சாமியார் குறித்து பாரதியார் பாடியுள்ள பாடல் இதற்குச் சான்றாகும். அப்பாடலின் தலைப்பில் பாரதி “களக்கமறப் பொதுநடம் நான் கண்டுகொண்ட தருணம்” என்று இராமலிங்க சுவாமிகள் பாடிய பாடலை திரித்துப் பாடியது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதிகாச - புராணச் சொற்பொழிவுகளே பாமர மக்களுக்காக ஆற்றப்பட்டுக்கொண்டிருந்த காலகட்டத்தில் முதன்முதலாக மக்களுக்காக திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் வள்ளலாரே ஆவார். அவர் காலத்திற்கு முன் பெரும் புலவர்கள் அதைக் கேட்கும் தரம் வாய்ந்தவர்களுக்கு மட்டுமே திருக்குறள் பாடம் நடத்தினார்கள். “திருக்குறள் ஒன்றுதான்

தமிழர்களின் அறநெறிகளை எடுத்துணர்த்தும் நூல். அதை ஒவ்வொரு தமிழனும் பயில்வதின் மூலம் அவன் வாழ்க்கை மேலும் செம்மைப் பெறும். எல்லாவகையான மூடநம்பிக்கைகள் சாதி, சமய வேறுபாடுகள், சமுதாயக் கேடுகள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு வாழ்வான்" எனக் கருதிய அவர் குறள் வகுப்புகளை நடத்தச் செய்தார்.

பிற்காலத்தில் தமிழ்ப் பற்றும், தமிழன் என்ற உணர்வும் பரவி ஓங்கும் மறுமலர்ச்சிக்கு வித்திட்டப் பெருமை வள்ளலாருக்கு உண்டு. தங்களைத் தாங்களே உணர்ந்து வளர்ந்தோங்க தமிழர்களுக்கு வழிகாட்டிய பெருமைக்குரியவர் வள்ளலார் அவர்களேயாவார்.

❖ ❖ ❖

# வள்ளலார் - வேதமரபு மறுப்பாளர்

**கொளத்தூர் மணி**

காதைப் பிளக்கும் இசை ஒலிக்க, பெரும் கூட்டத்தோடும், பெரிதும் அழகிய பெண்களோடும் களிநடனம் புரிவோர் சிலர்; காவி உடையோடு கடும் ஓக இருக்கைகளை (யோகாசனம்) செய்த வண்ணம் காட்சியளித்துக் கொண்டு பெருவணிகம் செய்வோர் சிலர்; அமைச்சர் பெருமக்களையும், அரசியல் விளையாட்டுக்காரர்களையும், அளவிலாச் செல்வம் படைத்தோரையும் அருமந்த சீடர்களாகக் கொண்டவர்களாகச் சிலர்; தேர்தல் வெற்றிக்கும் பெரும்பணம் ஈட்டலுக்கும் ஆசி வழங்குவோராகச் சிலர்; இவ்வாறான அவதார புருசர்களைத்தான் நாட்டில் பெரு மதிப்போடு திகழ்வோர்களாக அன்றாடம் கண்டு வருகிறோம். மகரிஷி, சுவாமிகள், ஆதீனங்கள், பகவான்களையும் அவர்களது ஆரவாரமான நடவடிக்கைகளையும் -மலைத்துபோய் நிற்கும் வண்ணம் வழிபாட்டுச் சின்னங்களை நிறுவிக் கொண்டும், மாடமாளிகைகளை வாழ்விடங்களாகக் கட்டிக் கொண்டும், விலையுயர்ந்த தரைஊர்திகள், வானூர்திகள் எனப் பயண ஏற்பாடுகளைக் கொண்டவர்களாகவே அன்றாடம் கண்டு வருகிறோம், அறிந்து வருகிறோம்.

ஆனால், இந்தக் கோளாறுகளுக்கு முற்றிலும் மாறான ஒருவர் வாழ்ந்திருந்தார்; அவர் தன்னை வளர்ப்பது நோக்கம் என்று கருதுகிற இவர்களைப் போல் அல்லாமல் சமூகத்தைப் பற்றிச் சிந்திப்பவராக, மூடநம்பிக்கைகளில் - மூட பக்தியில் இருந்து விடுபட்டவர்களாகவும் பசிப்பிணி அற்றவர்களாகவும் மக்கள் இருக்க வேண்டும் என்ற பெரும் நோக்கம் கொண்டவராக இருந்தார் - இன்றைய புரட்டர்களைப் போல வேதம், புராணம், இதிகாசம் என மக்களை மதிமோசம் செய்யாமல், அவற்றை அம்பலப்படுத்தி மக்களை மீட்டவராக இருந்தார். அவர் தான் வள்ளலார். அவர் வாழ்ந்த காலகட்டம், வாழ்ந்த பகுதி ஆகியவற்றோடு பொருத்தி அவரை மதிப்பிட்டால் அந்த காலகட்டத்தின் அந்த நிலப்பகுதியின் மாமனிதர் அவரே ஆவார்.

துறவு வாழ்க்கைதான்; ஆனால் காவி உடையைத் தவிர்த்து வெள்ளுடையோடு வாழ்ந்தார். அவர் கோவிலை நிறுவிடவில்லை; ஞான சபையை நிறுவினார். அதிலும் விக்கிரகம், உருவம் என எதனையும் நிறுவவுமில்லை; உருவ வழிபாடு ஒழித்து ஒளி வழிபாட்டினை வலியுறுத்தினார்.

அதுவும் "தகரக் கண்ணாடி விளக்கு வைத்தல் வேண்டும். பித்தளை முதலியவற்றாற் செய்த குத்துவிளக்கு வேண்டாம். மேலேற்றுகின்ற குலோப் முதலிய விளக்குகள் வேண்டாம்" என்றார். வழிபாட்டுக்கான விளக்கினை ஏற்றவும்கூட நிரந்தரமாய் ஒருவரை நியமிக்காமல் தகுதியுள்ள 'நம்மவர்கள்' தேகசுத்தி கர்ணசுத்தி உடையவர்களாய் திருவாயிற் புறத்திலிருந்து விளக்கேற்றி, பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர் கையில் கொடுத்தாவது 72 வயதுக்கு மேற்பட்ட பெரியர்க் கையில் கொடுத்தாவது உட்புறத்தில் வைக்கச் சொன்னார். அவர் சத்திரங்களை நிறுவிடவில்லை; தருமசாலையை நிறுவினார். அவர் விரதங்களைப் போதித்துப் பட்டினி கிடக்கச் சொல்லவில்லை; பசிப்பிணி அகற்றப் பணியாற்றினார். மற்ற மத வேடம் போடுவோர் போல ஆடம்பரங்களை விலக்கி....

கையுற வீசி நடப்பதை நாணி
கைகளைக் கட்டியே நடந்தேன்
மெய்யுறக் காட்ட வெருவி வெண்துகிலால்
மெய்யலாம் ஐயகோ மறைத்தேன்

என்று வாழ்ந்தார். தங்களைத் துறவிகளாகக் காட்டிக் கொள்ள மரத்தால் ஆன பாதக்குறடு அணிந்தோர் பலர்; ஆனால் இவரோ ஆற்காடு சோடு என்ற காலணிகளை அணிந்தவராகத்தான் வாழ்ந்தார்.

. 1866 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் இறுக்கம் இரத்தின முதலியார் என்பவர் வள்ளலாரின் சில திருவருட்பாக்களை வெளியிடுகிறபோது, வள்ளலாரின் பெயரை இராமலிங்க சுவாமிகள் என்று குறிப்பிட வேண்டிக் கடிதம் எழுதினார். அதற்கு மறுமொழி எழுதிய வள்ளலார், "இராமலிங்க சுவாமி என்று வழங்கி வைப்பது என் சம்மதம் அன்று; என்னை? ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலில். இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும். ஜீவகாருண்ணியமும் சிவானுபவமும் அன்றி மற்றவைகளை மனதின்கண் மதியாதிருத்தல் வேண்டும்" என்று சிதம்பரம் இராமலிங்கம் என்ற பெயராலேயே தன்னை அறிவித்துக் கொண்டார்; கையொப்பம் இட்டார்.

அவர் பல நிறுவனங்களை நிறுவினார். 1865 ஆம் ஆண்டில் 'சமரச வேத சன்மார்க்க சங்கம்' என்ற ஒரு அமைப்பினையும், 23. 5. 1867இல் 'சமரச வேத தர்மச் சாலை' என்பதையும், 25. 1. 1872ல் 'சத்திய ஞான சபை'யையும் நிறுவினார். ஆனால் அதன் பின்னர் 18.7.1872இல் ஓர் அறிவிப்பினைச் செய்தார்.

"இன்று தொடங்கி சபைக்கு 'சமரச சுத்த சத்திய ஞான சபை' என்றும், சாலைக்கு 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய தர்மச்சாலை' என்றும், சங்கத்திற்கு 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்' என்றும் திருப்பெயர் வழங்குதல்

வேண்டும்” என்று அறிவித்தார்

சன்மார்க்க சங்கத்தின் பெயரிலிருந்து ‘வேத’ என்ற சொல்லை நீக்கிவிட்டு ‘சுத்த’ என்ற சொல்லைச் சேர்க்கிறார். அதற்கான காரணத்தைக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

சமய மார்க்கங்களில் அடிமையாக பாவித்தல், புத்திரனாக பாவித்தல், சினேகிதனைப் போல் பாவித்தல், தன்னைப்போல பாவித்தல் என்று சொல்லப்படும் தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் எனும் சமய மத சன்மார்க்கங்களின் முடிவாக உள்ளது சன்மார்க்கம்.

வேதாந்த, சித்தாந்த, யோகாந்த, கலாந்த, போதாந்த, நாதாந்த என்ற ஆறு (ஜடாந்த) சமரசங்கள் ஆகியவற்றின் முடிவாகிய சன்மார்க்க சமரசம். அவற்றின் உச்சம் சுத்த சமரசம். இவற்றை ஒன்று சேர்த்ததால் வருவது சுத்த சமரச சன்மார்க்கம். இவற்றை கடை தலைப்பூட்டு (பூர்வோத்தர நியாயம்) என்ற இலக்கண வகையால் சமரச சுத்த சன்மார்க்கம் என ஆயிற்று என்று விளக்குகிறார்.

சமரசம் என்பது அனைத்து முடிவுகளின் முடிவைத் தொடக்கமாகக் கொண்ட நிறைவானக் கூட்டு என்று விளக்குகிறார். ‘சுத்த’ என்ற சொல் ஏன் வந்தது என்பதையும் எடுத்துக்காட்டுகளோடு விளக்குகிறார். “விந்து பரவிந்து இரண்டையும் மறுக்க சுத்த விந்து வந்ததைப் போலவும், சிவம் பரமசிவம் இரண்டையும் மறுக்க சுத்தசிவம் வந்தது போலவும், சன்மார்க்கம் சிவ சன்மார்க்கம் இரண்டையும் மறுப்பதே சுத்த சன்மார்க்கம்; தொடக்கத்தில் விளங்கிய சமய சன்மார்க்க, மத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம்” என்கிறார்

ஆக சமயம் மதம், வேதாந்தம் சித்தாந்தம் யோகாந்தம் போதாந்தம் நாதாந்தம் யோகாந்தம் கலாந்தம் ஆகியவற்றின் நிறைவான நிலையே சமரச சுத்த சன்மார்க்கம் என தனது உபதேசக் குறிப்புகளில் விளக்குகிறார் வள்ளலார். சுருக்கமாக ‘மத சமயங்களையும், வேதாந்தம் சித்தாந்தம்’ என்ற கருத்துகளையும் மறுத்து எழுந்ததுதான் சமரச சுத்த சன்மார்க்கம் என்பதை உறுதியாக நிறுவுகிறார் வள்ளலார்.

வள்ளலாரின் இறுதிக் காலகட்டத்தில் 22. 10. 1873 அன்று (அவர் மறைந்தது 30.1.1874) காலை 8 மணிக்கு சித்தி வளாகத்தில் அவர் ஆற்றிய உரை ‘பேருபதேசம்’ என்ற பெயரால் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அவர் கூறுவதையும் பார்ப்போம்.

“நாமும் முன் பார்த்தும் கேட்டும் லட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லட்சியம் வைக்க வேண்டாம். ஏனென்றால் அவைகளில் ஒன்றிலாவது குழூஉக் குறி யன்றி

தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும், கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல் மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். அணு மாத்திரமேனும் தெரிவிக்காமல், பிண்ட லட்சணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில்: கைலாசபதி என்றும், வைகுண்டபதி என்றும், சத்தியலோகாதிபதி என்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம் முதலிவையும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பது போல் அமைத்து, உண்மையாக இருப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். "தெய்வத்துக்கு கை கால் முதலியன இருக்குமா?" என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மையாக இருப்பவதாகவே முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையை அறியாது, அப்படியே கண்ணை மூடிக்கொண்டு உளறி இருக்கிறார்கள். ஆனால், ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. இதுவரைக்கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை. அவைகளில் ஏகதேச கர்மசித்திகளை கற்பனைகளாக சொல்லி இருக்கிறார்கள்..........................

....சமயம் தவிர மதங்களில் உள்ள வேதாந்தி, சித்தாந்தி, என்று பெயரிட்டுக் கொண்ட பெரியவர்களும் உண்மை அறியாது, சமயவாதிகள் போலவே ஒன்று கிடக்க ஒன்றை உளறுகிறார்கள்". ....................... ........................... என்று கூறியவர் நகைகள் அணிவதைப் பற்றி,

"இப்படியே "காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வர விடுத்தவர் (கடவுள்), ஆணுக்குக் கடுக்கனிடுதலும், பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும் தமக்கு சம்மதமானால் காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல்களிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா?' என்று விசாரித்துத் தெரிந்து கொள்கின்ற பட்சத்தில், காதில் கடுக்கனிடவும், மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா? - என்ற கேள்விகளை எழுப்புகிறார் வள்ளலார். இவற்றைப் படித்துணர்ந்தாலே வள்ளலாரின் கருத்து என்னவாக இருந்தது என்பதை நம்மால் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும்.

மேற்கூறியவாறு 'பேருபதேசம்' என்ற உரையில் அவர் குறிப்பிட்டதைப் போலவே 'விண்ணப்பங்கள்' என்ற தலைப்பில் சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம் / பெரு விண்ணப்பம் என்ற இரண்டு விண்ணப்பங்களை எழுதி வைத்துள்ளார்

அவற்றில் 'சிறு விண்ணப்பம்' என்பதன் நிறைவுப் பகுதியில் "எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம்

முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனதில் பற்றாதவண்ணம் அருள் செய்ய வேண்டும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருள வேண்டும்" என மத, சமய, வருணாசிரம ஆசாரங்கள் மக்களுக்கு எவ்வளவு கேடு விளைவிப்பவை என்றுணர்ந்து எச்சரிக்கை செய்கிறார்.

இவை மட்டுமின்றி 'பெரு விண்ணப்பத்'தில் வள்ளலார் தனது நாட்டுப் பற்றையும், மொழி பற்றையும் ஒருவாறாக பதிவு செய்திருக்கிறார்.

"சுத்த சன்மார்க்க இலட்சிய சத்திய ஞானக் கடவுளே! ஜீவர்களாற் கணித்தறியப்படாத பெரிய உலகின் கண்ணே, பேராசை, பெருங்கோபம், பெருமதம், பெருலோபம், பேரழுக்காறு, பேரகங்காரம், பெருவயிரம், பெருமடம், பெருமயக்கம் முதலிய பெருங்குற்றங்களே பெரும்பாலும் விளைவதற் குரிமையாகிய மற்றைய யிடங்களில் பிறப்பியாமல், குணங்களே பெரும்பாலும் விளைதற்குரிய இவ்விடத்தே உறுப்பிற் குறைவு படாத உயர்பிறப்பாகிய இம்மனிதப் பிறப்பில் என்னைப் பிறப்பித்தருளிய தேவரீரது பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!" என்று கூறி தமிழ் நாட்டில் தன்னைப் பிறப்பித்தற்காக நன்றி கூறிக் கொள்ளுகிறார்.

அதுபோலவே மொழி குறித்துக் கூறுகையில், " இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரயாசத்தையும், பெரும் மறைப்பையும், போது போக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரிய முதலிய பாஜைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசு உடையதாய்ப், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமை உடையதாய், சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி ஒன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென் மொழிகளாற் பல்வகை தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்!" என்று தமிழ் மொழியின் மீது தனக்குப் பற்று ஏற்படச் செய்ததற்காகத் தன் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறார்.

மற்றொரு வாய்ப்பில் "தமிழ்" எனும் சொல்லுக்கு இட்ட உரை' எனும் உரையின் செய்தியும் வள்ளலாருக்கு இருந்த தமிழ் மொழி மீதான பற்றினை வெளிப்படுத்துவதாக உள்ளது. மொழிப் பற்று என்பது தனது மொழி என்ற காரணம் மட்டுமின்றி அதன் எளிமை, இனிமை, சிறப்பு எழுத்துகள் போன்ற காரணங்களாலும் அமைந்தது என்பதையும் இரண்டு இடங்களிலும் எடுத்துரைக்கிறார். அந்த பகுதியே இதுவாகும்.

"ஆரியம், மகாராட்டிரம், ஆந்திரம் என்ற பற்பல பாஷைகளை போலாகாமல், பெரும்பாலும் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாயும், ஒலி

இலேசாயும், கூட்டென்னுஞ் சந்தி அதிசுலபமாயும், எழுதவும், கவி செய்யவும் மிக நேர்மையாயும், அட்சர ஆரவாரம், சொல் ஆடம்பரம் முதலிய பெண்மை அலங்காரமின்றி எப்பாஷையின் சந்தசுகளையும் தன் பாஷையுள் அடக்கி ஆளுகையால் ஆண் தன்மையைப் பொருந்தியதுமான தன்பாஷைக்கே அமைவுற்ற ழ்,ற்,ன் என்னும் முடி நடு அடி சிறப்பியல் அக்கரங்களில் முடிநிலை இன்பானுபவ சுத்த மோனாதீதத்தைச் சுட்டறச் சுட்டும் இயற்கை உண்மைத் தனி தலைமை பெருமைச் சிறப்பியல் ஒலியாம்.

இதன் கருத்து யாதெனில் தமிழ்ப் பாஷையே அதிசுலபமாகச் சுத்த சிவானுபூதியை கொடுக்கும் என்பதாம்." -

"தமிழ்" என்னும் சொல்லுக்கு இட்ட உரை' - ( இக்கட்டுரை வள்ளலார் சென்னையில் வாழ்ந்த காலத்தில் - 1858க்கு முன்னர் - சங்கராச்சரியாருடன் அளவளாவ நேரிட்டபோது அவர் சமஸ்கிருதமே "மாத்ரு பாஷை" எனக் கூறி சமஸ்கிருதத்தைச் சிறப்பித்துக் கூறியபோது, வள்ளலார் அப்படியாயின் "தமிழ் பித்ரு பாஷை" என்று மறுமொழி கூறியதாக ஒரு செய்தி உண்டு. அதன் தொடர்ச்சியாக வள்ளலார் ஆற்றிய உரையாக இது கருதப்படுகிறது.)

மேற்குறிப்பிடப்பட்ட 'பெரு விண்ணப்பத்'தில், மேலும் "அச்சிறு பருவத்திற்றானே 'ஜாதி ஆசாரம், ஆசிரம ஆசாரம் என்னும் பொய்யுலக ஆசாரத்தைப் பொய்யென்று அறிவித்து அவைகளை அனுட்டியாமல் தடை செய்வித்து, அப்பருவம் ஏறுந்தோறும் ஏறுந்தோறும் எனதறிவை விளக்கஞ் செய்து செய்து என்னை மேனிலையில் ஏற்றி ஏற்றி நிலைக்க வைத்தருளினீர்!" என்று குறிப்பிட்டுள்ளார். தனது அருட்பா பாடல்களிலும்,

சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
  சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
  அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே!

நால்வருணம் ஆச்சிரம ஆசாரம் முதலாம்
  நவின்ற கலை சரிதம் எல்லாம் பிள்ளை விளையாட்டே
.........................................................................
வேதநெறி ஆகமத்தின் நெறி பவுராணங்கள்
  விளம்புநெறி இதிகாசம் விதித்த நெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உள அனைத்தும் காட்டி
  உள்ளதனை உள்ளபடி உணர உரைத்தனையே
கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும்
  கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக ...

போன்ற செய்திகள் விரவிக் கிடக்கின்றன.

தனது 'பேருபதேசத்'திலும் "சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும், லட்சியம் வைக்க வேண்டாம். அவற்றில் தெய்வத்தைப் பற்றி குழூஉக் குறியாக குறிக்கின்றதேயன்றிப் புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுமேயானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லட்சியம் வைக்க வேண்டாம். ஏனெனில், அவைகளிலும் அவ்வச் சமய மதங்களிலும் அற்பப் பிரயோஜனம் பெற்றுக் கொள்ளக் கூடுமே யல்லது ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கை யுண்மை என்னும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக் கொள்கின்றதற்கு முடியாது. ஏனெனில் நமக்கு காலமில்லை. மேலும் இவைகளுக்கெல்லாம் சாட்சி நானே இருக்கின்றேன். நான் முதலில் சைவ சமயத்தில் லட்சியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது. அது பட்டணத்து சுவாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலருக்கும் தெரியும். அந்த லட்சியம் இப்போது எப்படி போய்விட்டது பார்த்தீர்களா! அப்படி லட்சியம் வைத்ததற்கு சாட்சி வேறே வேண்டியது இல்லை. நான் சொல்லியிருக்கிற திருவருட்பாவில் அடங்கி இருக்கிற ஸ்தோத்திரங்களே போதும். அந்த ஸ்தோத்திரங்களையும் மற்றவருடைய ஸ்தோத்திரங்களையும் சபைக்குக் கொண்டு வந்தால் அவைகளே சாட்சி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போது இருந்ததென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் சொற்ப அறிவாக இருந்தது."

இவ்வாறு வள்ளலாரின் சைவம் பற்றிய சிந்தனைகளிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் கண்ட, யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் போன்ற பிறப்பாலும், பின்பற்றுகிற சமயத்தாலும் சைவர்கள் என்று கூறப்படுபவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வள்ளலாரின் பாடல்களை 'அருட்பா' என்று சொல்லாகாது; அவை 'போலி அருட்பா' 'மருட்பா' என மறுத்தெழுதவும், நீதிமன்றத்துக்கே சென்று வழக்காடவும் செய்தது; ஏன், வள்ளலாரின் மனைவியைப் பற்றியும் எடுத்தெழுதவே கூசும் சொற்களால் எழுதவைத்தது. "கணக்கன் இராமலிங்கம் பிள்ளையை வள்ளலார் என்றும், அவர் பாடல்களை அருட்பா என்றும் ஒப்புவதா?" "இராமலிங்கம் பிள்ளை தம்முடைய சாதி கீழாய் இருத்தல் கொண்டே சாதி, குலம், சமயம், மதம் ஆகியவற்றை மறுக்கிறார்" என்றெல்லாம் மன நிலை பிறழ்ந்தவனுக்கு கள் ஊற்றியதைப் போல உளற வைத்தது.

இவை போல தனது அருட்பாவிலும், கட்டுரைகளிலும், உரைகளிலும் மதங்களை, வேதங்களை, வருணத்தை, ஆசிரமத்தை, சாதியை, கண்மூடி வழக்கங்களை எல்லாவற்றையும் அம்பலப்படுத்தி எழுதிய பாடல்கள் ஏராளம் ஏராளம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் இவ்வாறாக வேதங்களை, வேத மரபுகளை, வருணாசிரமப் பிரிவினையை, மூடநம்பிக்கைகளை அழித்தொழித்து ஒரு

சமத்துவ அறிவார்ந்த சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்று முதன் முதலில் போதித்தவர் புத்தரே ஆவார், அப்படிப்பட்ட புத்தர் மறைவுக்குப் பின்னால் நடந்த மாற்றங்களை, திரிபுகளை நாம் அறிந்திருக்கிறோம். குறிப்பாக புத்தர் மரணத்துக்கு 8 ஆண்டுகளுக்கு முன் சதவானி மலைக்குகைக்கு முன்னால் கூடிய பேரவை, பல புதிய கருத்துக்களை முன்வைத்து திருத்தங்களை செய்து கொண்டது. ஆனால் அதன் பின்னர் பார்ப்பனர்கள் புத்த சங்கத்துக்குள் நுழையத் தொடங்கி விட்டார்கள்.

புத்தர் முடிவெய்தி நூறாண்டுகளுக்குப் பின்னர் வைசாலியில் இரண்டாம் பௌத்தப் பேரவை கூடியது. அதில் தங்கம் வெள்ளி போன்றவற்றைத் தானமாக பெறக் கூடாது என்று பிக்குகளுக்கு விதிக்கப்பட்டிருந்த விதிகளில், தானமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்ற ஒரு திருத்தத்தைப் பார்ப்பனப் பிக்குக்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். ஆனால் அப்பேரவைக்கு தலைமை தாங்கிய ரேவதர் எனும் பிக்கு அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பார்ப்பனப் பிக்குகள் 'வஜ்ஷியத் துறவிகள்' என்ற பெயரால் தனியாக இயங்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

தொடர்ச்சியாக 400 ஆண்டுகளில் பௌத்தம் ஏறத்தாழ 100 பிரிவுகளாகப் பிரிந்து விட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஆனால் 18 பிரிவுகளைப் பற்றித்தான் குறிப்புகள் இருப்பதாகவும் கூறுகிறார்கள். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் ஆந்திரத்திலிருந்து நாகார்சூனா என்ற பார்ப்பனப் புத்த பிக்கு முன்னணிக்கு வந்து 'மகாயானம்' என்ற ஒரு பிரிவினை உருவாக்கினார். அதில் 'மாயா வாதம்' என்ற ஒரு தத்துவத்தை முன்வைத்தார். அதனைத் தேவி சட்டோபாத்தியாய என்ற ஆய்வாளர், புத்தரின் 'பொருளிய நாத்திகத்'திற்கு முற்றிலும் எதிரான தத்துவமாக எடுத்துரைக்கிறார். ஆனால் அந்த மகாயானப் பிரிவுதான் மற்ற புத்த மதப் பிரிவுகளை உள்வாங்கி பெரும் மதமாக எழுந்தது. அதற்குப் பின்னால் புத்தர் கடவுளாக்கப்பட்டதும், புத்த பிக்குகள் சொகுசு மாடிகளில் ஆடம்பரமாக வாழவும் பல்சுவை உணவுகளை உண்பவர்களாகவும் மாறிப்போனார்கள். அது சமயம் இந்தியா வந்த சீனப் பயணி பாஹியான் எழுதிய பயணக் குறிப்பில் ஒரு செய்தியைக் கூறுகிறார். பாடலிபுத்திரத்திலிருந்த அரசர், புத்த பிக்குகளைச் சந்தித்தால் அவர்களுடைய கைகளைத் தொட்டு தன் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வது வழக்கம். பவுத்தச் சங்கத்திலிருந்த பார்ப்பனப் புத்த பிக்குகள் அவ்வாறு கைகளைத் தொட்டு வணங்கிய அரசர் சென்ற பின்னால், தலை முதல் கால் வரை முழுமையாகக் குளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்று பதிவு செய்துள்ளார் பாஹியான்.

அவைபோன்ற திரிபுகள், வள்ளலார் காலத்திலேயே சன்மார்க்க சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட ஆடூர் சபாபதி குருக்கள் என்பவரால் பிற்காலத்தில் செய்யப்பட்டது.

வள்ளலாரை ஆடூர் சபாபதி குருக்கள் சந்தித்தது 1869 ஆம் ஆண்டு மார்ச் ஏப்ரல் மாதத்தில் இருக்கலாம் என்று பதிவுகள் கூறுகின்றன. அவர் வள்ளலாரைச் சந்தித்தபோது "தனக்கு ஜாதி சமய முதலான பேதங்கள் இல்லை" என்று கூறி, தான் பிரதி தினமும் சபையிலிருந்த பெட்டிக்குத் தீபாராதனை செய்வதாய் விண்ணப்பித்துக் கொண்டார்; அப்படி இருந்தால் செய்யலாம் என்று வள்ளலார் அனுமதித்துள்ளார். அதுமுதல் அவர் தன் ஆசாரங்களை விட்டு, பூணூல் முதலியதை நிவர்த்தி செய்து, பிறகு தினமும் சாயந்திரம் பார்வதிபுரத்திலிருந்து வள்ளலார் இருப்பிடம் ஆகிய மேட்டுக்குப்பத்திற்குப் போய் தீபாராதனை செய்துவிட்டு உடனே தன் இருப்பிடத்திற்குப் போய்விடுவார் என்று தான் பதிவுகள் கூறுகின்றன.

வள்ளலார் இறுதியாக ஓர் அறையில் போய்த் திருக்காப்பிட்டுக் கொள்ளும் தருணத்தில் வேட்டவலம் ஜமீன்தார் அப்பாசாமி பண்டாரியார் தன் ஜமீனுக்கு போயிருந்தபடியால் ஜமீன்தார் இன்னும் வரவில்லையா? என்று வினவி இருக்கிறார்கள். அதைக் கேட்டிருந்த குருக்கள் உடனே ஜமீனுக்குப் போய் வள்ளலார் சொல்லாத சில கற்பனையான வார்த்தைகளை அவருக்குச் சொல்லி வீண் தொந்தரவைக் கொடுத்து ஜமீன்தாரை அழைத்துக் கொண்டு வந்துள்ளார். அதை வள்ளலார் அறிந்து அவரை நோக்கி 'நூலெனிலோ கோல் சாயும்' என்ற வாக்கியத்தைச் சொல்லி "பிராமணர்கள் தவிர மற்ற இதர ஜாதியாருக்கு இந்தத் துணிவு வராது" என்றார்களாம். இவருடைய சகவாசத்தினால் மேற்படி ஜமீன்தாருக்கு கேடுகள் நேரிடலாம் என எண்ணி இவரை உடனே ஊருக்கு போய் விடும்படி கட்டளையிட்டார்கள். சொற்களைக் கேட்டு நாணமுற்ற அவர் வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொள்ளும் வரையில் வெளியூர்களில் போய் சஞ்சாரம் செய்து கொண்டு இருந்து திருப்பூட்டு இட்டுக்கொண்ட மூன்றாம் நாள் சாலைக்கு வந்து சேர்ந்துள்ளார்.

அவ்வாறு சாலைக்கு வந்து சேர்ந்து 15 நாட்களுக்குள் வள்ளலாருடைய உத்தரவின் படி சில ஏழைகளைக் கைவிடாமல் காப்பாற்றிக் கொண்டிருந்த காரியஸ்தர் உடைய மனதையும் கெடுத்து, அதுவரை பாதுகாத்துக் கொண்டிருந்த ஏழைகளை முற்றும் கைவிடச் செய்து ஜமீன்தாருக்கு காரியஸ்தராக இருந்த கனகசபைப் பிள்ளை என்பவர் மூலமாக ஜமீன்தாரை தன் வசப்படுத்திக் கொண்டிருக்கிறார் குருக்கள்.

ஜமீன்தாரிடம் "நீங்கள் சமரச சன்மார்க்க மரபில் விழுந்து பாவியாய் விட்டீர்கள் என்று உங்களுடைய இனத்தார் நீக்கி வைத்திருக்கிறார்கள் அவர்களை எல்லாம் சரி செய்கிறேன்" என்று சொல்லி அந்த ஜமீனிலிருந்த ஓர் ஆலயத்திற்கு கும்பாபிஷேகம் செய்யத் தந்திரமாக அவரைத் தூண்டி, விரோதப்பட்டிருந்த அவருடைய உறவினர்களான குருக்கள்மாரை வரவழைத்து அந்த ஜமீன்தாரை வேண்டிய செலவுகள் செய்வித்து அந்த குருக்கள்மார்களுக்கு வேண்டிய பொருள் உதவியும் செய்வித்தார்.

மேலும் அந்த ஜமீன்தாருக்கு குழந்தை இல்லாமல் இருந்ததால், நவக்கிரக சாந்தி செய்தித்தால் சந்ததி உண்டாகும் என்று ஆசை காட்டி, ஜமீன்தார்வழியாகப் பணம் பெற்று வசப்படுத்த வேண்டிய குருக்கள்மாரை எல்லாம் வரவழைத்து அவர்களுக்கு வேண்டிய பொருள் உதவி செய்வித்துள்ளார். இப்படி பல தந்திரத்தால் தன்னை நீக்கி வைத்திருந்த குருமார்களை எல்லாம் வசப்படுத்தி ஜமீன்தாரால் வேண்டிய பொருள் உதவி பெற்று இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குப் போய் தான் சன்மார்க்கத்தில் நின்ற தோஷத்தை நிவர்த்தி செய்து கொண்டு வந்து, தன்னால் பலன் பெற்ற குருக்கள்மாரை வரவழைத்து அவர்கள் வழியாக 'சிவாச்சாரியார்' என்ற பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். தர்ம சாலையில் இருந்தவரை சபாபதி குருக்களாக இருந்தவர் வள்ளலார் மறைவுக்குப் பின்னர் சபாபதி சிவாச்சாரியார் ஆகிவிட்டார்.

வள்ளலார் அவர்களாலேயே "இன்று தொடக்கம் சபையை சமரச சுத்த சன்மார்க்க சத்ய ஞான சபை என்று வழங்க வேண்டும்" என்று கூறிய கட்டளைக்கு விரோதமாக 'ஞானந்தவல்லி ஆனந்த நடராஜர் வீற்றிருக்கும் சபை' என்று அடியோடு பெயரை மாற்றி அறிவித்துள்ளார். வள்ளலார் வழிகாட்டலுக்கு எதிராக அறைக்குள்ளே நிலை கண்ணாடியை நாட்டி அதற்குள் ஒர் அகண்டத்தை வைத்து, பித்தளை முதலியவற்றால் செய்த குத்து விளக்குகளாலும், மேலே ஏற்றுகின்ற குளோப்புகளாலும் அலங்காரம் செய்து திரையைத் தூக்கி இதுவரையில் யாரும் பாராத அற்புதமான தீபத்தைக் காட்ட ஆரம்பித்தார். அதோடு மட்டுமில்லாமல் அந்த ஒளி விளக்கைக் காட்டும்போது ஒரு பக்கம் 'பரிசுத்தமான' பிராமண கும்பல்கள் வேத கோஷம்; மற்றொரு பக்கம் தோத்திர கும்பல்களின் பெரும் கூச்சல்; ஒரு பக்கம் சுடலும் மத்தள ஓசை; ஒரு பக்கம் மணிகளின் ஓசை; ஒரு பக்கம் பிரம்ம தாளத்தின் ஓசை; ஒரு பக்கம் நகர் ஓசை; ஒரு பக்கம் கண்டாமணியின் ஓசை; ஒரு பக்கம் நாதஸ்வரத்தின் ஓசை; ஒரு பக்கம் பிடில் ஓசை; இந்த ஓசைகளால் பூமி அதிர்ச்சி கண்டு சபைக்குள் தூங்குகிற ஆண்டவரும் விழித்துக் கொள்வார் என்பதைப் போல நேர் விரோதமான செயல்களில் ஈடுபட ஆரம்பித்தார் என்று பதிவிட்டுள்ளார்கள் வள்ளலாரின் மெய்யன்பர்கள்.

தன் வீட்டின் முன் ஒரு பிள்ளையார் கோயில் கட்டி, காசியில் இருந்து கேட்ட வரத்தை தரும்படியான ஒரு பிள்ளையாரை வரவழைப்பதாகச் சொல்லி அதை மேற்படி கோவிலில் வைத்து கும்பாபிஷேகம் செய்து, பிரதி தினமும் மணியாட்டி பூஜை நைவேத்தியம் ஆகியவற்றையும் செய்து கொள்ளத் தொடங்கியுள்ளர். இதுவும் வள்ளலார் கொள்கைகளுக்கு விரோதமே. மேலும் சாலை நிலங்களுக்கு அருகாமையில் ஒரு பெருமாள் கோயிலும் கட்டி இருக்கிறார். இது மட்டும் இன்றி தைப்பூச காலத்தில் ஆலயங்களில் திருவிழா காட்சி நடத்துவது போல் மூன்று தினத்திற்கு முந்தியே துஜாவாரணக் கொடியை

நாட்டி, பிராமணக் கும்பல்களை சேர்த்துக்கொண்டு ஒரு கலசத்தை நாட்டி, அதை மந்திர ஆவாஹனத்தால் உயிர்ப்பிப்பதாக மேற்படி பிராமணக் கும்பலால் வேத கோஷம் செய்து வள்ளலார் கொள்கை விரோதச் செயல்களிலும் ஈடுபடத் தொடங்கியுள்ளார். அவற்றோடு சபையில் ஓம குண்டத்தை வளர்த்து பிள்ளை இல்லாதவர்களுக்குப் பிள்ளை வரம் கொடுக்கவும் பேய் ஓட்டவும் ஆரம்பித்துள்ளார்.

வள்ளலார் தன் கனவில் வந்து சொன்னதாகச் சொல்லி சபையில் நடராஜர் சிலை வைக்கவும், கணபதிக்கும் சுப்பிரமணியருக்கும் பெருமாளுக்கும் கோயில் கட்டவும் செய்துள்ளார். ஜாதி சமய முதலான பேதங்கள் தனக்கில்லை என்று பூணூல் முதலானதும் அறுத்து விட்ட இவர் பழையபடி பூணூல், சிவாச்சாரியார் பட்டம் என்று வேடமிட்டுக்கொண்டு சபையில் சொர்ண வில்வமாலை சாத்தி, நடேசரை வைத்து, ஞானானந்தவல்லி அம்மையை நடேசருக்குக் கல்யாணம் செய்வித்து, கணபதியையும் சுப்பிரமணியரையும் பெருமாளையும் நிறுவியும் உள்ளார்

தான் வெளியிட்ட ஒரு விளம்பரத்தில் ‘ஞானானந்த வள்ளி சமேத ஆனந்த நடராஜப் பெருமானும் தனிப்பெரும் கருணாநாயகி சமேத அருட்பெருஞ் ஜோதீஸ்வரரும் வெள்ளியம்பல நாதர் பொன்னம்பலநாதரும் எழுந்தருளியிருக்கும் தேவஸ்தானம் ஆகிய ‘சத்திய ஞான சபை’ என்று விளம்பரமும் செய்யத் தொடங்கியுள்ளார்.

வேட்டவலம் ஜமீன்தார் இறந்த பின்னால் அவருடைய தம்பியைக் கொண்டு நிலங்கள் சொத்துக்கள் அனைத்தையும் தன் தலைமையில் டிரஸ்ட் ஒன்று உருவாக்கி எழுதி வாங்கிக் கொண்டும் விட்டார்.

சாதி மத பேதங்களை மறுத்த தர்ம சாலையில் “பிராமணர், சைவ வேளாளர் முதலானவர்கள் வந்தால் சுயபாகம் (தாங்களே சமையல்) செய்து உணவருந்துவதற்கு வசதி தேவை” என ஒரு தனிக் கட்டடம் கட்டுவிக்க வேண்டும் என்றும் அறிவித்துள்ளார்.

சில பத்தாண்டுகளுக்குப் பின்னால் வள்ளலார் வழியினர் மீண்டும் ஓரளவு எல்லா நிறுவனங்களையும் சபைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். அந்த சபாபதி சிவாச்சாரியாருக்குப் பின்னால் அவர் மகனும் மருமகனும் அர்ச்சகர்களாக வந்ததோடு, அவர்கள் காலத்திற்குப் பின்னால் அவருடைய மகனுக்குக் குழந்தை இல்லாததால் மருமகன் பிள்ளைகள் அர்ச்சகராகினர். இப்போது சில ஆண்டுகளுக்கு முன்னால் 2006,2007ஆம் ஆண்டுகளில் விக்கிரக வழிபாட்டைத் தொடருவேன் என்று சொன்ன அவருடைய கொள்ளுப்பேரன் ஸ்ரீ சபாபதி ஒளி சிவாச்சாரியார் செயல்பாடுகளும் வள்ளலார் வழிவந்தோராலும், சமூக அக்கறை கொண்டோராலும், இயக்கங்களாலும், அறநிலையத் துறை, உயர்நீதிமன்றம் போன்றவற்றின் துணையோடும்

முறியடிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், அந்த சபாபதி குருக்கள் செய்த குழப்பங்களால் உள் நுழைந்து விட்ட சமரச சுத்த சன்மார்க்க நெறிகளுக்கு எதிரான சிலவற்றை இன்றளவும் முற்றுமுழுதாக துடைத்தழிக்க முடியாமல் திணறிக் கொண்டிருப்பதாகத்தான் நடப்புகள் இருந்து வருகின்றன.

எந்த ஒரு புரட்சிகர சிந்தனை கொண்ட சிந்தனையாளர்களும் புது நெறியை ஆக்கித் தந்தாலும் காலப்போக்கில் நிறுவனமயமாகி,சிலர் ஆதிக்கத்தில் சிக்குண்டு, உருவாக்கிய சிந்தனையாளரின் சிந்தனைகளுக்கு எதிராகச் செயல்படத் தொடங்கிவிடுவது பல மதங்களில் நிகழ்வதைப் போலத்தான், புரட்சிகர ஆன்மீக சிந்தனையாளரான வடலூர் வள்ளலார் அவர்கள் உருவாக்கிய இந்தச் சன்மார்க்க நெறியிலும் நிகழ்ந்துவிட்டது பேரவலம்தான்.

சொத்துகளைக் கையகப்படுத்தத் துடிக்கும் மதவாதிகளும், வள்ளலார் வேடம் புனைந்து உள்நுழைய எத்தனிக்கிறார்கள். இந்த பிற்போக்குக் கசடுகளை நீக்குவதற்கு உண்மையான வள்ளலார் வழிவந்தவர்கள் இன்றளவும் பெரு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அவர்களுக்குத் துணை நிற்க வேண்டியது வேத மரபு மறுப்பு சிந்தனை கொண்ட அனைவருக்கும் உள்ள கடமையாகும்.

வள்ளலாரின் நெறி பற்றி ஒழுகுவதற்குத் துணை நிற்போம்! அந்த மாமனிதரின் சிந்தனைகள் ஆன்மீக நம்பிக்கை உள்ளோரிடமும் வளர்வதற்குத் துணை நிற்போம்! தமிழ் மரபுகளுக்கு எதிராக நுழையத் துடித்துக் கொண்டிருக்கிற வேத, வர்ணாசிரம மதவாத இயக்கங்கள், கட்சிகள் துடிதுடித்துக் கொண்டிருக்கிற இந்த வேளையில் நாம் அனைவரும் இதுகுறித்து மேலும் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டிய தேவையும் எப்போதையும்விட இப்போது எழுந்துள்ளது.

❖ ❖ ❖

# வடலூரும் ஈரோடும்

பொதிகைச்சித்தர்

## பெரியாருக்கு முன்னோடி வள்ளலாரே!

சுயமரியாதை இயக்கத்திற்கு வள்ளலாரே முன்னோடி என்பது பெரியாரிய ஆய்வாளர், திருவிக போலும் சன்மார்க்கிகளின் கருத்துமாகும் எனும் ஆவணவாக்க ஆய்வாளர் ப.சரவணன் இவ்விரு தரப்பு கருத்து ஊடாட்டங்களின் துணைக்கொண்டு திராவிட இயக்க வேர்களைச் சன்மார்க்க இயக்கத்துக்குள் தேடியோரில் குறிப்பிடத்தக்கவர் யூஷின் இர்ஷிக். அந்த ஆய்வையவர் முடித்தாரா என அறிந்து கொள்ள முயன்றும் அது பயனளிக்கவில்லை என்கின்றார் . இத்தொடர்பில் பலர் தரப்புகளையும் தொகுத்து முன்வைத்தவாறே தம்தரப்பை முன்னெடுக்கின்றார்.

## 'சுயமரியாதை இயக்க'ப் பெற்றோர் திருவிக பேச்சிலும், எழுத்திலும் இருந்து..

'சுயமரியாதை இயக்கத்திற்கு நாயக்கர் அவர்கள் தந்தையாவார். நான் தாயாவேன். நாங்கள் இருவரும் மாயவரம் சன்மார்க்கக் கூட்டத்தில் சேர்ந்து பெற்ற பிள்ளையே சுயமரியாதையாகும். அக்குழந்தை தாயுடன் வாழாது இதுகாறும் தந்தையுடன் சேர்ந்து வாழ்கிறது. அதன் வளர்ச்சியைக் கண்டு யான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.' (26 /11/ 1933 -.இல் ஈரோட்டில் கோவை மாவட்ட மாநாட்டுப் பேச்சு - 'தமிழர் தலைவர்' - சாமி சிதம்பரனார் நூலில்)

'நாயக்கர் சுயமரியாதை என்பது எனது சன்மார்க்க இயக்கத்தினின்று பிறந்ததுதான். அதற்கும் இதற்கும் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு ஒற்றுமை; பத்து பங்கு வேற்றுமை. வேற்றுமை எங்களுக்குள் போர் மூட்டியது.' - திருவிக 'வாழ்க்கைக் குறிப்புகள்'நூலின் முதல்பகுதியில்..

## குணா நோக்கிலும்..

'பெரியாரின் நாத்திக வழித் திராவிடர் இயக்கம் வள்ளலாரின் பார்வையையே தம்மில் உள்ளடக்கி இருக்கிறது. திராவிட இயக்க வரலாற்றில் வள்ளலார் தவிர்க்க முடியாத சக்தி. அண்மைக்காலத் தமிழகத்திலான அறிவு வரலாற்றில் வள்ளலார் ஓர் எல்லைக்கல்லாகும். அவரை அடுத்து எழுந்த தந்தை பெரியாரின் சமய எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு இயக்கங்கள் யாவும் வள்ளலார் துவக்கிவைத்த கருத்தோட்டத்தின் ஒரு புதிய நிலையேயாகும்' - குணா ('தமிழர் மெய்யியல்')

**'சைவ மெய்யன்பர்களே!**
**நீங்களும் சிந்தித்துத் தெளிவடைய முடிகிறதா என்று பாருங்கள்!'**

'சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே,
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே,
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்த லைந்து வீணேநீர் அழிதல் அழகல்லவே'

என்றும் உங்கள் மனநிலைக்கு இரங்குபவர் யார் தெரியுமா? இவ்வாறு கூறுகின்றவர் சுயமரியாதைக் கவிஞரல்ல. ஆஸ்திகராகிய உங்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவரான 'வடலூர் இராமலிங்க சுவாமிகள்' ஆவார். இவர் இவ்வாறு எழுதிவைத்திருக்கும் நூலைத் 'திருவருட்பா' எனச் செப்பிமாலையைச் சுற்றி மண்டியிட்டு வணங்குகிறீர்கள். இக்கருத்தை எடுத்துக் கூறுகின்றவர்களை மருளர் என்றுஞ் செப்பி மண் கல்லை வாரி எறிந்து மல்லுக்கு நிற்க வருகின்றீர்கள். இப்பொழுது என்ன கூறுவீர்கள்?

- ஈ.வெ.ராமசாமி

**'ஏன் தம்பி இவ்வளவு வடநாட்டுப்பற்று?'**

'சுயமரியாதைக்காரர்களைக் குறை கூறும் ஆஸ்திகர்களே! உங்களின் உண்மையான நிலை என்ன? என்பதை நீங்களே சிந்தித்து முடிவுகட்டுங்கள்.

சைவ மெய்யன்பர்களே! நீங்களும் சிந்தியுங்கள். சிந்தித்துத் தெளிவடைய முடிகிறதா எனப் பாருங்கள்!'

- ஈ.வெ.ராமசாமி

சுயமரியாதை இயக்கத்தார் கூறும் கருத்துக்களைக் கண்டு கோபமடையும் வைதிகர்களே!

ஆஸ்திகரான இராமலிங்க அடிகளே இதே கருத்தைக் கூறியிருக்கிறாரே இதற்கு உங்களது பதில் என்ன என்பதே பெரியாரின் கேள்வியாக இருந்தது.

மேலும் வடநாட்டு அருளாளர்களைப் போற்றுகின்ற தமிழனுக்கு நம் நாட்டு அருளாளர்களைப் பற்றிய அக்கறை இல்லாததைக் கண்டும் பெரியார் வருந்துகிறார். தமிழனின் தன்மானத்தைத் தூண்டும் வகையில் பெரியாரின் பேச்சு அமைகிறது. அங்கும் வள்ளலாரே அவருக்கு உதாரணத்திற்கு வருகிறார். 'ஏன் தம்பி இவ்வளவு வடநாட்டுப்பற்று?' என்னுந் தலைப்பில் 'குடி அரசு' (8 / 05 / 1948) இதழில் அவர் இவ்வாறு எழுதுகிறார்.

'இராமகிருஷ்ணரைப் போற்றும் அன்பனே! சிந்தித்துப் பார்.உன் இராமலிங்கம் எந்த விதத்தில் அவரை விடத் தாழ்ந்தவர்? அவரை எந்த வடநாட்டானாவது போற்றக் கண்டோமா?'

பெரியாரின் இப்படிப்பட்ட கேள்விகளே பல கவிஞர்களுக்குப்

பாடுபொருளாக அமைந்தது என்பர் எனத் தொடரும் ப.சரவணன் 1935 - .இல் 'குடி அரசு'ப் பதிப்பக மூன்றாவது வெளியீடாகச் சாமி.சிதம்பரனார் அருட்பா ஆறாந்திருமுறையில் இருந்து நூறு பாடல்களடங்கிய தொகுப்பைச் சந்தாதாரர்களுக்குச் சலுகை விலையில் வழங்கியதையும் அந்நூல் குறித்துக் குடி அரசு இதழில் அவ்வப்போது விளம்பரமும் செய்து பரவலாக்கினார் என்பதையும் எடுத்துரைத்து அவ்விடயம் சன்மார்க்க, திராவிட இயக்க வரலாறு இரண்டிலுமே பதிவு செய்யப்பட வேண்டியதென வலியுறுத்துவார்.

பெரியார், பாரதிதாசன் இருவரின் குடும்பத்தாருமே சன்மார்க்கத் தொடர்பினராக இருந்த வரலாற்றையும்; பின்னாளில் குடி அரசு மேலாளராகப் பணியாற்றிய காங்கிரஸ்காரராக இருந்த கோவை அய்யாமுத்து தாம் சுயமரியாதை இயக்கத்திற்கு வந்தமைக்கு இராமலிங்கரே காரணகர்த்தா என்றமையையும்; பெரியார் தொண்டர் பலர் வள்ளலாரின் சன்மார்க்க நெறியைப் போற்றியதையும் தொகுத்துப் பதிகின்றார்.

இராமலிங்கர், பெரியார், பாரதிதாசன் மூவரையும் பொறுத்தவரையில் தம் அருட்பாவின் முதலைந்து திருமுறை வரை சைவசமயத்தையே சார்ந்தொழுகிய இராமலிங்கம் ஆறாந்திருமுறையில் 'சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியில் உணர்த்திய 'அருட்பெருஞ் சோதி' என அவற்றை மறுதலித்து சோதி வழிபாட்டு நெறியெனும் மாற்று வழிபாட்டு நெறியை முன்னெடுத்தார்.

ஆத்திகராக இருந்தே பின்னர் வேத, இறை மறுப்பு, வடபுல, பார்ப்பன எதிர்ப்பு ஆகியவற்றைச் சுயமரியாதை, திராவிட இயக்கமாக முன்னெடுக்கலானார் பெரியார். 'ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது' பாடிநின்ற சுப்புரத்தினமே - பின்னர் பகுத்தறிவியக்கக் கவிஞராகப் பாரதிதாசன் ஆனார். பெருந்தேசியராக நின்றவரே திராவிடத் தேசியர் ஆகவும், தமிழ்த்தேசியர் ஆகவும் மாறி உருவெடுத்தார். தம் குருநாதராகப் பாரதியையும்; இராமானுசரையும், குமரகுருபரரையும் விதந்தோதிப் பாராட்டினார்; பக்தி இலக்கியத்தையும் இலக்கியக் கொடையாக ஏற்றார் என அவரவர்க்கான காலகதி மடைமாற்றங்களைக் கணக்கிலிருத்தி மனங்கொண்டே அவரவர் பங்களிப்பை உரிய அரசியற் புரிதலுடன் மதிப்பிடத் தலைப்படவேண்டும்.

ஆவணவாக்க ஆய்வாளர் ப.சரவணன் ஆய்வுப்பணிப் பங்களிப்பு, வரிப்புணர்வைப் போற்றும் அதே மூச்சில் அவருடைய மெய்காண்முறை, அரசியல் நிலைப்பாடுகள் ஆகியவற்றையும் மனங்கொண்டே அவற்றையும் அவரையும் மதிப்பிடல் வேண்டும்.சரவணன் தரப்புகள் குறித்த மேலதிகப்புரிதல்களுக்குஇப்பதிவின் தலைப்பிலான கட்டுரையையும் ('புதிய பார்வை' - சன. 1-15, 2006); அவரது 'வாழையடி வாழையென' நூலையும் வாசிக்கவும்.

## வடக்கர் இடக்குகளும் இருட்டடிப்புகளும்

‘ஆண் பெண்கள் இருவரிடமும், இரு தன்மையான குணங்களும் உண்டென்று கூறுகின்றார். இதனால் இருபாலாரும் சமத்துவமுடன் வாழத் தகுதியுடையவர்கள் என்பதே வள்ளலார் உள்ளம் ஆகையால்,

'பாடகக்கால் மடந்தையரும் மைந்தரும் சன்மார்க்கப்
பயன்பெற நல்லருள் அளித்த பரம் பரனே'

- என்று புகல்கின்றார்.

'கைம்மையைத் தவிர்த்து மங்கலம் அளித்த கருணையே' இது வடலூரார் வாக்கு. 'கைம்மையாவதை அதாவது விதவையாவதை ஒழித்து, மங்கலத்தைக் கொடுத்த இரக்கமே' என்று கூறுகிறார். 'கணவன் இறந்தபின் பெண்களுக்குத் தாலி வாங்கக் கூடாது' என்று குறிப்பிடுகிறார். 'விதவைக்கோலம் செய்வதையே தடுக்கிறார் வள்ளலார்' எனச் சாமி. சிதம்பரனார் கூறுகிறார்

காலஞ்சென்ற பெரியார்களான இராசாராம் மோகன்ராய், ஜி. சுப்பிரமணிய அய்யர், வீரேசலிங்கம் பந்துலு, ஈஸ்வர சந்திர வித்தியாசாகரர், லாலா கங்காராம், மகாதேவ கோவிந்த ரானடே ஆகியவர்கள் தமது சீர்திருத்தக் கருத்துக்களால் வரலாற்றுப் புகழ்பெற்றுவிட்டனர். இந்திய வரலாற்றில் இவர்கள் பெயர் அழுத்தமாகப் பதிக்கப் பெற்றுவிட்டது.

ஏறக்குறைய இவர்கள் காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர்தான் வடலூர் வள்ளலார். இவரும் கைம்பெண் மறுமணத்தை ஆதரித்துள்ளார். ஆனால், சீர்திருத்தவாதிகள் இவர் பெயரைக் குறிப்பிடுவதில்லை. காரணம் வள்ளலாரின் கருத்துக்களைச் சீர்திருத்தவாதிகள் அறியாதிருப்பதுதான்.‘ - பழ.நெடுமாறன் ('வள்ளலார் மூட்டிய புரட்சி')

பழ. நெடுமாறனார் குறிப்பிடுவது போல நாமவர்களை அறிந்திருப்பது போல நம்மவர்களை அவர்கள் அறியமாட்டாமலிருப்பது அவர்களின் அறியொணாமை மட்டுந்தானா என்ன? அதற்கும் அப்பாலாக இருட்டடிப்பின் அரசியலும் இருக்கத்தானே செய்கின்றது?

‘காலனியக்காலம் குறிப்பாக 19- ஆம் நூற்றாண்டு குறித்து இதுவரை செய்யப்பட்டுள்ள ஆய்வுகளில் கல்கத்தாச் சூழலே மையப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு நடைபெற்ற அளவிற்குப் பிற இடங்களில் சமூகசீர்திருத்த இயக்கங்கள் நடைபெறவில்லை என்பதாகவே இதுவரை எழுதப்பட்டவரலாறு அமைகிறது. இத்தன்மை தமிழகத்தில் செயல்பட்ட வள்ளலார் எனும் இராமலிங்கம் அவர்களின் செயல்பாடுகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் செயல்பட்ட ஒன்றாகும்.‘

- வீ. அரசு

'வடநாட்டைச் சேர்ந்த தியாகிகளை அவர்கள் என்றும் நிராதரவாகக் கைவிட்டதில்லை. நாம் வேற்றுமை மனப்பான்மை ஒரு சிறிதுமின்றித் தமிழகத்தில் நந்தவனங்களுக்கும், தெருக்களுக்கும், வீதிகளுக்கும் வடநாட்டுத் தலைவர்களின் பெயர்களைச் சூட்டி வந்திருக்கிறோம் ஆனால் இதே மாதிரி தமிழகத் தியாகிகள் விசயத்தில் வடநாட்டார் நியாய உணர்ச்சியோடு நடந்து கொள்ளவில்லை. தேசபக்தர் ஸ்ரீசுப்பிரமணிய சிவா, கப்பலோட்டிய தமிழன் வஉசி, மகாகவி பாரதியார் ஆகியோர்களின் பெயர்களைக்கூட அங்கெல்லாம் காணமுடிவதில்லை.' - சோமாஸ் ('வளையாத தமிழன் வஉசி')

## உண்மையான தமிழ்த்தேசியத்தின் ஊற்றுக்கண்கள்:

'தமிழ்த்தேசியத்தைத் திருமூலர், வள்ளலார், பாரதி என்று பக்தி மார்க்கத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கத் துடிக்கிறார்கள்(குணா, பெ.மணியரசன்) இந்த பக்தி மார்க்கத் தமிழ்ப்பற்றும், அதன் மூலமாக வளர்த்தெடுக்க நினைக்கும் தமிழ்த்தேசிய உணர்வும் மீண்டும் தமிழினத்தைப் பின்னுக்குத் தள்ளவே பயன்படும். இது ஒருவிதமான மபொசியியத்தின் மறுபதிப்பு, மலிவுப் பதிப்பாகவே இருப்பதால் தான் இதனை மறுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது எனக்கு.' - திருமாவேலன் ('இவர் தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர்?':1)

திருமாவேலன் சொல்லுமாப்போலே அவ்விருவரும் மபொசியியத்தின் மறுபதிப்புகளே. இக்கூற்றில் திருமூலர் சைவத்தேசியர், பாரதி இந்தியப் பெருமத, பெருந்தேசியர். ஆனால் வள்ளலாரே மெய்யாலுமே தமிழ்த்தேசிய முன்னோடி என எடுத்துரைப்பதே 'உண்மையான தமிழ்த்தேசியத்தின் ஊற்றுக்கண்கள்' என்னும் இப்பதிவாகும்.

## கால்டுவெல்லையும் சுந்தரனாரையும் முன்வைத்து....

'19-ஆம் நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளராக மதிக்கப்பெற்ற பேராயர் கால்டுவெல், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை ஆகியோர் மீது வன்மையான தாக்குதலைத் தொடுத்தார் பேரா. க. கைலாசபதி. கால்டுவெல் தன்னுடைய கண்டுபிடிப்புகளினூடே, தீமை விளைவிக்கத்தக்க கருத்துகளையும் உடன் கலந்து ஊட்டிவிட்டார்' எனக் குற்றஞ்சாட்டும் கைலாசபதி, அவற்றில் ஒன்று பார்ப்பனர்பால் காழ்ப்புணர்வு என்றும் கூறுகிறார். ஆரியர் திராவிடர் பூசலுக்குத் 'தத்துவார்த்த விளக்கம் கூற உதவியவரே கால்டுவெல்' என்று அழுத்தந்திருத்தமாகக் குற்றஞ்சாட்டும் அவர் சுந்தரனாரையும் விட்டு வைக்கவில்லை.

'தமிழகத்தில் பாரதி தேசியத்தின் முரசொலி என்றால் சுந்தரம்பிள்ளை பிரதேசவாதத்தின் பிதாமகன்' என்று சொல்லி முடிக்கிறார்'- தொ. பரமசிவன் ('தமிழாராய்ச்சியின் வளர்ச்சி')

'மனோன்மணியம் என்ற நூல் எவ்வாறு நிஜமல்லாத திராவிடத்தின் நாட்டுப்பண் ஆனது என்பது சுவாரஸ்யமான ஆராய்ச்சிக்குரியது. மனோன்மணியம் சுந்தரனாரின் சைவசித்தாந்தக் கருத்துருவத்தின் நீட்சியே 'நீராருங் கடலுடுத்த' என்று தொடங்கும் பாடலும்.' 'மொத்தத்தில் இன்றைய தமிழ்மக்களின் அரசியலும் வாழ்க்கைமுறையும் கால்டுவெல் மற்றும் அவர் கோட்பாட்டை அங்கீகரித்த சுந்தரம்பிள்ளை போன்றோரின் காலனிய மனோபாவத்தில் உதித்தவையா என்ற கேள்வியும் முக்கியமானது தான்'- தமிழவன் ('தீராநதி' அக். 2019).

தமிழவன் தலைமேற்கொண்டாடி நிற்கும் மா. அரங்கநாதன் தரப்பே இதற்குப் போதுமான மறுப்பாகும்.

'தில்லை நடராசனின் ஊழிக்கூத்து, இட்லி என்ற பலகாரம் -இவை பற்றிக் கூட ஆங்கிலத்தில்தான் முதலில் கட்டுரைகள் எழுதப்பட்டன. இட்லியும் தில்லை நடராசனும் ஆங்கிலேயர் சமாச்சாரங்களா?' உள்ளது. சிறத்தலை அறவே உணரொணாமால் புறவெளித்தாக்கமாகவே நோக்கத் தலைப்படலும் தமிழவனின் காலனிய மனப்போக்கு வெளிப்பாடே.

கைலாசபதி தொடக்கமாய்ப் பொதுவுடைமையர்; 'பிராமண எதிர்ப்பில்லாமல் பார்த்துக்கொள்ளும்' தமிழவன், மா.அரங்கநாதன் ஆகியோரின் 'குமரி மாவட்ட மனோபாவ'த் தரப்பிலிருந்தும் (பின்னர் சுட்டப்படும்) எழுப்பப்படும் இத்தகு திராவிட இயக்க ஒவ்வாமை நோக்கிலான குற்றச்சாட்டுக்கள் வரலாற்றுச் சுருக்கவாதமான மிகை எளிமைப்படுத்தப் பட்டனவே. திராவிடம் காலனியக்கொடை எனில் ஆரியமாயையும் இந்துமாயையும் காலனியக் கொடையல்லாமல் மற்றென்னவாம்?

சுந்தரனாரின் 'நீராருங் கடலுடுத்த பாடலை'யே, 'இந்தியாவிலேயே தேசியக்குரல் எழுவதற்கு முன் அவர் எழுப்பிய தமிழ்த்தேசியக்குரல் இது. அதில் தமிழ்த்தேசியத்தின் பழங்கால வரலாறும், அவர் வருங்கால முன்னறிவும், நம் வருங்கால ஆக்கமும் செறிந்து பொதிந்துள்ளன' - என்பார் பழ.நெடுமாறன் ('வள்ளலார் மூட்டிய புரட்சி')

- இவ்வாறு கால்டுவெல்லின் முடிவைச் சுந்தரனார் கவிதைவடிவில் தெரிவித்தார் என்பாரவர்

1856 இல் கால்டுவெல் ஒப்பிலக்கணம் வெளியானது. 1816 இலேயே பிரான்சிஸ் ஒயிட் எல்லீஸ் திராவிட மொழிகள்குறித்து முன்வைக்கவில்லையா?

'தமிழரின் தன்மான உணர்வைத் தூண்டிவிட்ட சிறப்பு பரஞ்சோதியாருக்கு உரியதாகும்'

'கி.பி. 7-ஆம் நூற்றாண்டளவில் அரும்பிய திராவிட இனஉணர்வு 19 ஆம் நூற்றாண்டில் போதாகும் நிலைக்கு வந்துவிட்டது. கால்டுவெல்,

இராமலிங்க அடிகளார், பேரா. சுந்தரம் பிள்ளை ஆகியோரின் தொண்டினால் தமிழின் தனிச்சிறப்பு உலகின் கருத்தினைச் சென்ற நூற்றாண்டில் கவர்ந்தது.' - சே. இராசேந்திரன் ('தமிழ்க்கவிதையில் திராவிட இயக்கத்தின் தாக்கம்')

## வள்ளலார் குறித்த பல்வேறு தரப்புகளை ஒத்துறழ்ந்தே காண்போம்

'பொற்புறவே இவ்வுலகில் பொருந்து சித்தன் ஆனேன்'
'சித்தனும் ஆனேன் என்று உந்தீபற'

- சி. இராமலிங்கம்

இந்த அருட்பா x மருட்பா விவாதத்தரப்புகள் என்பன, பட்டிமன்ற விவகாரங்களல்ல. தமிழ் அடையாளத் தேடலின் இருவேறு செல்நெறிகளை இனங்காண்பதற்கான தரவாதார ஆவணப்பதிவுகளே.

இவ்வழக்கு இரண்டு கட்டங்களாக நடந்தது. அருட்பா அணியில் மறைமலையடிகள், செய்குத்தம்பிப் பாவலர் ஆகியோரும் மருட்பா அணியில் உவேசா, நா. கதிரைவேற்பிள்ளை, திருவிக ஆகியோரும் இடம் பெற்றனர்.

நாவலர் பார்வையில் அருட்பா ஆகமச்சைவநெறிக்குப் புறம்பானது.உவேசாபார்வையில் வேதநெறிக்குப் புறம்பானது. நஞ்சும் பாலும் கலந்தாற் போன்றது. அ.மார்க்ஸ் பார்வையிலோ 'இந்து-சைவ எல்லைக்குள் நிற்பதே!'

'எவ்வுயிர்க்கும் அன்புசெய்தல் பசிப்பிணி அகற்றல் ஆகியவற்றை வலியுறுத்திய வள்ளல்இராமலிங்கரும் இந்து - சைவ எல்லைக்குள் நின்றவர்தான். திருமூலர், பட்டினத்தார், தாயுமானவர் என்கிற வரிசையிலேயே அவர் வருகிறார்.'-அ. மார்க்ஸ் அண்மையில் அவருடைய 5/10/2022 'மதங்கடந்த ஆன்மிகம்' பதிவிலவர் நிலைப்பாடுகள் மாறியுள்ளன.

'உவேசா தன்னுடைய பதிப்புநூல்களில் ஒரே ஒரு மேற்கோள் தவிர வேறெங்கிலும் திருவருட்பாவை மேற்கோளாகக் காட்டவில்லை'

-ஜெ. அரங்கராஜன். (புதிய ஆராய்ச்சி நவ-2009)

'வள்ளலாரைச் சித்தர்மரபில் இணைப்பது ஆபத்தானது. நவீன காலனிய மரபில் உருவான கருத்து நிலைகளுக்கும், பாரம்பரியக் கருத்துநிலைகளுக்கும் இடைப்பட்ட முரண்பாட்டில் அலைந்து உழன்று வாழ்ந்தவர் அவர்.'

- வீ. அரசு ('பக்தி-அனுபவம்- அரசியல்')

'இந்துமதத்திற்குள் நின்று சீர்திருத்தம் பேசுவது சாத்தியம் இல்லை என்கிற அம்சத்தில் தெளிவான அரசியல் புரிதல்களை முன்வைத்தது பெரியார் ஈ.வெ.ரா.வும் அண்ணல் அம்பேத்கரும் மட்டுமே'-

அ. மார்க்ஸ் ('புதிய காற்று' மார்ச் 2004)

இது அரசியல் தளத்தில் சரியானதே. ஆனால் இவ்விருவர்க்கும் முன்பாகவே ஆதியிலே சித்தாந்த சைவராகத்தம் ஐந்துதிருமுறைகளிலே பேசிநின்ற போதிலும் ; ஆறாந்திருமுறையில் அவற்றை மறுதலித்து மதஎல்லை கடந்துநின்ற மாற்றுமரபின் முன்னோடியாகவும், சுயமரியாதை இயக்கத்தின் முன்னோடியாகவுந் திகழ்ந்தவர் இராமலிங்கமே என்பதெலாம் அரசுவும் அ.மார்க்ஸ்ஸூம் காணத் தவறிய பக்கங்களே.

'வள்ளலார் அருளியது மாற்றுநிலை. எதிர்ப்பு எதிர்ப்பினை வளர்க்கும்; மாற்று ஒருநாள் இல்லை என்றாலும் ஒருநாள் ஒருசிந்தனையை ஊக்கும்; உயர்வை அளிக்கும்.'-- இராம. இருசுப்பிள்ளை ('வள்ளலார் வாழ்வும் வாக்கும்)

## இருபதாம் நூற்றாண்டுச் சரக்கன்று; சில நூற்றாண்டுகள் முன்பாகவும் காணக்கிடக்கும் குறுவித்துக்கள்!

ஒரு நீணெடும் தமிழறப் பாரம்பரியத்தின் பிரதிவயமாக்கம் ஆகவும், குறளறத்தின் கூர்தலறமாகவும் பெரியாரியலையும்; பெரியாரியத்தின் குறுவித்துக்களையும் இனங்காணும் பதிவுகளைக் காண்போம்:

'பெரியாரின் வெற்றிக்கு ஒரு நீண்ட. பிராமணஎதிர்ப்புப் பாரம்பரியம் தமிழ்மொழிக்குள் இருந்தது காரணமாகும். 'பிறப்பொக்கும்எல்லா உயிர்க்கும்' என்றவரி ஒருநீண்ட பாரம்பரியத்தின் பிரதிவயமாக்கமாகும்' -தமிழவன் ('தமிழுணர்வின் வரைபடம்').

'வள்ளுவர் விதைத்த இவ்விதை கபிலரகவலாக, பதினெண் சித்தர் பாட்டு மரபாக, வள்ளலராக வளர்ந்து பின் பெரியாரியலாகச் செழித்துள்ளது' -க. நெடுஞ்செழியன் ('தமிழர் இயங்கியல் தொல்காப்பியமும் சாரக சாம்கிதையும்')

'சமயங்கள்,அவற்றுக்கு இடையிலான இணக்கங்கள் குறித்த பெரியாரியப் பார்வை 20 ஆம் நூற்றாண்டுச் சரக்கன்று .அதன் குறுவித்துக்களை வரலாற்றில் சில நூற்றாண்டுகள் பின்சென்று கூட நம்மால் காணமுடியும். 13 ஆம் நூற்றாண்டில் பிறந்த தமிழ்ச்சித்த மரபானது வேதம் வேதமொழி, சாதிஅமைப்பு,பார்ப்பனர், கோயில் ஆகிய கருத்தியல் நிறுவனங்களையும், உலகியல் நிறுவனங்களையும் மறுத்தது. ஆனால் கடவுளை மறுக்கவில்லை':- தொ. பரமசிவன் ('தெய்வம் என்பதோர்)

## இராமலிங்கரின் தத்துவத்தில் மட்டுமே....

சைவ அடையாளத்தில் தடையீடாகவும், தமிழடையாளத்தில் மடைமாற்ற மாகவும் இராமலிங்கர் நிகழ்த்திய மாற்றங்கள் பற்றிய பதிவுகளைக் காண்போம்:

'உடனடி வாழ்வின் அப்பட்ட உண்மையாகிய பசி அவரது தத்துவப் பார்வையை நிர்ணயித்தது. சைவசமய நிறுவனம் அவர் கவனத்திற்குள் வரவேயில்லை. அப்படி வந்த போதிலும் அது அவரால் விமர்சிக்கவேப் பட்டது'

‘இராமலிங்கர் எந்தவகையிலும் சைவ அடையாளத்தை உருவாக்குபவராக. இங்கு காட்சியளிக்கவில்லை. அந்த அடையாளத்தை உடைப்பவராகக் காட்சி அளிக்கிறார். இராமலிங்கரது தத்துவம் தமிழடையாளத்திற்கு ஓர் அடித்தளச் சார்பினை வழங்குகிறது‘

‘நாவலர் மேலிருந்து தொடங்கி அடித்தளமக்களை அந்நியப்படுத்திச் சைவத்தை ஆகமச் சைவமாகக் குறுக்கிக் கொள்ள, வள்ளலார் அதனை விரித்துச் செல்கிறார் தமிழடையாள உருவாக்கத்தில் ஒரு மடைமாற்றத்தை உருவாக்குகிறார்‘.

- ந. முத்துமோகன் ('தமிழினி' சனவரி 2010)

‘கடவுளின் ஆலயங்கள் மானுட தேகங்கள்(உடல்கள்) என்ற கருத்து நமது தத்துவங்களில் ஏற்கெனவே உள்ளது. ஆயின் பசியினால் அந்த ஆலயங்கள் பாழாகும் என்பதை நம்மவர்கள் பார்க்காமல் போய்விட்டார்கள்! இராமலிங்கர் அதனைக் கண்டிருக்கிறார்.‘

‘இராமலிங்கர் உடல்பற்றிப் பேச முன்வந்தமைக்குப் பழைய யோகிகளும் சித்தர்களும் தூண்டுதலாக இருந்திருக்கலாம். ஆனால் இராமலிங்கர் உடலின் அடிப்படை நிலையாகப் பசியைப் பற்றிப் பேசினார். பசியால் உடல் வாடும் போது உயிரும் தான் வாடும் என்ற ஞானம் இராமலிங்கருக்கு மட்டுமே கிடைத்தது. பசி என்பது பர(ஆன்மீக) ஒழுக்கத்தின் பிரச்சினையாகக் கொள்ளப் பட்டது இராமலிங்கரின் தத்துவத்தில் மட்டுமே. அது ஒரு தத்துவ விவாதத்தின் உட்பொருளாகக் கொள்ளப்பட்டது இராமலிங்கரில் மட்டுமே. இராமலிங்கரின் பசி பற்றிய பேச்சு தத்துவத்தின் வரையறையையே, தத்துவத் தேடல்களின் நோக்கையே மாற்றி அமைக்கிறது. இது ஓர் அதிசயம்.

'(1) உடுப்பதற்கு வஸ்திரமில்லாமலும் (2) இருப்பதற்கு இடமில்லாமலும் (3) உழுவதற்கு நிலமில்லாமலும் (4) பொருந்துவதற்கு மனைவியில்லாமலும் (5) விரும்பிய படி செய்வதற்குப் பொருள் முதலிய வேறு வேறு கருவிகள் இல்லாமலும் துன்பப்படுகின்ற ஜீவர்களிடத்தில் ஜீவகாருண்யம் காட்டவேண்டும்‘ - என இராமலிங்கம் எழுதினார். தமிழில் 'உழுபவனுக்கு நிலம்' என்ற சொற்களை முதலில் உச்சரித்தவர் வள்ளலாரே என்று தோழர் நல்லக்கண்ணு ஒருமுறை (1987 - இல்) என்னிடம் சொன்னார்‘

- ந. முத்துமோகன் ('இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும்')

இவ்வாறாகத் தமிழடையயாள உருவாக்கத்தில் ஏற்படுத்திய மடைமாற்றங்கள் குறித்த முத்துமோகன் தரப்புகள் இத்தொடர்பில் புதுவெளிச்சம் பாய்ச்சும் புதுப்புதுத் திறப்புகளே எனிலது மிகையாகாது.

## ராஜ் கௌதமனாரின் ஊமைக்குசும்பும், நீலம்பாரித்த 'விலகல்வாதத் தலித்திய' வன்மக் காழ்ப்பரசியலும்:

'மொத்தத்தில் சீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்று அடித்துக் கூறுகிறார் (இராமலிங்கம்). 19 - ஆம் நூற்றாண்டின் நிலவுடைமை மற்றும் சமயப் பண்பாட்டிற்குள்ளிருந்த ஒருவர் இதைவிடவும் புரட்சிகரமான வழிபாட்டை முன்வைக்க முடியுமா என்பது தெரியவில்லை.

ஆத்திகப்புரட்சி மனிதப் புறத்திலுள்ள முரண்பாட்டை மறைத்து விடுகிறது. அதைவிட நாத்திகப் புரட்சி மனித அகத்தின் இயக்கத்தைச் சடத்தன்மை கொண்டதாக ஆக்கிவிடுகிறது! இரண்டிலுமே கோளாறு உண்டு. இரண்டையும் கணக்கில் கொண்டு தாண்டிச் செல்ல வேண்டிய அவசியம் வந்துவிட்டது

தமிழகத்தைப் பொறுத்தவரைப் பெரியாரையும் இராமலிங்கரையும் சேர்த்தே பார்க்க வேண்டியது அவசியம்; அதே சமயம் இருவரையும் கடந்து செல்வதும் அவசியம்.அப்படிக் கடந்து செல்கிற போது கார்ல்மார்க்ஸ்ம் அம்பேத்கரும் நமக்காகக் காத்திருப்பதைக் காணவியலும்'- ராஜ் கௌதமன் ('கண்மூடி வழக்கம் எலாம் மண்மூடிப் போக' - பக்:135)

இங்கான சூழலில் இவ்வாறு பெரியாரையும் இராமலிங்கரையும் ஒருசேரப் பார்த்தும் கடக்கவும் வேண்டும் என வலியுறுத்தும் ராஜ் கௌதமன் 'எதிர்ப்பக்கம் இருப்பவற்றில் புனிதம், உயர்ந்தவை என்று சொல்லப்படுபவற்றைக் கட்டுடைப்பது என்பது எவ்வளவு முக்கியமோ - அதேபோல் அந்தப்பக்கத்தில் தலித்துகளுக்குச் சாதகமாக எவை இருக்கின்றனவோ அவற்றைச் சரியாக இனம்கண்டு அவற்றை முன்வைப்பதும் முக்கியமானதுதான். நான் அதைத்தான் செய்திருக்கிறேன். புதுமைப்பித்தனோ வள்ளலாரோ உங்களுடையவர்கள் அல்ல. அவர்கள் தலித்துகளுக்குச் சார்பாகச் செயல்பட்டவர்கள்தான். அவர்கள் எங்களுடையவர்கள்தான் என்று நிறுவி எங்கள் பக்கம் கொண்டுவருவதுதான் நோக்கம்.

- ராஜ் கௌதமன் (' ராஜ்கௌதமன் கட்டுரைகள்' - 2021 )

என வாங்கு தம் முந்தைய தரப்புக்களை மடைமாற்றிப் புதுமைப்பித்தனையும் இராமலிங்கத்தோடு இணைத்தே தலித்தாக அரவணைக்கத் தயங்காப் புத்தவதாரமான ராஜ் கௌதமனார்தாம் எப்போதுமே ஒரே ஒரு விடயத்தில் -அவர்களோடு தாம் உரையாட விரும்புவதால் பார்ப்பனர் என்னாமல் பிராமணர் எனவே பாவிப்பதில் -மட்டும் படு எச்சரிக்கை உணர்வுடன் தமிழவனைப் போலவே பார்ப்பன எதிர்ப்பு நேராமல் பார்த்துக் கொள்கின்றார்.

இன்னும் ஒருபடி மேலே எகிறித் தமக்கு மாறாகப் பார்ப்பன இன மொழி ஆதிக்க எதிர்ப்புத் தெறிப்பாகும் இடங்களிலும் குறுக்குச்சாலோட்டி அப்படி

ஏதும் இல்லை அதெல்லாம் திராவிடலீலை அல்லால் மற்றேதுமில்லை என அவாளைக் குளுப்பாட்டியே - தமக்கான 'யதாஸ்தானம் ததாஸ்து' என்றதனைத் தக்கவைத்துக் கொள்வதிலேயே குறியாக இருக்கிறார். அத்தகு தருணங்களில் அவர்மொழியே அவருக்கு இரண்டகம் இழைத்து நமக்கவரைக் காட்டியே கொடுத்துத் தொலைத்து விடுகின்றதே!:

'..இறுதிக்கட்டத்தில் இராமலிங்கர் தமது சுத்த சன்மார்க்கம் தவிர அனைத்தையும் அடியோடு நிராகரிக்கும் தீவிர நிலைபாடெடுத்தார்.'

'இராமலிங்கர் இவ்வாறு சாதி, குலம்,வருணம், ஆசிரமம், வேதம், சாத்திரம் ஆகியவற்றை முற்றிலும் பொய் என்று மறுத்ததை வைத்துக் கொண்டு அவர் பிராமணரைச் சாடியதாக ஒரு பிரிவினர் குதூகலித்து வரவேற்றார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் சமஸ்கிருதத்தைவிடத் தமிழ்மொழி இறை அனுபவத்தை வெளியிட உகந்தது என்றும், மற்றொரு சந்தர்ப்பத்தில் சம்ஸ்கிருதம்தான் எல்லா மொழிகட்கும் தாய்மொழி எனில் தமிழ்மொழி தந்தை மொழி என்றும் இராமலிங்கர் வெளியிட்ட கருத்துக்களைக் கொண்டு -அவரை வடமொழி எதிர்ப்பாளராகவும், பிராமண மறுப்பாளராகவும் அரசியல் பண்ணினார்கள். ஆனால் இராமலிங்கர் இந்த அரசியலுக்குள் சிக்கிக் கொள்ளாதவர். சமஸ்கிருத சுலோகங்கள் பல இயற்றியுள்ளார். அதனை மதித்துப் போற்றினார். அவரது பாடல்களிலும், வசனத்திலும் சமஸ்கிருதக் கலப்பு கொஞ்சம் அதிகம்தான். அவர் வாழ்ந்த காலம், சமஸ்கிருதத்தையும் எதிர்த்து அரசியல் தோன்றாத காலம்.' எனத் தொடர்கின்றார். 'வடமொழியின் மீது எந்த எதிர்ப்பும் வெறுப்பும் அப்போது இருக்கவேண்டிய அவசியமும் இல்லை வைதிக எதிர்ப்பு இருந்தது' என்னும் மா.அரங்கநாதன் சப்பைக்கட்டும் இத்தகையதே.

மெய்யாலுமே இங்கரசியல் பண்ணுவது ராஜ் கௌதமன் அரங்கநாதன் வகையறாதானே? இவை யாவுமே முற்றிலும் உண்மைக்குப் புறம்பான திரிபுரைகளே. மாறாக இவை யாவும் அவாளுக்கு அவர்கள் நம்பகமான நல்லூழியரே எனக் காட்டிக்கொள்ள வேண்டியே ஊடே புக்கு ஓட்டிய குறுக்குச் சால்களே? இக்கூற்றில் இராமலிங்கர் பாடல்களில் கொஞ்சமாகவும் வசன நடையில் மேலதிகமாகவும் சங்கதக்கலப்பான 'மணிப்ரவாள'நடை என்பது மட்டுமே உண்மை. பாரதியைப் பொறுத்தவரையிலுங்கூட இப்படித்தான். மாற்றுத் தரப்புகளைக் காண்போம்:

## வள்ளலாரின் மொழிக்கோட்பாடு - தமிழ்த்தேசியம் - மொழியியலாய்வு விதந்தோதல்:

வள்ளலாருக்கும் சங்கராச்சாரியார், கோடகநல்லூர் சுந்தரசாமி மூவர்க்கும் இடையிலான உரையாடல்களுக்கு ஊடாகவும், திருவருட்பா உரைநடைப்பகுதி முதலியவற்றாலும் ஆரியம், தென்மொழி குறித்த அவர் கணிப்பீடுகளையும்;

வடமொழி பயில்வதில் இருந்த சிக்கல்கள், அதன் உரைகோள் முறைமைகள் பற்றி எல்லாம் உணரக்கிடக்கின்றன.

உலகமொழிக்கு எல்லாம் சமஸ்கிருதமே 'மாத்ரு பாஜா' ( தாய்மொழி ) என்ற சங்கராச்சாரியார்க்கு மறுமொழியாக எனில் தமிழே 'பித்ரு பாஜா' ( தந்தை மொழி ) என்றறைந்தார். வாதாடித் தோற்ற கோடகநல்லூராரும் திருந்திப் பின்னர் இராமலிங்கர் நண்பர் ஆயினாரென எடுத்துரைப்பார் ப. சரவணன் ('சாளரம்' இலக்கியமலர்: 2008)

## பெண்மை ஆகுலமின்றி, அடக்கி ஆளுகையால் ஆண்தன்மை பொருந்தியதுமான தென்மொழி..'

'அசஜர ஆரவாரம், சொல்லடாம்பரம், பொழுது போக்கு, பெருமறைப்பு முதலிய பெண்மை ஆரவாரமின்றி, எப் பாஷையின் சந்தசு (மந்திரங்)களையும் தன் பாஷையுடன் அடக்கி ஆளுகையால் ஆண்தன்மை பொருந்தியதுமான..." இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரயாசத்தையும், பெருமறைப்பையும் பொழுதுபோக்கையும் உண்டுபண்ணுகிற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும், துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக்கலையை இலேசிலளிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி ஒன்றனிடத்தே மனம்பற்றச் செய்து அத்தென் மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாடல்களைப் பாடுவித்தருளினீர்.' - இராமலிங்கர்.

'இலக்கணக்கொத்தை'யும், வர்ணதர்மத்தையும், வடமொழியையும் வள்ளலார் மறுத்துரைக்கும் பாங்கை சே. இராசேந்திரன் எடுத்துக்காட்டுவார்:

'ழ், ற், ன் முடிநடு அடி சிறப்பிய லக்கரங்களில் முடிநிலை இன்பானுபவ மோனாதீதத்தைச் சுட்டறச் சுட்டும் இயற்கையுண்மைத் தனித்தலைமைப் பெருமைச் சிறப்பியல் ஒலியாம் எனத் தமிழ் எழுத்தொலிகளின் அமைப்பின் சிறப்பைத் தத்துவக் கண்ணோட்டத்தில் அடிகள் தெளிவுறுத்தியுள்ளார்' - சே. இராசேந்திரன்.

'வருணாச்சிரம மானத்தாற் பந்தப்பட்டேக தேசத்தான் வழங்குகின்ற வேதம், வருணாச்சிரம மானத்தாற் பந்தப்படாது யாண்டும் பூரணத்தான் விளங்கும் மெய்ம்மொழிக்குப் பிரமாணமாகாதென்க.'- இராமலிங்கர் ( 'தமிழ்க்கவிதைகளில் திராவிட இயக்கத் தாக்கம்' )

எனவே வேதத்தின் தலைமை அதிகாரத்தையும் வர்ணதர்மத்தான் பந்தப்பட்ட வடமொழிப் பிரமாணத்தையும் கேள்விக்குள்ளாக்குவார். திராவிட இயக்கம் உருப்பெற அடித்தளக் காரணிகளாக வே.ஆனைமுத்து வலியுறுத்தும் ஆறினுள் ஒன்றே தமிழகத்தில் ஆறாந்திருமுறை பாடியதன் மூலம் ஆரிய எதிர்ப்பைத் துவக்கிவைத்த வடலூர் வள்ளலார் இயக்கம்' என்பதுமாம்!

அதுவும் எத்தகைய ஆரிய எதிர்ப்பெனில் அதன் இந்தியத் தலைமை அதிகாரமாம் வேதம்,தர்மமாம் வர்ணாச்ரமம், அத்தர்மத்தாற் பந்தப்பட்ட சங்கதப்பிரமாணம்,அதன் கடைப்பிடி ஒழுகலாறாம் கலாச்சாரம் எனப் பார்ப்பனியத்தின் தங்குதளம் யாவற்றையுமே அடியோடு எதிர்த்த தகைமைத்தாம். இந்தப் புள்ளிதான் வடலூரும் ஈரோடுஞ் சங்கமித்த சங்குமுகம் எனலாம்.

இராமலிங்கரின் அழைப்பை ஏற்றுத் தமது 21-ஆவது வயதில்' ( 1869 ) வடலூர் வந்து இறுதிவரை அங்கேயே தங்கிவிட்ட சபாபதி சிவாச்சாரியார் என்ற 'பிராமணோத்தமரை', தமது சத்தியஞான சபையில் பூசகராக நியமித்தார். அவரது பரம்பரையினர் ஒருவரே இன்றும் அங்கு பணியாற்றி வருவதாக ஊரனடிகள் குறிப்பிடுகிறார்.'- ராஜ் கௌதமன் ( பக்: 125 & 126 )

ராஜ் கௌதமன் குறிப்பிடும் மேற்படி பிராமணோத்தம வகையறா தாமே பின்னாளில் வள்ளலாரின் சோதி வழிபாட்டிற்கு மாறாகச் சைவாகமுறைப்படி பூசை நிகழ்த்த இந்துசமய அறநிலையத் துணை ஆணையாளரிடம் சீராய்வு மனு அளித்து தோல்வியைத் தழுவியவர்?

(ஆதாரம்: பழ. நெடுமாறனின் 'வள்ளலார் மூட்டிய புரட்சி'-பக்:143)

இத்தகு புரிதல்களுடன் நோக்கத் தலைப்பட்டால்தான் 'ஆரியத்தை அதன் தங்குதளம் யாவினும் நின்றெதிர்க்கும் ' செல்நெறியில் வடலூரும் ஈரோடும் சங்கமிக்கும் சங்குமுகத்தின் பெறுமதிகளும்; அவற்றிற்கு எதிரான அழிமதிகளும் எத்தகையன எனவாங்கே நமக்குப் படிகத் தெளிவின் துல்லியமாக பிடிபடலாகும்.

❖ ❖ ❖

# சனாதனச்சூழலில் வள்ளலாரின் தேவை

**கண. குறிஞ்சி**

வள்ளலார் ( 05 / 10 / 1823 - 30 / 01 / 1874 ) தமிழ்ச் சமூக வரலாற்றில் ஒரு புரட்சித் துறவியாகத் திகழ்கிறார். 'மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்' எனவும், 'கண்மூடி வழக்கம் எலாம் மண்மூடிப் போக' எனவும் முழங்கி, எடுத்துக்காட்டான வழிகாட்டியாகத் திகழ்கிறார். தனி மனிதாக ஒதுங்கிவிடாமல், நிறுவனங்களை உருவாக்கித் தனது கொள்கைகளைப் பரப்புரை செய்பவராக அவர் உயர்ந்து நிற்கிறார். அவர் ஏற்படுத்திய சமரச சுத்த சன்மார்க்க சங்கம் ( 1865 ) சத்திய தரும சாலை ( 1867 ) சித்தி வளாகம் ( 1870 ) சத்திய ஞான சபை ( 1872 ) ஆகியவை அவரது முயற்சியால் கட்டமைக்கப் பட்டவை. இவற்றில் சங்கம், சாலை, சபை ஆகிய மூன்றும் வடலூரில் உள்ளன. சித்தி வளாகம் வடலூருக்குத் தெற்கே மூன்று கிலோ மீட்டர் தொலைவில் மேட்டுக்குப்பம் எனும் சிற்றூரில் உள்ளது.

மடத்திற்கு மாற்றாகச் சங்கத்தை உருவாக்கியவர். புத்தருக்குப் பிறகு சங்கம் அமைத்துப் பாகுபாடு காட்டாமல் மக்கள் பணி ஆற்றியவர்.

2,000 ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் வந்தார். அவருக்குப் பின் திருமூலர், சித்தர்கள், பட்டினத்தார், தாயுமானவர் போன்றோர் வந்தனர். இவர்கள் அனைவருக்கும் பின்னே வள்ளலார் வந்தார். இத்தகைய மரபை,

*'வாழையடி வாழை என வந்ததிருக்கூட்ட*
*மரபினில்யான் ஒருவன்அன்றோ '*

-- எனக் குறிப்பிட்டு வள்ளலார் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறார்.

மேலும்,

*'அகத்தே கருத்துப் புறத்து வெளுத்*
*திருந்த உலகர் அனைவரையும்*
*சகத்தே திருத்திச் சன்மார்க்க*
*சங்கத் தடைவித் திடஅவரும்*
*இதத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்*
*திடுதற் கென்றே எனை இந்த*
*உகத்தே இறைவன் வருவிக்க*
*உற்றேன் அருளைப் பெற்றேனே'*

- எனத் தனது வாழ்வின் இலக்கைத் தெளிவுபடுத்துகிறார்.

நூலாசியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிகாசிரியர், போதகாசிரியர், ஞானாசிரியர், சிறந்த சொற்பொழிவாளர், மொழி ஆய்வாளர், பசிப்பிணி போக்கிய அருளாளர், தீர்க்கதரிசி, சித்த மருத்துவர், இசை வல்லுநர் எனப் பன்முக ஆளுமை மிக்கவராக அவர் போற்றப்படுகிறார். அதனாலேயே

‘ பல கலை தெரிதரும் உணர்ச்சியன் ‘ எனக் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் அவரைப் பாராட்டுகிறார். தவிரவும், பலவற்றில் முதன்மை நிலை பெற்றவராகவும் அவர் விளங்கினார்.

தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு முதன் முதலாகத் திருக்குறள் வகுப்பு நடத்தியவர் தமிழ்நாட்டில் முதன்முதலாக முதியோர் கல்வியை ஏற்படுத்தியவர். தமிழ்நாட்டில் முதன்முதலாக மும்மொழிப் பாடசாலை ( தமிழ், வடமொழி, ஆங்கிலம் ) என நிறுவியவர். தமிழ்நாட்டில் முதல் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் என்பன போன்ற முதன்மைச் சிறப்புக்கு உரியவர்.

தவிரவும், தமது கொள்கைக்கென்று ஒரு தனி மார்க்கத்தைக் கண்டவர்.

தமது மார்க்கத்திற்கென்று ஒரு தனிச் சங்கத்தை நிறுவியவர்.

தமது மார்க்கத்திற்கென்று ஒரு தனிக் கொடி கண்டவர்.

தமது மார்க்கத்திற்கென்று ஒரு தனி மந்திரம் உருவாக்கியவர்.

தமது மார்க்கத்திற்கென்று ஒரு தனிச்சபையையும் கட்டியவர் வள்ளலார் அவர்கள்.

வள்ளலாரைப்பற்றி அவரது அணுக்கத் தொண்டரான தொழுவூர் வேலாயுத முதலியார், தியாசபிகல் சொசைட்டியாருக்கு அளித்த ஆங்கில வாக்குமூலத்தில் குறிப்பிடுவது மிகவும் முக்கியமானது.

‘ இயற்கைக்கு மேம்பட்ட எதையும் அவர் ( வள்ளலார் ) ஒப்புவதில்லை. தமது மார்க்கம் அறிவியலையே அடிப்படையாகக் கொண்டதென்று இடையறாது வற்புறுத்துவார்‘ எனும் கூற்று ( தமிழாக்கம் ) துறவிகளில் அவர் தனித்துவம் மிக்கவர் என்பதைத் தெளிவாக்குகிறது.

‘ இராமலிங்கம் என்பது சைவம், வைணவம் ஆகிய இரண்டும் சேர்ந்த பெயர். இராமர், வைணவப் பெயர். லிங்கம், சைவப்பெயர். இப்பெயர் சைவ வைணவச் சமரசத்தையும் குறிப்பதாகக் கொள்ளலாம்‘ என்கிறார் முனைவர் ஊரன் அடிகளார். முதலில் அவர் இராமலிங்க பிள்ளை என அழைக்கப்பட்டு, பிறகு இராமலிங்க சுவாமிகள் என அவரது சீடர்களால் போற்றப்பட்டார். ஆனால், சுவாமிகள் எனும் சொல் மிகவும் ஆரவாரமாக இருப்பதாகக்கூறி, தன்னடக்கத்துடன் அப்படி அழைக்க வேண்டாம் எனத் தனது சீடர்களுக்குக் கட்டளையிட்டு விட்டார். எனவே அவர் சிதம்பரம் இராமலிங்கம் என்றே

தன்னை அழைத்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. திருவருட்பிரகாச வள்ளலார் எனும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை என வழங்கும் வழக்கத்தை அவரது முதன்மைச் சீடராகிய தொழுவூர் வேலாயுத முதலியார் ஏற்படுத்தினார்.

சங்கராச்சாரியார், சமஸ்கிருதம் எல்லா மொழிகளுக்கும் 'தாய்' என்ற பொழுது, தமிழ் எல்லா மொழிகளுக்கும் 'தந்தை' எனக் கூறிச் சங்கராச்சாரிக்கு அறிவுறுத்தியதோடு, தமிழ் எவ்வகையில் சிறந்தது என்பதையும் வள்ளலார் தெளிவு படுத்தினார். தமிழ் எழுத்துக்கள் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமானவை என்றும், தமிழ் ஒலி இலேசானது என்றும், தமிழில் கூட்டு என்னுஞ் சந்தி அதி சுலபமானது என்றும், தமிழ் உரைநடையில் எழுதவும், கவி செய்யவும் மிக நேர்மையானது என்றும், எடுத்தாரவாரம், சொல்லாடம்பரம் முதலிய குணங்கள் இல்லாதது என்றும், எம்மொழியின் ஒலிகளையும் தன்னுட் கொண்டது என்றும் தெளிவு படுத்தினார். தமிழை 'இயற்கை உண்மைச் சிறப்பியல் மொழி' என அழைத்ததோடு, சிறப்பெழுத்தாகிய ழ கரம், தமிழ் தவிர வேறு மொழிகளில் இல்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

'தமிழ், நீச மொழி' என இன்றும் இழிவுப்படுத்திக் கொண்டிருக்கும் சங்கராச்சாரிக்கும், சமஸ்கிருதத்தை உச்சிமேல் வைத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்துத்துவ வெறியர்களுக்கும் வள்ளலாரின் தமிழ் பற்றிய விளக்கம் சரியான பதிலடியாகும்.

'சமூகத்தைச் சீர்திருத்த வந்த வள்ளலார்க்கு மொழி உணர்வு இருந்ததில் வியப்பில்லை. வள்ளலாரின் மொழிக் கோட்பாடு என்பது தமிழ்த்தேசியம் சார்ந்ததே அன்றி, சைவம் சார்ந்தது அன்று. இதனை இப்படி கூறலாம். தமிழ்த் தேசியத்தைச் சைவத்தேசியமாக உருவெடுக்காமல் தடுத்தவர் வள்ளலார் ' எனப் பழ. நெடுமாறன் அவர்கள் குறிப்பிடுவது மிகச்சரியான மதிப்பீடு ஆகும்.

சென்னையிலும் கருங்குழியிலும் வாழ்ந்த காலத்தில் வள்ளலார் பாடியவை முதல் ஐந்து திருமுறைகள். அவை பெரும்பாலும் இறைவனைத் துதித்துப் பாடியவை. 1867-ல். வடலூருக்கு வந்தபின் வடலூரிலும், மேட்டுக்குப்பத்திலும் வாழ்ந்த காலத்தில் பாடியவை ஆறாந்திருமுறை. இந்த ஆறாந்திருமுறையில்தான் வள்ளலாரின் வளர்ச்சி பெற்ற மனக் கட்டமைப்பையும், புரட்சிக் கருத்துக்களையும் காண முடிகிறது.

தமிழ்ச் சமூகத்தில் ஒருவரது மனப்பக்குவத்தைத் தீர்மானிக்கும் இரண்டு அளவுகோல்கள் பணம் மற்றும் சாதி குறித்த அவர்களது பார்வையும், செயல்பாடுகளும் ஆகும். பல்வேறு அமைப்புகளை நிறுவினாலும், அவற்றை வணிகரீதியாக மாற்ற வள்ளலார் அவர்கள் ஒருக்காலும் ஒப்பியதில்லை. அவருக்குப் பணம் அனுப்புவதாக ஓர் அன்பர் தெரிவித்த பொழுது, அதற்கு வள்ளளார் தந்த பதில் அவரது உயர் பண்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

‘ ஐயா! நானும் புத்தி தெரிந்த நாள் தொடங்கி இது பரியந்தமும் இந்தப் பிண உடம்பும் இதற்குக் கொடுக்கின்ற பிண்ட துண்டங்களும் பெருஞ்சுமையாக இருக்கின்றதே, ஐயோ, இது என்றைக்குத் தொலையும் என்று எண்ணி எண்ணி இளைத்துத் துன்பப்படுகின்றவனாக இருக்கின்றேன். இப்படிப்பட்ட இந்த நாய்க்கு பணம் என்ன செய்ய, என்னைக் குறித்துத் தாங்கள் பண விசயத்தில் பிரயாசம் எடுத்துக் கொள்ள வேண்டாம்‘ என்று புதுவை வேலு முதலியாருக்கு எழுதிய கடிதத்தில் ( 15/02/1859 ) வள்ளலார் குறிப்பிடுவது கருதத்தக்கது. மேலும் பணத்தை இலட்சியம் செய்யாமல், அதைத் தூக்கி எறிந்ததாக வள்ளலார் அவர்களே குறிப்பிடுகிறார்.

அதே போல், சாதி மற்றும் மதம் பற்றிய அவரது கண்ணோட்டம் மிகவும் புரட்சிகரமானது.

*‘சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே*
*சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே*
*ஆதியிலே அபிமானத் தலைகின்ற உலகீர்*
*அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே‘*

- என்றும்,

*‘நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா*
*நவின்றகலைச் சரிதம் எலாம்*
*பிள்ளைவிளை யாட்டே*
*மேல்வருணம் தோல் வருணம்*
*கண்டறிவார் இலைநீ ‘ என்றும்,*

*‘சாதியும் மதமும் சமயமும் பொய்யென*
*ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் சோதி‘*

என்றும்,

*‘இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை*
*இருவாய்ப்புப் புன்செயில்*
*எருவாக்கிப் போட்டு*
*மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம*
*வழக்கெலாம் குழிக் கொட்டி*
*மண்மூடிப் போட்டு‘ என்றும்,*
*‘சாதி சமயச் சழக்கைவிட் டேன்அருட்*
*சோதியைக் கண்டேனடி - அக்கச்சி*
*சோதியைக் கண்டேனடி.*
*சாதி சமயச் சழக்கெலாம் அற்றது*
*சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது‘*

- என்றும்,

*'வேதாக மங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர்*
*வேதாக மத்தின் விளைவறியீர் - சூதாகச்*
*சொன்னஅலால் உண்மைவெளி தோன்ற*
*உரைக்கவிலை*
*என்ன பயனோ இவை'*

- என்றும்,

*'மதித்த சமயமத வழக்கெல்லாம் மாய்ந்தது*
*வருணாச் சிரமம் என்னும் மயக்கமும் சாய்ந்தது*
*கொதித்த லோகாசாரக் குதிப்பெல்லாம் ஒழிந்தது*
*கொலையும் களவும் மறைப்புலையும் அழிந்தது*
*குறித்த வேதாகமக் கூச்சலும் அடங்கிற்று'*

- என்றும்,

*'சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி*
*நேத்திரங்கள் போற்காட்ட நேராவே'*

- என்றும்,

திருஅருட்பாவில் தொடர்ந்து சாதி, மத மறுப்புக் கருத்துகளை வள்ளலார் உயர்த்திப் பிடிக்கிறார்.

அதேபோல் சைவம், வைணவம், வேதாந்தம், சித்தாந்தம் ஆகியவற்றை முற்றிலும் மறுதலிக்கிறார்.

' சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லக்ஷியம் வைக்க வேண்டாம். அவற்றில் தெய்வத்தைப் பற்றிக் குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதே அன்றிப் புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவவோமேயானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்க வேண்டாம். ஏனெனில் அவைகளிலும் -- அவ்வச் சமய மதங்களிலும் -- அற்பப் பிரயோஜனம் பெற்றுக் கொள்ளக் கூடுமேயல்லது, ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கை உண்மை என்னும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக் கொள்கின்றதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும் இவைகளுக்கெல்லாம் சாக்ஷி நானே இருக்கின்றேன். நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது. அது பட்டணத்துச் சுவாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலர்க்கும் தெரியும். அந்த லக்ஷியம் இப்போது எப்படிப் போய்விட்டது பார்த்தீர்களா! அப்படி லக்ஷியம் வைத்ததற்குச் சாக்ஷி வேறே வேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற திருவருட்பாவில் அடங்கிஇருக்கிற - ஸ்தோத்திரங்களே - போதும். அந்த ஸ்தோத்திரங்களையும் மற்றவர்களுடைய ஸ்தோத்திரங்களையும் சபைக்குக் கொண்டு வந்தால்

அவைகளே சாக்ஷி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போது இருந்தது என்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது' என்பது வள்ளலாரின் புகழ்பெற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஆகும். இது அவரது அறிவுப் பரிணாமத்தைத் தெளிவாக உணர்த்துகிறது. 'சுத்தசன்மார்க்கத்துக்கு முக்கியத் தடைகளாகிய சமயம், மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்கள், சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் ஆவார்கள்' என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

மேலும் 'ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திரசம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி, எல்லவரும் தம்மவர்களாய்ச் சமத்திற்கொள்வது ஜீவ ஒழுக்கமாகும்' என்பதும், ' தத்துவவொழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தொழில் ஒழுக்கம் பற்றி ஜாதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன-- சமய ஏற்பாடு, ஜாதி ஏற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள்' என்பதும் அவரது தெளிவான நிலைப்பாடாகும்.

பாடல்களிலும், கருத்துக்களிலும் மட்டுமல்ல, நடைமுறையிலும் அதைக் கடைப்பிடித்த முன்னோடியாக அவர் திகழ்கிறார். குறிப்பாக அவர் சுட்டும் வழிபாட்டுமுறை முற்றிலும் புதுமையானது. இந்துத்துவம் வலியுறுத்தும் கோயில் வழிபாட்டு முறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. வழிபாட்டிற்காகக் கூடுவோர் ஞானசபையின் உள்ளே புகுவதற்கும், புறத்தே இருந்து வழிபடுவதற்கும் சாதி முதலிய வேறுபாடுகள் இல்லை. மத்தளம் முதலிய இசைக்கருவிகள், சோறு, தேங்காய் பழம் முதலிய நைவேத்தியங்கள், தீப தூப முதலிய ஆராதனைகள், திருநீறு முதலிய பிரசாதங்கள் இன்னும் இவ்வகைகளில் சமயக் கோயில்களில் அனுட்டிக்கப் படுபவை யாவும் ஞான சபை வழிபாட்டிற்குப் புறம்பானவை என இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே வள்ளலார் வழிகாட்டியுள்ளார்.

அதே போல், அந்தணர் சபாபதி சிவாசாரியார் முதல் பறையர் அமாவாசை வரை எல்லாச் சாதியாரும் அவரிடம் இயல்பாகப் பழகினர். அனைவரையும் அவர் சமமாகவே கருதினார்.

ஒடுக்கப்பட்ட பிரிவினர்பால் அவர் காட்டிய தரிசனம் குறித்து ஊரன் அடிகள் ஒரு நிகழ்ச்சியைப் பதிவு செய்கிறார்.

'மஞ்சக்குப்பம் தாசில்தார் வேங்கடசுப்பையர் நாடோறும் பெருமானின் உபதேசங்களைக் கேட்கக் கூடலூர்க்கு வருவார். அவரது வண்டிக்கு முன் சக்கிலியன் ஒருவன் கொம்பு ஊதிக் கொண்டு ஓடிவருவது வழக்கம். ஒரு நாள் மிக வேகமாக ஓடிவர நேரிட்டதால், பசித்துக் களைத்த அவனது உடல்

நடுங்கிற்று. அன்று ஐயர் கூட்டத்திற்கு வந்தவுடன் வழக்கம் போல் பெருமான் அவரைப் பார்த்து விசாரிக்கவில்லை. சற்று நேரங்கழிந்தபின் அவரைப் பார்த்து, ' இந்த வாழ்வு எத்தனை நாளைக்கு இருக்கும்? கொம்புக்காரனை முன்னமே போக வேண்டிய இடத்திற்கு அனுப்பி, அவ்விடத்திற்குச் சிறிது தூரம் முன்னிருந்தே ஊதினால் போதாதோ' எனக்கேட்டார். தாசில்தாரும் அவ்வாறே செய்வதாகக் கூறிப் பொறுத்தருள வேண்டினார். பசித்துக் களைத்திருந்த சக்கிலிக்கு உணவளிக்கச் செய்த பின்னரே பெருமான் அன்றைய உபதேச உரையைத் தொடங்கினார்'. (ஊரன் அடிகள்)

அது மட்டுமல்ல, பாகுபாடு காட்டாமல் வாழும் வித்தகர்களுக்குச் சேவை செய்ய விரும்புவதாகவும் வள்ளலார் குறிப்பிட்டார்

*'எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்*
*தம்முயிர் போல் எண்ணி உள்ளே*
*ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்*
*யாவர்அவர் உளந்தான் சுத்த*
*சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்*
*இடம்என நான் தெரிந்தேன் அந்த*
*வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்*
*சிந்தைமிக விளைந்த தாலோ'*

- எனவும் தனது சமரச நோக்கத்தைத் தெளிவுபடுத்தியதோடு,

*'கலை உரைத்த கற்பனையே நிலைஎனக் கொண்டாடும்*
*கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக'*

- எனவும் சாபமிட்டார்.

இந்த அளவு தெளிவாகத் தம் நிலைபாட்டை விளக்கிய வள்ளலாரைச் சைவமதச் சிமிழுக்குள் அடைக்கும் முயற்சிகள் அன்றிலிருக்கு இன்று வரை தொடர்கிறது. ஆனால், வள்ளலார் அவர்கள் அனைத்து மதங்களையும் கடந்தவராகத்தான் வாழ்ந்து காட்டினார்.

தொடக்கத்தில் முருகன் மற்றும் சிவ வழிபாட்டில் ஈடுபாடு காட்டியவராக இருந்தாலும், பின்னாளில் அத்தகைய தளைகளை எல்லாம் கடந்தவராக அவர் திகழ்ந்தார். சிலர் அவரைச் 'சீர்திருத்தச் சைவர்' எனக் குறிப்பிட்டாலும், அது சரியான மதிப்பீடு அல்ல என்பதை அவரது பல்வேறு பாடல்கள் தெளிவு படுத்துகின்றன.

' சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடைகளாகிய சமயாசாரங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றாதபடி அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கியமான லட்சியமாகிய ஆன்மநேய

ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்திலும், எந்த இடத்திலும், எந்த விதத்திலும் விலகாது நிறைந்து விளங்கச் செய்தருள வேண்டும்' எனச் சிறு விண்ணப்பம் பகுதியில் தெளிவுபடுத்துகிறார்.

வள்ளலாரின் மையமான கருத்தியல், சீவகாருண்யம். சீவகாருண்யத்தின் முக்கியக் கூறு, பசி தீர்த்தல் என்பதாகும். பசி நீக்கம் என்பதை ஏதோ ஒரு தர்ம காரியமாக வள்ளலார் பார்க்கவில்லை. மாறாக ஒரு கோட்பாடு எனும் அளவிற்குத் தொடர்ந்து இடையறாமல் அதை வலியுறுத்துகிறார். அதனாலேயே பசிபோக்குதல் என்பதே இன்றுவரை அவரது அடையாளமாக மாறிவிட்டது.

வள்ளலாரைப் போலவே பசி நீக்கம் என்பதை உலகெங்குமுள்ள ஞானிகள் வலியுறுத்துகின்றனர்.

'பசித்தவனுக்கு ரொட்டி வடிவில்தான் இறைவன் தோன்றுவான்' எனக் கிருத்துவர்கள் கூறுவது வழக்கம்.

'பசித்தவருக்கு உணவளிக்காமல் எவரும் உண்ணக்கூடாது' எனவும், 'பசிபோக்குபவரது பாவங்கள் மன்னிக்கப் படும்' எனவும் நபிகள் நாயகம் குறிப்பிடுகிறார்.

*'ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை*
*மாற்றுவார் ஆற்றலின் பின்'*

- என்பது பேராசான் வள்ளுவர் வாக்கு.

'தவஆற்றலின் தனி ஆற்றல், பசியைத் தாங்கும் ஆற்றல். ஆனால், அன்னமிட்டுப் பசியைப் போக்கும் அருளாற்றல், அதை இரண்டாம் இடத்துக்குப் பின்தள்ளி விடும்' எனும் குறளின் கருத்தோடு இணைந்து தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியவர் வள்ளலார் அவர்கள்.

*'ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்*
*மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை'*

- எனப் பசி போக்குவரது வாழ்வைக் கொண்டாடுகிறது மணிமேகலை.

இத்தகைய பசிக்கொடுமை என்பது ஏதோ வள்ளலார் காலத்தின் பிரச்சனை என்பதாக யாரும் கருதிவிட முடியாது. அண்மையில் 'உலகப் பட்டினிக் குறியீடு' வெளிவந்த பொழுது இந்தியா முழுவதும் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானது. உலகிலுள்ள 121 நாடுகளில் இந்துத்துவம் ஆட்சி புரியும் இந்தியா 107 - ஆவது இடத்தில் பட்டினியில் வாடும் நாடாக இருந்தது அம்பலமானது. பாகிஸ்தானை விட, வங்கதேசத்தை விட, இலங்கையை விட, நேபாளத்தை

விட இந்தியா பின்னால் இருந்தது அதிர்ச்சியின் உச்சகட்டமாக இருந்தது.

எனவே மனிதகுலத்திற்குப் பசி என்பது மிகப்பெரும் சவாலாக முன்நிற்கிறது. இதைத் தொலைநோக்காக உணர்ந்து அதை ஒழிக்கும் முயற்சியில் இறங்கினார் வள்ளலார். அதற்காக மக்களின் மனச்சான்றை உலுக்கும் வண்ணம் அருள்வாக்கு அருளினார். இதனால் கேட்போரது உள்ளத்தில் அருள் சுரந்து, பசி நீக்கும் அணையா அடுப்பை ஏற்படுத்தும் அவரது முயற்சிக்குக் கைகொடுத்தனர். வள்ளலார் சொல்லுவது போல் பசிப்பிணியின் கொடுமை குறித்து இனியொருவர் விரிவாகச் சொல்ல முடியாது எனும் அளவுக்கு அதைத் தொடர்ந்து தொய்வின்றி எடுத்துரைத்து வந்தார்.

பசி நீங்கியபின் ஒருவர் பெறும் இன்பத்தைக் காட்டிலும், பசி நீக்கியவர் பெறும் இன்பத்திற்கு இணையேதும் இல்லை எனவும், 'இந்தப் புண்ணியத்தைச் செய்கின்ற புண்ணியர்களை எந்தத் தெய்வத்துக்குச் சரியென்று சொல்லலாம்? எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுள் அம்சமென்றே சத்தியமாக அறிய வேண்டும்' எனக் கூறி பசிப்பிணி போக்கும் மருத்துவர்களாக மாற மக்களைத் தூண்டிக் கொண்டே இருந்தார்.

ஏதோ மனிதர்களுடைய பசியைப் போக்குவது என்ற அளவோடு அவர் நின்றுவிடவில்லை. "தமது குடும்பத்திற்குச் சகாயமாகத் தேடிய பசு, எருமை, ஆடு, குதிரை, தாவர முதலிய பிராணிகளுக்கும், பசியை ஆற்றுவித்துத் திருப்தியின்பத்தை உண்டு பண்ண வேண்டுமென்றும் சத்தியமாக அறிதல் வேண்டும்" என்பது மக்களுக்கு அவரது அறிவுரையாக இருந்தது.

*'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்*
*வாடினேன் பசியினால் இளைத்தே*
*வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த*
*வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்'*

- எனும் வள்ளலாரின் வரிகள் மிகவும் புகழ்பெற்றவை. மேலும் 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' எனும் பகுதியில் பசியின் கொடுமை குறித்து மிக விரிவாகப் பேசுகிறார்.

வள்ளலாரது மற்றுமோர் சிறப்பு அவரது எளிமை. காவி உடை தவிர்த்து, வெண்ணிற ஆடையையே அவர் உடுத்துவார். வெள்ளாடையிலும் அவர் உடுத்துவது, லாங் கிளாத் ( Long Cloth ) எனும் வகையைச் சார்ந்ததே. தமிழ்நாட்டு ஞானிகள் பலரும் வெள்ளாடைத் துறவியராகவே திகழ்ந்தனர். காவி உடை பின்னாளில் வந்தது என்பது வரலாறு. காவி, தமிழர்க்கு அந்நியமானது எனும் வள்ளலாரின் அறிவுரையை இன்றைய சூழலில் நினைவு கொள்வது முக்கியம்.

பெண்களின் மேம்பாடு குறித்துக் கரிசனம் மிக்கவராக விளங்கினார் வள்ளலார். அவரது சமாதிக் கட்டளையில் ஏழு கட்டளைகளை அவர் குறிப்பிடுகிறார்.

'கணவன் இறந்தால், மனைவி தாலி களையக் கூடாது ' என்பது அக்கட்டளைகளில் ஒன்றாகும். அதே போல், உபதேசக் குறிப்புகள் பகுதியில்,

'பெண்களுக்கு யோகம் முதலிய சாதனங்கள் அவசியம் கற்பிக்க வேண்டியது. மேலும் வேதமற்று அபேதமாய்ப் படிப்பு முதலியவையும் சொல்லிக் கொடுக்க வேண்டியது. தத்துவம் முதலியவற்றின் சொரூப ரூபாதிகளைத் தெரிவித்துச் சரளமாக்கினால், பின் தடையின்றி நம்முடைய துரிய ஆசிரம காலத்தில் ஒத்திருப்பார்கள்.' என 200 ஆண்டுகளுக்கு முன்பே மகளிரது உரிமையை வலியுறுத்துபவராக வள்ளலார் விளங்கினார் என்பது குறிப்பிடத் தக்கது.

நிலவுடைமை கோலோச்சிய காலகட்டத்தில் வாழ்ந்த வள்ளலார், அதன் தாக்கத்திலிருந்து விடுபட்டு இன்று பேசப்படுகின்ற புரட்சிகரமான கருத்துக்களைத் தன் மனம், மொழி, வாழ்வு ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தியது பெரிதும் வியக்கத்தக்கது. மதப்பற்று, சாதிய ஏற்றத்தாழ்வு, மூடநம்பிக்கை போன்றவை மண்டிக் கிடந்த அவரது காலகட்டத்தில், அவரது கருத்துக்கள் மிகப்பெரும் அதிர்வுகளை உண்டாக்கும் என்பதறிந்துதான், அவரது முற்போக்குக் கருத்துக்கள் அடங்கிய திருஅருட்பா ஆறாம் திருமுறை அவர் 'மறைந்த' பிறகு, 11 ஆண்டுகள் கழிந்தபின் 1885-ஆம் ஆண்டுதான் முதன்முதலாக அச்சிடப்பட்டது.

ஆறாம் திருமுறை அச்சிட்டதன் பின்னணியில் உள்ள மிகப் பெரும் அரசியலை வள்ளலார் ஆய்வாளர்கள் சரவணன், தேவேந்திரன் ஆகியோர் விரிவாகப் பதிவு செய்துள்ளனர்.

வள்ளலாரின் கருத்துக்கள் ஏதோ 200 ஆண்டுகளுக்கு முன்னால் தெரிவிக்கப் பட்டவை என நாம் எளிதில் கடந்து சென்றுவிட முடியாது. அவரது கருத்துக்கள் இன்றளவும் பொருத்தப்பாடு மிக்கவையாக விளங்குகின்றன. ஆர் எஸ் எஸ் உயர்த்திப் பிடிக்கிற, செயல்படுத்தத் துடிக்கிற சனாதனக் கோட்பாடு, உருவ வழிபாடு, ஆரிய மேலாண்மை, சாதி - மதப்பாகுபாடு, மகளிர் சமத்துவஉரிமை மறுப்பு, மேலுலகக் கனவு, சமஸ்கிருதச் சிறப்பு, சித்தமருத்துவப் புறக்கணிப்பு, வர்ணாசிரம தர்மம், வழிபாட்டுச் சடங்குகள் , நீசமொழி எனத் தமிழை இழிவுபடுத்தும் ஆணவம், அடித்தள மக்களை ஒதுக்கிவைத்தல் / வேதங்கள் / ஆகமங்களின் புனிதம் ஆகியவற்றின் மீது மரண அடியைக் கொடுத்தவர் வள்ளலார். எனவே அவரது கருத்துக்களைக் கொண்டாட வேண்டியது தமிழர்களின் முகாமையான கடமையாகும்.

அதற்காக அவரைத் தெய்வமாக வழிபடுவதைத் தவிர்த்து, அவரது இலட்சியக் கனவுகளை நனவாக்கப் பாடாற்றுவதே அவருக்குத் தமிழ்ச் சமூகம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

*'கருணை இலா ஆட்சி கடுகி ஒழிக!*
*அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க!'*

## துணை நூல் பட்டியல்

திருவருட்பா ( 1 முதல் 6 திருமுறைகளும் உரைநடையும் )
ச.மு.கந்தசாமி பிள்ளை பதிப்பு மறு அச்சு - 2014
அருட்பா பதிப்பகம், சென்னை.

வள்ளலார் இராமலிங்க அடிகள் வரலாறு
முனைவர் அருள்திரு ஊரன் அடிகளார்
வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

சிதம்பரம் இராமலிங்கம் எனும் வள்ளலார் : பன்முக வாசிப்பு.
வி.தேவேந்திரன், நெய்தல் பதிப்பகம், சென்னை.

திருஅருட்பா ( உரைநடைப் பகுதி ) பத்தாம் பதிப்பு
திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம், வடலூர்.

கண்மூடி வழக்கம் எலாம்
மண்மூடிப் போக ....!
இரண்டாம் பதிப்பு, ராஜ் கௌதமன் என் சி பி எச், சென்னை.

வள்ளலார் கைநூல், வி.தேவேந்திரன்
நெய்தல் பதிப்பகம், சென்னை.

திருவருட்பாத்தேன், தொகுதி- 3
வ.த.இராமசுப்பிரமணியன், திருமகள் நிலையம், சென்னை.

# வள்ளலாரின் இருநூறாமாண்டும் நமது கடமையும்!

**பொழிலன்**

வள்ளலார்..

அண்மைச் சில ஆண்டுகளாகத்தான் பலராலும் அதிகம் பேசப்பட்டுவருகிறார்..

அவரைப் பற்றிய பலரின் தேடல்களும் அதிகமாகி இருக்கின்றன..

அவர் பிறந்து 200 ஆண்டுகள் நிறைவாகி இருக்கிற நிலையில்.. அவரை முழுமையாக அறிந்து கொள்வதற்கும் அவரின் செயல்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்கும் இந்தக் கால இடைவெளி மிக அதிகப்படியானது..

அப்படி, இக்கால இடைவெளிக்கு அப்பாலும் அனைவரும் அறிந்து கொள்ளுகிறபடியாக அவரும் அவரின் கொள்கைகளும் நோக்கங்களும் பரப்பப்பட்டு விடவில்லை..

வள்ளலார் இராமலிங்க அடிகளார் அவர்களின் சில நிகழ்வுகள் அறியப்பட்டிருக்கிற அளவில் பெரும்பாலோருக்கு வள்ளலார் என்ன செய்திருக்கிறார், என்னவெல்லாம் பேசி இருக்கிறார், எழுதி இருக்கிறார், என்னென்ன வகையில் இயங்கி இருக்கிறார், எந்த அரசியல் நிலைப்பாட்டில் இருந்து தன் கருத்துகளைப் பேசியிருக்கிறார் என்பது குறித்த அறிதல்கள் பலருக்கும் இருந்திடவில்லை..

வங்காளத்தின் விவேகானந்தர் தமிழ்நாட்டிற்குள் தெரிந்த அல்லது தெரிவிக்கப்பட்டிருக்கிற அளவிற்கு வள்ளலார் தெரியவில்லை அல்லது தெரிவிக்கப்படவில்லை..

பொதுவாகச் சமயத்துறவியர்க்கு அரசியல் தேவையில்லை என்பதாகச் சிலர் குறிப்பிடலாம்..

எல்லாவற்றுக்கும் மேலாகச் சமயக் கருத்தாளர் என்றாலும் சமயத் துறவி என்றாலும் அவரும் மாந்தரே.. அவரிடமும் உயிரிகளுக்குரிய மாந்தருக்குரிய உணர்வுகளும் இருக்கவே செய்யும்..

உயிர்க் காற்றை இழுப்பதும், தண்ணீர் குடிப்பதும், சிறுநீர் கழிப்பதும், மலம் கழிப்பதும் உயிரிகளின் இயல்பு..இயற்கை..

அந்நிலைகளெல்லாம் துறவியர்க்கு இருக்காது என்று எவரும் கருத இயலாது..

அதுபோலவே துறவி ஒருவர், தான் பிறந்த இயற்கைச் சூழலுக்கு உகந்த நிலமும், தன் தாய் மொழியும் அவருக்குள் ஓர் உள்ளுணர்ச்சியைத் தரவல்லனவே..

அவர் பிறர் தேவைக்காகப் பிற மொழிகளில் பேசினாலும், பிற நிலங்களில் போய் வாழ்ந்தாலும், தன் தாய் மொழியை, தன் தாய் நிலத்தை உணர்வோடு எண்ணுதலே இயல்பு..இயற்கை..

ஆரியப் பார்ப்பனியச் சங்கராச்சாரிகளுக்குத் தமிழ் மீது இருக்கிற உணர்வை விடச் சமஸ்கிருதத்தின் மீது உணர்வீடுபாடுகள் அதிகம் என்பதிலிருந்து வெளிப்படையாகத் தெரிந்து கொள்ள முடியும்..

அப்படியான உள் உணர்வுதான் அந்தந்த மண்ணின் மக்களுக்கும் இருக்கும்..

வள்ளலாருக்குத் தமிழின் மீதும் தமிழ்ப் பண்பாட்டின் மீதும் தமிழர்தம் அற வாழ்க்கையின் மீதும் தமிழ் நிலத்தின் மீதும் வெகுவாக ஈடுபாடு இருந்தது..

அஃது அவருக்கு இயல்பு.. இயற்கை என்பதைக் கடந்து அவர் குமுக உண்மையை அறிந்ததன் வெளிப்பாடு என்றும் உணரலாம்..

அவை குறித்தெல்லாம் அறிவதற்கு முன்னர் தமிழ்நாட்டில் பிற மொழித் துறவியர்யர்க்கு இருக்கும் மதிப்பீடுகள் பற்றிச் சிலவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்..

சங்கராச்சாரிகளோ, விவேகானந்தரோ தமிழ் நாட்டில் மதிக்கப்படுகிற அளவிற்கு வள்ளலார் மதிக்கப்பெறவில்லை..

அதற்கான காரணங்கள் முகாமையானவை..

அதற்கான காரணங்களை இரண்டு நிலைகளில் உணரலாம்..

ஒன்று.. அவர்கள் கொண்டிருந்த கருத்தியல்கள் சார்ந்தவை..

இரண்டு அவர்கள் அமைத்துக் கொண்ட கட்டமைப்புகள் சார்ந்தவை..

இந்த இரண்டு காரணங்களையும் சிறிது ஆழ்ந்துப் பார்த்தாக வேண்டும்..

முதலில் அவர்கள் அதாவது விவேகானந்தர், சங்கராச்சாரி போன்றவர்கள் மேற்கொண்டிருந்த கருத்தியல்கள் இந்தியப் பார்ப்பனியம் ஏற்றுக் கொண்டிருக்கிற அதிகார வகுப்பின் கருத்தியல்..

வேத, புராணங்களைக் கொண்டாடியவர்கள் அவர்கள்..

வேதங்களின் ஒலிப்புகள்தாம் அண்ட புடவி ( பிரபஞ்சங் ) களையும் காக்கவும் இயங்கவும் வைப்பதாகச் சங்கராச்சாரி உள்ளிட்டோர் இட்டுக்கட்டியுள்ளனர்..

உலகில் வேதங்களுக்கு இணையான நூல் எதுவுமில்லை என்ற கருத்துகளைப் பரப்பியவர் விவேகானந்தர்..

'நீங்கள் இறைவனைப் பற்றிய எந்தக் கொள்கையை வேண்டுமானால் நம்பாதவர்களாக இருக்கலாம் ஆனால் வேதங்களை ஒப்புக் கொள்ளாவிடில் நாத்திகர்களே..' - என்றும்,

'வேதத்தில் இல்லாததே இல்லை' - என்றும் வேதத்தை உச்சி முகர்ந்தவர் அவர்..

"தன் தாயை ஒரு துறவி எவ்வாறு நேசிக்காமல் இருக்க முடியாதோ அதுபோலவே தாய்நாட்டை நேசிக்காமலும் இருக்க முடியாது."

-என்று கூறியதோடு,

'ஒரு துறவிக்குத் தாய்ப்பாசம் இருக்கலாம் என்று சாஸ்திரங்களே கூறுகின்றன. அதுபோலவே ஒரு துறவிக்குத் தாய்நாட்டுப் பாசம் இருப்பதிலும் தவறில்லை. உலகத்தவரை நேசிப்பதற்குத் தாய்நாட்டுப் பற்றுத் தடையாக இருக்க முடியாது"

என்றும் விளக்கியவர் தன் தாய் மொழியான வங்காள மொழியையோ, தன் தாய் நாடான வங்காளத்தையோ அடையாளப்படுத்தாமல் சமசுக்கிருதத்தின் மீதும் 'பாரதம்' - என இந்தியத்தின் மீதும் பற்றுடையதாக அறிவித்திருந்தார்...

'பெருமைகொள்.. நான் ஒரு பாரதவாசி, ஒவ்வொரு பாரதீயனும் என் சகோதரன் - என்று பெருமையுடன் உரக்கக் குரல் எழுப்பு!

மூட பாரதீயனும், பிராமண பாரதீயனும், பறையராகிய பாரதீயனும் எனது சகோதரன் என்று சொல்வாய். இடுப்பில் ஒரு கோவணத்தை மட்டும் கட்டிக் கொண்டிருக்கிறவராயினும் உரத்தக் குரலெடுத்து, "பாரதீயரே எனது சகோதரர், பாரதீயரே எனது உயிர், பாரதத்தின் தேவ தேவிகளே நான் வணங்கும் தெய்வங்கள், பாரதத்தின் ஜன சமூகமே நான் குழந்தையாக இருந்தபோது படுத்து வளர்ந்த தொட்டில், இளமையில் விளையாடிக் களித்த எழிற்பூங்கா, மூப்படைந்த தருணத்தில் அடையும் வாரணாசியான மோட்சத்தலம்" என்று பெருமையுடன் சொல்வாயாக...'

-என்றவாறும்...

'சகோதரனே, 'பாரதபூமியே எனது அதியுயர்ந்த மோட்சலோகம், பாரதத்தின் நன்மையே எனது நன்மை' என்று சொல்வாயாக...'

- என்றவாறெல்லாமும் விவேகானந்தர் இந்தியாவையும் இந்து மதத்தையும் வேத, புராணங்களோடு இணைத்துக் கருதி மெச்சிக்கொண்டதுண்டு..

எனவேதான்.. அவர் பார்ப்பனர்களால் பெரிதும் உயர்த்திக் காட்டப்பட்டார்..

ஆர் எஸ் எஸ் அவரை முன்னிறுத்திக் கொண்டது..

விவேகானந்தர் கேந்திரம் அமைத்தது..

விவேகானந்தர் பாறை என்று பெயர் சூட்டிக்கொண்டு ஆரிய வைதீகம் குமரியில் ஆட்டம் போட்டுவருகிறது..

இந்திய அரசின் அஞ்சல் துறை சார்பில் விவேகானந்தருக்கு இதுவரை ஏழு அஞ்சல் தலைகளுக்கு மேலாகவும், இராமகிருஷ்ண பரமகம்சருக்கும் கோல்வால்கர் உள்ளிட்ட எண்ணற்ற ஆர் எஸ் எஸ் காரர்களுக்கும் அஞ்சல் தலைகளையும் வெளியிட்டிருக்கிறார்கள்..

சங்கராச்சாரிகளை 'லோககுரு' என்றுகூறி உயர்த்திக் காட்டி வருகின்றனர்..

திருக்குறளையும் ஆரிய வைதீகச் சார்புடையதாகக் காட்டிக் கொள்வதற்கான முயற்சியைக் கி வா செகநாதனைக் கொண்டு செய்விக்கிற பொறுப்பை கோவையின் இராமக்கிருட்டிணா மடம்தான் ஏற்றிருந்தது என்பது கவனிக்கத்தக்கது..

இப்படியாகவெல்லாம் விவேகானந்தரைக் கொண்டையத்தில் வைத்து அடையாளப்படுத்தி எளிய மக்களை அறியாமை வலையில் மத ஆளுமை வலையில் சிக்க வைக்கிற ஆரிய சூழ்ச்சி போல் அல்லாது அச் சூழ்ச்சிகளை மறுத்து மக்களை அறிவுக்குட்படுத்துகிற முயற்சி புத்தர் காலந்தொடங்கியே.. திருவள்ளுவர் காலந்தொடங்கியே நடந்து வருவதை அறிய வேண்டும்..

அறிவைப் பரப்புவதையே நோக்கமாகக் கொண்டு இயங்கினார் புத்தர்..

அறிவு அற்றம் காக்கும் கருவி - என்றார் திருவள்ளுவர்..

அவரின் வழிவந்தவர்களே திருமூலரும் சித்தர்களும் வள்ளலாரும்..

வள்ளலார் தொடக்கத்தில் சிவனிய கருத்தாளராக இருந்த போதும் பின்னர் சமயங்களை மறுத்திட அவர் எடுத்துக்கொண்ட பெரு முயற்சிகள் மிகவும் வியப்பானவை..

எளிய வகையில் பாடல்கள் இயற்றுகிற திறனைத் தாயுமானவரைத் தொடர்ந்து அவர் பெற்றிருந்தாலும்.. ஆரிய மறுப்புக் கருத்தும், சமய மறுப்புக் கருத்தும் வள்ளலாரின் மிக அழுத்தமான அறிவுத் தேடல் முயற்சியாலேயே நடந்தவை என்பதை அறியலாம்..

அறிவுச் செருக்குள்ளிட்ட எந்தச் செருக்குமற்றவராக இருந்ததோடு..

திருக்குறள் வகுப்புகளை முதன் முதலில் நடத்தத் தொடங்கியவரும் வள்ளலார் அவர்களே..

*'ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற*
*உத்தமர்தம் உறவு வேண்டும்*
*உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார்*
*உறவு கலவாமை வேண்டும்*
*பெருமைபெறு நினது புகழ் பேச வேண்டும்*
*பொய்மை பேசாதிருக்க வேண்டும்*
*பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான*
*பேய் பிடியாதிருக்க வேண்டும்*
*மருவுபெண் ஆசையை மறக்க வேண்டும்*
*உனை மறவாதிருக்க வேண்டும்*
*மதி வேண்டும் நின்கருணை நிதி வேண்டும்*
*நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்'*

- என்று மென்மையாக அறக் கருத்துகளைப் பதிவிடத் தொடங்கிய வள்ளலார்.. பின்னர் படிப்படியாகத் தம் நோக்கங்களை ஆய்வு செய்து விரிவாகப் பதிவு செய்தார்..

*"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன் பசியினால்*
*இளைத்தே வீடுதோ றிரந்தும்*
*பசியறா தயர்ந்த வெற்றரைக் கண்டுளம்*
*பதைத்தேன் நீடிய பிணியால் வருந்துகின்றோர்*
*என் நேர் உறக்கண்டுளந் துடித்தேன்*
*ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ் சிளைத்தவர்*
*தமைக்கண்டே இளைத்தேன்"*

- என்றும்,

*'சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே*
*சாத்திரச் சந்தடிகளிலே*
*கோத்திரச் சண்டையிலே*
*ஆதியிலே அபிமானத்*
*தலைகின்ற உலகீர்*
*அலைந்தலைந்து வீணேநீர்*
*அழிதல் அழகலவே''*

- என்றும் அழுத்தத்தோடு பேசினார்..

*'சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்*
*சாத்திரக் குப்பையும் தணித்தேன்.."*
*"மதத்திலே சமய வழக்கிலே மாயை*

*மருட்டிலே இருட்டிலே மறவாக் கதத்திலே*
*மனத்தை வைத்துவீண் பொழுது கழிக்கின்றார்..*
*குலத்திலே சமயக் குழியிலே நரகக்*

*குழியிலே குமைந்துவீண் பொழுது*
*நிலத்திலே போக்கி*
*மயங்கி யேமாந்து நிற்கின்றார்"*
*"சாதிகுலம் என்றும் சமயமதம் என்றும்*
*உபநீதியில் ஆச்சிரம நீட்டென்றும் -*
*ஓதுகின்ற பேயாட்ட மெல்லாம் பிதிர்ந்தொழிந்த*
*வேதியர்தம் வாயாட்டந் தீர்த்தனவே மற்று.. '*
- என்று தன் கருத்தைத் துணிந்து உரைத்தார்..

*'கங்கையிலே காவிரியிலே*
*நூறுமுறை மூழ்கி*
*கணக்கற்ற திருக்கோயில்*
*கால்தேற சுற்றி*
*வெங்கொடிய பலநோன்பு*
*ஏற்றுடலை வருத்தி*
*வேதங்கள் கூறுகின்ற*
*யாகமெல்லாம் செய்து*
*பங்கமிலா வேதியர்கை*
*பணம்அள்ளித் தந்து*
*பசுவதனைப் பூசித்து*
*அதன் கழிவை உண்டு*
*தங்களுயிர் மோட்சத்தை அடைவதற்கே முயலும்*
*தயவில்லார் சத்தியமாய்*
*முக்தியதை யடையார்.'*

- திருவருட்பா (இறவா நிலை)-

*'சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி*
*நேத்திரங்கள் போங்காட்ட நேராவே.'*
*"வேதாகமங்கள் என்று*
*வீண்வாதம் ஆடுகின்றீர்*
*வேதாகமத்தின் விளைவறியீர் - சூதராகச் சொன்ன அலால் உண்மை வெளி*
*தோன்ற உரைத்தல் இலை என்ன பயனோ இவை?"*

- என்று தம் கருத்துகளை ஆணித்தரமாக எடுத்துரைத்தார்..

*“இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை*
*இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு;*
*மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம*
*வழக்கெலாம் குழிகொட்டி மண்மூடிப் போட்டு;‘*

- என்றும்,

*“கூறுகின்ற சமயமெலாம் மதங்களெலாம் பிடித்துக்*
*கூவுகின்றார் பலனொன்றும் கொண்டறியார் வீணே*
*நீறுகின்றார் மண்ணாகி*
*நாறுகின்றார் அவர்போல்*
*நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனோ....‘*

- என்றும் சாதி சமயக் குப்பைகளைச் சாடுவார்..

*‘மாலும் துஞ்சுவான்; மலரவன் இறப்பான்;*
*மற்றை வானவர்*
*முற்றிலும் அழிவார்‘*

- என்று சமயக் கருத்தாளர் போலல்லாது வானவர்க்கும் அழிவுண்டு என்பதாகச் சமயங்கடந்து கூடுதலாகக் கருத்தறிவித்தவர்..

இந்த வகையில் வள்ளலார் அவர்கள் இந்தக் கருத்தை எட்டுவதற்குப் பல படிகளைத் தாண்டி வர வேண்டியிருந்தது..

யாதொன்றையும் அதன் அளவையியலுக்கு (இலாஷிக்கல்) அப்பால் கொண்டு சென்றால் அது எதிர்மறையாகிப் போகும் என்பது இயங்கியல் என்பர்..

அந்த வகையில் முழுமையான சிவனியக் கருத்தாளராக இருந்தவர்.. சமயப் பிடிப்போடு இருந்தவர்.. சடங்குகளைக் கடைபிடித்து ஒழுகி வந்தவர்.. பின்னர் அனைத்தையும் துறந்து சமயத்தை மறுத்து, சாதியை மறுத்து, வேதத்தை மறுத்து, வேதாந்தங்களை மறுத்து, சித்தாந்தத்தை மறுத்து, ஆகமங்களை மறுத்து, சமஸ்கிருத அதிகாரத்தை மறுத்து, மூட வழக்கங்களை மறுத்து.. பொதுமை அற உணர்வோடு புதிய குமுகத்தைப் படைக்கிற எண்ணங் கொள்ளும் அளவிற்கு மாறினார்..

குமுகத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வும், பசிப்பிணியும் அவர் உள்ளத்தை வருத்தியது..

பசியை ஒழிப்பதே முதன்மை நோக்கமாகக் கொண்டார்..

தன் மெய்யறிவு அவையில் ( சத்திய ஞான சபையில் ) வழிபாட்டு நிலைகளில் உருவ வழிபாடு, நெய்வேதியம், பூசை, திரிநீராட்டுப் போன்றவற்றை

மறுத்தார். பித்தளை முதலானவற்றில் செய்த குத்துவிளக்குகள் கொண்ட வழிபாடுகளுக்குக்கூட இடம் தராமல் தகரக் கண்ணாடி விளக்கொன்றை மட்டும் வைக்க இசைந்தார். தனக்கானத் தேவைக்காக மட்டும் கடவுளிடம் வழிபாடு செய்து கொள்ளும் நடைமுறையை மறுத்து, உலகமெல்லாம் உய்யும் படியும், அனைவருக்காகவும் வேண்டும் படியும் நெறிமுறைப்படுத்தினார்..

எவை எவை தமிழ்ச் சொற்கள் எவை எவை சமசுக்கிருதச் சொற்கள் என்று அறியப்படாத நிலையில் தமிழாகக் கருதித் தாம் ஏற்றுக் கொண்ட நெறிக்கான இயக்கத்தை 'சத்திய தர்ம சாலை' என்கிற அளவில் மக்களிடமிருந்து பெற்ற 800 காணி நிலத்தில் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்கிற வகையில் இலவய உண்டிச்சாலையை முதன்முதலில் தொடங்கினார்..

அவரின் இந்தக் கருத்துகளே ஆரியத்திற்கு எதிரானவை என்பதை மிக வெளிப்படையாகவே உணர்ந்த ஆரியப் பார்ப்பனிய கருத்தாளர்களும், சிவனியப் பற்றாளர்களும், சாதிய ஆளுமைச் சிந்தனையாளர்களும் அவரோடு ஒன்றுபடவில்லை என்பதோடு அவரை மறுத்தும் எதிர்த்தும் இயங்கத் தொடங்கினர்..

அந்த மறுப்புகளையும் எதிர்ப்புகளையும் எதிர்கொண்ட அளவிலேயும் அவர் இயங்க வேண்டியிருந்தது..

தம் மீதான சமயச் சார்பினரின் வழக்குகளைக்கூட எதிர்கொண்டார்..

எனவே

ஆரியத்திற்குச் சார்பான இயக்க நிலை என்பது வேறு.. ஆரியத்துக்கு எதிரான இயக்க நிலை என்பது வேறு..

அதுபோலவே, சாதியத்திற்கு, சமயங்களுக்குச் சார்பான இயக்க நிலை என்பது வேறு அவற்றுக்கு எதிரான இயக்க நிலை என்பது வேறு..

அதில் இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முந்தைய காலச்சூழலில் இந்த ஆரியப் பார்ப்பனிய, சாதிய வலிமை நிலைகளை ஒப்பிட்டு உணர்ந்து கொள்ள வேண்டும்..

எனவே.. வள்ளலார் இராமலிங்க அடிகளார் பெரும் போராட்டத்தோடையே தம் கருத்துகளை ஊன்றிச் செயல்பட வேண்டி இருந்தது என்பதும் அனைத்தையும் கடந்து அவர் எளிய பின்புலத்திலிருந்து பிறந்து வளர்ந்ததோடு ஆற்றலோடு உயர்ந்து தம் கருத்துக்களுக்குரிய வகையில் விரிவாகச் செயல்பட்ட பாங்கையும் உணர வேண்டும்..

அடுத்ததாக.. அவர்களின் செயல் கட்டமைப்புகள் சார்ந்த நிலைகளையும் அறிய வேண்டும்..

விவேகானந்தர் தன் இலக்குகளைச் செயல்படுத்துவதற்கு நிறுவனங்களை நிறுவி வகைப்படுத்தியிருக்கிறார்.. இராமகிருட்டிணர் பெயரில் 1897 இல் நிறுவனத்தை நிறுவினார்.. 1898 இல் வங்காளத்தில் பேலூர் மடத்தை உருவாக்கினார்.. அதற்கு எண்ணற்ற ஆங்கிலேயர்களே துணை நின்றனர்.. மார்க்ரேட் நோபல் அவர்கள் நிவேதிதா என்று பெயர் மாற்றம் செய்து கொண்டு பெருந்துணையாற்றினார்..கேப்டன் சேவியர், மெக்லியோட், ஓலே ஃபுல் எனப் பலர் தொடக்கக் காலங்களிலேயே துணை நின்றனர்.. ஆரியப் பார்ப்பனியச் சார்புடையவர்கள், இந்து மதச்சார்படையவர்கள், சிவனியச்சார்புடையவர்கள் என எண்ணற்றவர்கள் ஆதரவு என்ற பெயரில் பெருமளவில் பொருளியலாகவும் உழைப்பளவிலும் துணை நின்றனர்.. மேற்கு வங்கத்தில் விவேகானந்தர் பேலூரில் அவர் தொடங்கிய நிறுவனம் விவேகானந்தர் காலத்திற்குப் பிறகு அது மிகப் பெரிய அளவில் வளர்க்கப்பட்டது.. அதை இங்கிருந்து துணை நின்று வளர்த்ததில் ஆர் எஸ் எஸ் அமைப்புக்குப் பங்கு உண்டு.. தொடர்ந்து அவர்கள் அதன் சார்பில் வளர்த்த ஏறத்தாழ 750 கல்வி நிலையங்கள் கல்லூரிகளாகவும்.. மேல்நிலைப் பள்ளிகளாகவும்.. உயர்நிலைப் பள்ளிகளாகவும்..கல்விக்கூடங்களாகவும்.. விடுதிகளாகவும்.. ஏதிலியர் இல்லங்களாகவும்.. மருத்துவ நிறுவனங்களாகவும்.. செயல்பட்டு வருகின்றன..

இவையன்றி ஏறத்தாழ ஆயிரத்துக்கும் மேற்பட்டவை இராமகிருட்டிணா நிறுவனத்திடமிருந்து உதவி பெறுகிற வகையில் உண்டு..

மொத்தத்தில்.. ஏறத்தாழ ஆண்டுக்கு இரண்டு இலக்கம் மாணவர்கள் விவேகானந்தா, இராமகிருட்டிணா நிறுவனங்கள் வழி அவர்களின் கருத்துகளுக்கு இழுக்கப்பட்டு வருகின்றனர்...

அதற்கான செலவுகளை முழுக்க முழுக்க இராமகிருட்டிணா மடங்களே செய்கின்றன.. உலகெங்கும் உள்ள இந்துக்களிடமிருந்து என்ற பெயரில் உலகெங்கும் ஆரியப் பார்ப்பனர்களிடமிருந்தும் பார்ப்பனியச் சார்புடையவர்களிடமிருந்தும் பெரு முதலாளிகளிடமிருந்தும் மிகப்பெரும் நன்கொடைகள் பெற்றுக் குவிக்கின்றனர்..

அதனால் அவர்கள் இந்திய அரசின் அரவணைப்பில் ஆர் எஸ் எஸ் இன் துணையில் முழு அதிகாரங்களோடும் நிறுவி வேதாந்தக் கருத்துகளைப் பரப்பல் செய்கின்றனர்..

அவையன்றி, கன்னியாகுமரியில் விவேகானந்தா கேந்திரம் அமைத்தது.., பெரும்பாறையில் விவேகானந்தா மண்டபம் அமைத்தது, அதற்கான அனைத்து

அடிப்படை ஏந்துகளையும் நிலங்களையும் பறித்துக் கொண்டது, சென்னைக் கடற்கரையில் சிங்காரவேலர்க்குச் சொந்தமான நிலத்தில் அவருக்கு ஒரு நினைவு மண்டபமோ, சிலையோ நிறுவப்படாத நிலையில் பனியகத்தை (ஐஸ் ஹவுஸை) தமிழ்நாடு அரசிடமிருந்து 99 ஆண்டுகள் குத்தகைக்குப் பெற்று, பெரிய அளவில் விவேகானந்தர் மண்டபத்தை அமைத்துப் பரப்பல் செய்து வருவது.. இவையெல்லாம் திட்டமிட்ட ஆர் எஸ் எஸ் சார்புடைய செயல்கள் என அறிய வேண்டும்..

அதே போல், சங்கரமடங்களும் அளவற்ற பொருளியல் பின்புலம் உடையவையாக அரசு அதிகாரத்தின் அரவணைப்போடு ஆரியப் பார்ப்பனிய அடித்தள வலிவுகளோடு வளர்க்கப்பட்டுவருகின்றன.. அவற்றுக்கும் எண்ணற்ற கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் உண்டு

அவற்றின் வழியே பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் அவர்களின் வைதீகக் கருத்துகளுக்கு உள்ளிழுக்கப்படுகின்றனர்.. ஆக இவற்றின் வழியாகவெல்லாம் உள்ளிழுக்கப்படுகிற இளைஞர்கள் அவர்களின் வைதீக, வேத, புராண கருத்துகளுக்காட்பட்ட வகையில் சாதிய உணர்வோடும், மதவியல் உணர்வோடும், வருண வேறுபாட்டுணர்வுகளோடுமான வகையிலேயே கருத்தும் செயல் பயிற்சியும் பெற்று இயங்குகின்றனர்..

ஆனால்..

சத்திய தர்ம சாலை , சத்ய ஞான சபை, சமரச சன்மார்க்க இயக்கம் என்றெல்லாம் இயங்கிய வள்ளலார் அவர்களுக்கு மக்களின் துணையே பெரிய அளவில் இருந்ததேயன்றி ஆரியப் பார்ப்பனிய அதிகார வகுப்புகளோ, அரசு அதிகாரங்களோ, வெளிநாட்டு நிறுவனங்களோ, சமய இயக்கங்களோ, இந்து மதப் பெரு நிறுவனங்களோ எனப் பொருளியல் ஏந்துடைய எவையும் உதவியதில்லை என்று அறிய வேண்டும்..

சிலர் வள்ளலாரைச் சிவனியச்சார்பு நிலையில் அடக்குகிற பெரு முயற்சியைச் செய்தனர்..

திரு.வி.க. அவர்கள்கூட வள்ளலாரின் சமயச்சார்பற்ற போக்குகள் குறித்து எதுவும் கருத்தறிவிக்காததும், வள்ளலார் கருத்துகளுக்கு மறைமலை அடிகள் ஏற்பிசையாததும் இங்குக் கவனிக்கத்தக்கவை..

ஓமந்தூரார், பொள்ளாச்சி மகாலிங்கம் போன்றோரும் கூட வள்ளலாரின் சில கருத்துகளைத் தன் நிலைப்பாடுகளின் அளவுகளுக்குப் பயன்படுத்திக் கொண்ட வகையில் உயர்த்தி நிறுத்திக் காட்டிக் கொண்டனரே அல்லாமல், வள்ளலாரின் சாதிய எதிர்ப்பு, சமய எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, வேத எதிர்ப்பு, சமசுக்கிருத அதிகார எதிர்ப்பு, ஆகம எதிர்ப்பு என அந்த எதிர்ப்புகளோடெல்லாம் உடன்பட்டோ அல்லது அவ்வெதிர்ப்புக் கருத்துகளைப்

பரப்பல் செய்கிற வகையிலோ செயல்பட்டிடவில்லை என்பதையும் அறிதல் வேண்டும்..

வள்ளலார் தம்முடைய காலத்திலேயே தாம் கொண்ட கொள்கைகளை ஒரு பெரும் மக்கள் இயக்கமாகச் செய்யவில்லை..

ஒரு குமுக சீர்திருத்த இயக்கம் என்கிற அளவிலேயே அவர்தம் செயல் வட்டத்தை அமைத்துக் கொண்டார்.

எண் கோண வடிவிலான 'மெய்யறிவு அவை' (சத்திய ஞான சபை) அந்த அளவிலேயே இப்போதும் இருக்கிறதேயன்றி, அவர் மறைவுற்று 150 ஆண்டுகளாகியும் அது பெருமளவில் வளர்க்கப்பட்டு விடவில்லை..

கோட்பாடுகள் இயக்க வழிப்படுத்தப்படாததால் அதற்கான நிறுவன அமைப்புகள் உருவாக்கப் பெறவில்லை.. ஆரிய அதிகார வகுப்புகள் உருவாக்க விடவில்லை.. ( அவரையே வாழ விடாதவர்களாயிற்றே! ) அவர் கருத்து வழிகாட்டலிலானக் கல்விக்கூடங்கள் இல்லை, மருத்துவமனைகள் இல்லை, ஏதிலியர் பேணுகையகங்கள் இல்லை.. பின்பற்றாளர்களை ஒருமுகப்படுத்தி நெறிப்படுத்துகிற செயற்பாடுகள் இல்லை..

இந்த நிலைகள் ஒப்பிட்டு எண்ணப்பட வேண்டுவன..

ஆரிய வைதீகக் கருத்தாளர்கள் அமைப்பாக செயல்பட்டதும்.. தமிழிய அறக்கருத்தாளர்கள் அவ்வாறு திட்டமிட்டுச் செயல்படுவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொள்ளாமல் போனதும்..கொள்ளவிடாமல் போனதும்..பெரும் தேக்கத்தையே உருவாக்கியுள்ளன..

அவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு தமிழிய அற நெறியாளர்களை, தமிழ்க் குமுகச் சீர்திருத்தக் கருத்தாளர்களை, தமிழ்ப் பற்றாளர்களை, தமிழ் உணர்வாளர்களை, தமிழ்த் தேசிய உணர்வாளர்களை, தமிழ்க் குமுகமாற்றப் புரட்சியாளர்களை ஒருங்கிணைக்கிற, ஓரணிப்படுத்துகிற போக்கு வளர்க்கப்பட வேண்டுவது காலத்தின் கட்டாயம்..

அத்தகைய செயல்பாடுகளின் ஊடாக வள்ளலாரின் நோக்கம் கொண்ட அவையங்கள் ஏராளமாய் உருவாக்கப்பெற வேண்டும்..

வள்ளலாரின் பெயரில் உண்டி கொடுத்தால் மட்டும் போதாது.. சாதியற்ற, சமயமற்ற, வேதமற்ற, சமசுக்கிருத அதிகாரமற்ற, மூடக் கருத்துகளற்ற.. மெய்யறிவு (சத்ய ஞானம்) சமன்மை நன்னெறி (சமரச சன்மார்க்கம்) உணர்வையும் ஊட்டியாக வேண்டும்..பரப்பியாக வேண்டும்..

அதுவே அவரின் இருநூறாம் ஆண்டின் நிறைவு நினைவு நமக்கெல்லாம் உணர்த்துகிற பாடம் என உணர்வோம்..! ❖

# ஆறாம் திருமுறை இருட்டடிக்கப்படுவது ஏன்?

**விடுதலை இராசேந்திரன்**

சைவத்தில் பற்று வைத்துப் பிறகு சிந்தனை வளர்ச்சிப் போக்கில் சைவத்தின் மனித சமத்துவ எதிர்ப்புக் கருத்துக்களை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தியதுதான் வள்ளலாரின் தனித்துவம். அவர் சுய மத மறுப்பாளர். சைவத்துடனேயே அவர் வாழ்நாள் முழுதும் போராட வேண்டியிருந்தது.

“நாம் இலட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனினும் இலட்சியம் வைக்க வேண்டாம்”, இதுதான் தனது கடைசி பத்தாண்டுகளில் வள்ளலார் மக்களிடம் முன்வைத்த வேண்டுகோள்; அது மட்டுமல்ல சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும் இலட்சியம் வைக்க வேண்டாம்” என்று அனைத்து மதங்களையும் அதன் தத்துவங்களையும் எதிர்த்த புரட்சிக்காரராக அவர் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த காலம் 51 ஆண்டுகள். ஆனால் தனது ஆறாம் திருமுறையில் அவர் எழுதிய புரட்சிக் கருத்துக்கள் இன்று வரை இருட்டடிக்கப்படுகின்றன.

“ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்”; “கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் தருவே”; “அம்பலத்தரசே அருமருந்தே ஆனந்தத்தேனே, அருள் விருந்தே”; “அருட்ஜோதி தெய்வம் எனை ஆண்டு கொண்ட தெய்வம்”; “அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம்” போன்ற பாடல்களோடு “அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை” என்று மங்களம் பாடி அவரது சீடர்கள் பலரும் முடித்து விடுகிறார்கள். வரலாற்றில் பார்ப்பனியம் தனது எதிர்ப்பு சிந்தனைகளை ஜீரணித்து ஏப்பம் விட்ட சதிகளுக்கு இது மற்றொரு சான்று.

1872-இல் ஞானசபையை உருவாக்கிய அவர் அதற்கான விதிகளில் ஜாதி மறுப்பு, சமய மறுப்புகளை உள்ளடக்கமாக்கினார். வள்ளலார் தொடக்க காலங்களில், சைவப் பற்றோடு தாம் எழுதிய பாடல்களை அச்சு ஏற்றவே விரும்பவில்லை. ஆனால், மக்களிடத்தில் அதற்கு மிகவும் செல்வாக்கு இருந்தது. இறுக்கம் இரத்தின முதலியார் அவரது பாடல்களைத் தொகுக்க விரும்பி அடிகளாரின் சம்மதம் பெற பெரும் போராட்டமே நடத்த வேண்டி இருந்தது. ஒரு கட்டத்தில் அடிகளார் தனது பாடல்களை அனுப்பி ஒப்புதல்

தரும் வரை, தாம் ஒரு வேளை உணவை மட்டுமே உட்கொள்ள முடிவு எடுத்திருப்பதாக அடிகளாருக்கு கடிதம் எழுதினார். இதற்குப் பதறிப் போய் பதில் எழுதிய வள்ளலார், "தங்களது பட்டினி அறிவிப்பு தன்னை பாதித்தது என்றும், தாம் உண்ணும் உணவு உடம்பில் ஒட்ட மறுக்கிறது என்றும் இரண்டு மாதங்களில் பாடல்களை அனுப்பி வைப்பதாக" பதில் எழுதுகிறார். இவ்வளவு ஆர்வமும், துடிப்பும் உடைய இரத்தின முதலியார், ஆறாம் திருமுறையை பதிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. பழமைவாதிகளுக்கு ஆறாம் திருமுறை அதிர்ச்சி வைத்தியமாகிவிட்டது.

கடவுள் வழிபாடு என்பது, சடங்குகள், யாகங்கள், வேண்டுதல்களில் இல்லை. மனிதர்களுக்கு மனிதர்கள் உதவும் 'ஜீவகாருண்யம்' தான் கடவுள் வழிபாடு. அதுதான், சன்மார்க்கம்" என்றார். தமிழ்ச் சிந்தனை மரபில் இப்படி மனிதத்தைக் கடவுளாக்கிய வேறு சிந்தனையாளர் ஒருவர் கூட இல்லை. அதே போல் 'பசித்த வயிற்றுக்கு உணவு இடு' என்று வேத மத மரபில் எந்த ரிக்ஷியும், அவதாரமும், எந்த வேதமும், புராணமும், மகான்களும் கூறிய சான்றுகளே இல்லை.

இன்னும் ஒரு படி மேலே போய் தனது சன்மார்க்க நெறிக்கு அவர் தரும் விளக்கம் கடவுள், மதம் மறுப்பாகவே இருக்கிறது. உபதேசக் குறிப்புகளில் அவர் இவ்வாறு எழுதுகிறார்.

"சமயத் தெய்வங்களில் வழிபாடு செய்து அந்த சமயத் தெய்வங்களை பெற்றுக் கொண்ட அற்ப சித்தியில் அவர்கள் மயங்கி மகிழ்ந்து அகங்கரித்து மேலேற வேண்டிய படிகள் எல்லாம் ஏறி பூரண சித்தியை அடையாமல், தடைப்பட்டு நிற்றல் நில்லாமல் சர்வ சித்தியை அடைய கடவுள் ஒருவர் உண்டென்றும் அவரை உண்மையின் பால் வழிபாடு செய்து பூரண சித்தியைப் பெற வேண்டும் என்பதே சன்மார்க்க சங்கத்தின் கோட்பாடு" என்கிறார்.

சமய மறுப்பு, தெய்வ உருவம், சடங்கு மறுப்பு சன்மார்க்கத்தின் கோட்பாடு. என்று 1872 லேயே துணிவோடு அறிவித்த வள்ளலாரை வைதீகம் எப்படி ஏற்கும் ?

வள்ளலார் தனது பாடல் தொகுப்புக்கு பெயர் எதுவும் சூட்டவில்லை; அவரது முதன்மை சீடரான வேலாயுத முதலியார் தான் 'திருவருட்பா' எனப் பெயர் சூட்டினார். தெய்வத் தன்மை கொண்ட பாடல்கள் என்ற பொருளிலே அப்பெயர் சூட்டப் பெற்றது. ஆறு திருமுறைகளாகத் தொகுத்ததும் அவரே; 'திருமுறை' என்றால் 'பகுதி' என்று பொருள். இதில் தனது புரட்சிக்கரக் கருத்துக்களை பதிவு செய்த இறுதிக்கால பாடல்கள் ஆறாம் திருமுறையாக தொகுக்கப் பெற்றாலும் அதை உடனடியாக வெளியிட வேண்டாம் என்பதே அடிகளாரின் கருத்து . முதலில் வெளிவந்தது அய்ந்து திருமுறைகள் தான்.

13 ஆண்டுகள் கழித்து 1880 இல் வள்ளலார் மறைவுக்குப் பிறகு தான் 6ஆம் திருமுறை வெளிவந்தது.

அய்ந்து திருமுறைகளை வெளியிட்ட வேலாயுதம் முதலியார், ஆறாம் திருமுறையை வெளியிட ஆர்வம் காட்டாமைக்குக் காரணம் அவரது பழமையில் ஊறிய சைவப்பற்று தான். அது மட்டுமல்ல, முதல் 5 தொகுதிகள் வெளி வருவதில் பேரார்வம் காட்டிய இறுக்கம் இரத்தினம், புதுவை வேலு முதலியார், சிவாநந்தபுரம் செல்வராய முதலியார், பொருள் உதவி செய்த சோமசுந்தரம் செட்டியார் ஆகியோரும் 6ஆம் திருமுறை வெளி வருவதில் ஆர்வமின்றி ஒதுங்கி விட்டனர். ஏதோ, வள்ளலார் கேட்டுக் கொண்டதற்காக அவருக்கு அஞ்சி வேலாயுத முதலியார் - அவர் உயிருடன் இருக்கும் வரை வெளியிடவில்லை என்று ம.பொ.சிவஞானம் (மபொசி) எழுதுவது உண்மைக்கு மாறானது என்கிறார், ஆய்வாளர் சரவணன். வள்ளலாருக்கே 6ஆம் திருமுறையில் உடன்பாடு இல்லை என்ற ஒரு பொய்த் தோற்றத்தை உருவாக்குவதே ம.பொ.சி.யின் உள் நோக்கம். உண்மை என்னவென்றால் வேலாயுத முதலியார் வாழ்ந்த காலத்திலேயே 1885இல் ஆறாம் திருமுறை வெளியிடப்பட்டு விட்டது. 1889இல் தான் முதலியார் மரணமடைகிறார். வேலாயுத முதலியாருக்கு அச்சிட மனமில்லாத காரணத்தால் வேலூர் பத்மநாப முதலியார் வெளியிட்டார் என்கிறார் ஆய்வாளர் பா.சரவணன்.

இந்தப் பின்னணியில் அடிகளாரின் திருவருட்பாவிற்குப் பழமையில் ஊறிப்போன தீவிர சைவர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு வந்தது, அதில் முதல் வரிசையில் நின்றவர் யாழ்ப்பாணத்தில் பிறந்த ஆறுமுக நாவலர், தமிழகத்தோடு குறிப்பாக சிதம்பரம் கோயிலோடு நெருக்கமாக இருந்தார்; ஐந்து முறை தமிழகம் வந்த அவர் சிதம்பரத்திலேயே தங்கி 'சைவ பிரகாச வித்யா சாலை' எனும் பாடசாலையை நிறுவினார்.வேதத்தை விட ஆகமம் உயர்ந்தது, ஆகமம் சைவத்திற்கே உரியது என்ற கருத்துடைய அவர் தில்லை தீட்சிதர்களைக் கடுமையாக சாடியவர். அவர்கள் சிவ தீட்சை பெறாதவர்கள் அவர்கள் கையில் இருந்து விபூதி வாங்கக் கூடாது, அவர்களுக்கு பூஜைகள் நடத்தும் உரிமை கிடையாது என்று கடுமையாக எதிர்த்தார், இதனால் தீட்சிதப் பார்ப்பனர்கள் நாவலர் மீது பகைக் கொண்டனர். நாவலருக்கு எதிராக போலியான அர்ச்சகர்களை உருவாக்கி அவர் மீது சேறு வாரித் தூற்றி இழிப் பிரச்சாரங்களைச் செய்தனர். நாவலர் தீட்சிதர்களுக்குப் பதிலடி தந்து வந்தார். அதே நாவலர் வள்ளலாரின் பாடல்கள் 'திருவருட்பா' அல்ல என்று மறுத்தார், தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் எனும் ஐந்து புராணங்கள் தான் திருவருட்பாவே தவிர மற்றவை அல்ல என்றார், வள்ளலார் பாடல்களை நேரடியாகக் கண்டித்து மருட்பா என்றார், பார்ப்பனர்களைக் கடுமையாகச் சாடும் திரு மந்திரத்தையே அருட்பாப் பட்டியலில் சேர்க்காதவர் அவர். ஆறுமுக நாவலர் கருத்துக்கு எதிராக

1868இல் 'திருவருட்பா தூசன பரிகாரம்' எனும் நூலைத் திருமயிலை சண்முகம் பிள்ளை என்பவர் எழுதி வெளியிட்டார், அருட்பா மருட்பா விவாதங்கள் அனல் பறக்கத் தொடங்கின; அடிகளாருக்கு ஆதரவாக அட்டாவதனம் வீராசாமி செட்டியார், இறுக்கம் இரத்தினம் முதலியார், பூவை கல்யாணசுந்தர முதலியார், செய்கு தம்பிப் பாவலர் உள்ளிட்ட சுமார் 23 பேர் களமிறங்கினர். மருட்பாவுக்காகக் களமிறங்கியவர்களில் திருவாடுதுறை வேதாரண்யம், திருவண்ணாமலை மற்றும் தருமபுரம் ஆதீனங்கள் உவே சாமிநாதையர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, நா. கதிரைவேற் பிள்ளை, திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் உள்ளிட்ட சுமார் 15 பேர்.

அருட்பா எதிர் மருட்பா மோதல் குறித்துப் பல உண்மைக்கு மாறான தகவல்கள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை சுருக்கமாக இவ்வாறு பட்டியலிடலாம்.

- ஆறுமுக நாவலர், கதிரை வேற்பிள்ளை முதலியோர் வள்ளலாரைத் தனிப்பட்ட முறையில் இழிவு செய்யும் பரப்புரையில் இறங்கினர். அவர் பிறந்த, 'கருணீகர்' என்ற பிரிவு சைவத்தில் கீழானது என்று ஜாதிகளின் அடிப்படையிலும், இழிவு செய்தனர்.
- ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை கடுமையாக விமர்சித்துத் துண்டுப் பிரச்சாரங்கள், நூல்கள் எழுதி வெளியிட்டனர்.
- தன்னை 'சாமி' என்றோ, 'அடிகள்' என்றோ அழைப்பதை வள்ளலார் விரும்பவில்லை. தனது பாடல் தொகுப்பை வேலாயுத முதலியார் அந்தப் பெயர்களோடு வெளியிட்ட போது அதில், கடும் கோபமடைந்த வள்ளலார், இராமலிங்கம் பிள்ளை என்று மட்டுமே தனது பெயரைப் போட வேண்டும் என்றார். ஆனால் தனக்குத் தானே, 'சாமி' என்று தற்பெருமையோடு பெயர் சூட்டிக் கொண்டதாக, கதிரை வேற்பிள்ளை, போன்றவர்கள் பிரச்சாரம் செய்தார்கள்.
- அப்பர், சம்மந்தர், நாவுக்கரசர் போன்றவர்கள் அறிவியலுக்கு எதிரான 'வித்தை'களைக் காட்டிச் சைவத்துக்கு இழுத்தது போல வள்ளலாரும் செத்தவரை எழுப்பினார் என்ற கதையும் உண்டு. ஆறுமுக நாவலர், வள்ளலார் மோசடி வித்தைகளைச் செய்கிறார் என்பதை மட்டும் கண்டித்தார். அப்பர் சம்பந்தர்களைக் கண்டிக்கவில்லை.
- தில்லை தீட்சிதர்களுக்கும் வள்ளலாருக்கும் இடையே பல முரண்பாடுகள் உண்டு. சிதம்பரத்தில் நிலையாகத் தங்காமல் அவர் வெளியேறியதற்கு அடிப்படையான காரணம் தீட்சிதர்கள் மீது அவர் கொண்டிருந்த மாறுபாடுகளும், வெறுப்பும்தான். அதே நேரத்தில் தீட்சிதர்களை நேரடியாகக் கண்டித்த ஆறுமுகநாவலரைப் பழிவாங்க, வள்ளலாரை, தீட்சிதர்கள்

பயன்படுத்த முயன்றனர். சிதம்பரம் பேரம்பலத்தில் ஆறுமுக நாவலருக்கு எதிராக தீட்சதர்கள் திரண்டு, அதில் உரையாற்ற - வள்ளலாரை அழைத்தனர் (1869-ஜூன் 7ஆம் நாள்).

- பேரம்பலக் கூட்டத்தில் என்ன நடந்தது என்பதை 'ஃபிரிமேன்' பத்திரிகை ( 1869 டிசம். 16 ) விரிவாகப் பதிவு செய்தது. வள்ளலார் பேசும்போது, "ஆறுமுகநாவலரின் 'நாவலர்' பட்டம் குறித்துக் கடுமையாக விமர்சனம் செய்தார். நா ஒ அலர் எனப் பிரித்து பொய்யர்; நாவில் பழி சொல் உடையவர் எனப் பலவாறு பொருள் உண்டு என்று பேசினார். அப்போது ஈசான சிவாச்சாரியார் என்பவர் எழுந்து உங்கள் கருத்துப்படி தான் திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் பட்டம் தந்ததா? என்று எதிர் கேள்வி கேட்டார்.

அப்போது தலைமை தீட்சிதர் சபா நடேசர் ஆவேசத்துடன் ஆறுமுகநாவலர் இருக்கும் இடத்துக்குச் சென்று, அவரை இழுத்துக் கொண்டு வந்து நய்யப்புடைப்பதற்குத் தாம் விரும்புவதாகவும் மற்றவர்கள் தமக்கு உதவியாய் வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ஆயினும் எவரும் போகவில்லை" என்று அந்த ஏடு பதிவு செய்துள்ளது. இந்த இரண்டு நிகழ்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆறுமுக நாவலர் கடலூர் மஞ்சக் குப்பம் நீதிமன்றத்தில் தீட்சதர், இராமலிங்கர் உள்ளிட்ட ஆறுபேர் மீது வழக்குத் தொடர்ந்தார். (தீட்சிதப் பார்ப்பனர்களின் பிரித்தாளும் சூழ்ச்சியினையும் விவாதத்தை வன்முறையாக மாற்றத் துடித்ததையும் இதிலிருந்து உணர முடியும்). வழக்குப் பற்றிய முழுமையான சரியான பதிவுகள் இல்லை என்கிறார், ஆய்வாளர் ப. சரவணன். இதில் வள்ளலார் மீது தொடரப்பட்டது மான நட்ட வழக்கு. தீட்சிதர்கள் மீது மான நட்டம் மற்றும் அச்சுறுத்தல் வழக்குகள். தீர்ப்பில் நான்கு தீட்சிதர்களும் விடுவிக்கப்பட்டனர். வள்ளலாரும் விடுவிக்கப்பட்டார். முதல் எதிரி சபாநடேசர் தீட்சதருக்கு ரூ. 50 அபராதம் தவறினால் ஒரு மாதம் சிறை; தீர்ப்பு வழங்கிய நீதிபதி ரோபார்ட்ஸ். தீர்ப்பு வழங்கியது முத்துசாமி அய்யர் என்பது தவறான வதந்தி.

- முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய சேதி - வழக்கு அருட்பா எதிர்மருட்பா தொடர்பானது அல்ல; மான நட்ட வழக்கு என்பதுதான் உண்மை. ஆனால் வையாபுரிப் பிள்ளை, மா.பொ.சி. மற்றும் குமுதம் ஏட்டில், தொடர் எழுதிய துமிலன் போன்றவர்கள் இராமலிங்கர் எழுதியது அருட்பா இல்லை என்பதற்காகவே வழக்கு தொடரப்பட்டதாகக் கற்பனையான கதைகளை வரலாறுகளாக எழுதி வைத்துள்ளனர். அதுவும் சாகித்ய அகாடமி பரிசு பெற்ற தனது 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' நூலிலேயே தவறான தகவலைப் பதிவு செய்துள்ளார் ம.பொ.சி.

- நாவலர் என்ற சொல்லுக்கு இராமலிங்கர் தந்த பொருள் விளக்கம் தீட்சதர்கள் தந்த அழுத்தத்தினால் தான்; பேரம்பலக் கூட்டத்தில் நாவலர் சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருமாறு தீட்சதர்கள் கேட்டதால் அது குறித்து மட்டுமே பேசினார். வேறு எதுவும் ஆறுமுக நாவலர் பற்றி இராமலிங்கர் பேசவில்லை என்றும், ஈசான சிவாச்சாரியார் தன்னை நோக்கிக் கேள்வி எழுப்பிய போதும் வள்ளலார் கண்மூடி அமைதியே காத்தார்' என்றும் தனஞ்செய இராச சிங்கம் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

- மேலே விவரிக்கப்பட்டது முதற்கட்ட போராட்டம் தான். அதற்குப் பிறகு ஆறுமுகநாவலரின் மாணவர் ந. கதிரைவேற்பிள்ளை இருபது ஆண்டுகள் கழித்து, இப்போராட்டத்தை மீண்டும் 1903இல் தொடங்கினார்.

- வள்ளலார் குறித்துக் கதிரைவேற்பிள்ளை தவறாகப் பல நூல்களை எழுதினார். அதற்காக வள்ளலாரின் தமயன் மகன் வடிவேலுப் பிள்ளை அவர் மீது மான நட்ட வழக்குத் தொடர்ந்தார். உ.வே.சாமிநாத அய்யர் மற்றும் கதிரை வேற்பிள்ளையால் சிதம்பரத்திலிருந்து, திரட்டி வரப்பட்டவர்களும் திரு.வி.க.வும் வள்ளலாருக்கு எதிராகச் சாட்சி கூறினார்கள்.

சாட்சி கூற வந்ததால் திரு.வி.க. தேர்வு எழுத முடியாமல் அவரது உயர்கல்வி தடைபட்டது என்று ம.பொ.சி. இதிலும் உண்மைக்கு மாறான கருத்தை எழுதிப் பரப்பினார். உண்மையில் கதிரைவேற் பிள்ளைக்கும், வில்வபதி செட்டியார் என்பவருக்கும் நடந்த அடிதடிச் சண்டை தொடர்பான வழக்கில் சாட்சி கூறப் போனதாலேயே திரு.வி.க. தனது உயர்கல்வியைத் தொடர முடியவில்லை.

- வழக்கின் தீர்ப்பு கதிரைவேற்பிள்ளைக்குச் சாதகமாகவே இருந்தது உண்மைதான்; ஆனாலும் சாட்சியங்களாக வள்ளலாருக்கு எதிராக எழுதப்பட்ட நூல்கள் என்று கதிரைவேற்பிள்ளை முன் வைத்தது அவரே எழுதிய நூல்கள் தான். அவர் சாட்சிக்கு வைத்த பல நூல்கள் அச்சிடப்படவேயில்லை. ( உ.ம் - குதர்க்காரணிய நாச மகா பரசு கண்டனம்) மறைமலையடிகளும் செய்கு தம்பிப் பாவலரும் ( பிறப்பால் ஓர் இஸ்லாமியர் ). வள்ளலார் பக்கமே நின்று நியாயங்களைப் பேசினர்.

- வள்ளலார் தொடங்கிய ஞான சபையில் இணைந்த பலரும் தனது கொள்கைகளுக்கு நேர்மாறாகச் செயல்படுவதை உணர்ந்த அவர், சபையை இழுத்துப் பூட்டுப் போட்டுப் பூட்டி, சாவியைத் தன்வசம் எடுத்துக் கொண்டார். அவர் ஒளி வடிவத்தில் கடவுளைப் பார்த்ததுக்கூட எதிர்காலத்தில் குத்துவிளக்காக மாறி இந்து மதச் சடங்காகி விடக்கூடாது என்பதற்காக விளக்கு தகரத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றார்.

- ஒரு முறை காஞ்சி சங்கராச்சாரியுடன் உரையாடியபோது சமஸ்கிருதமே 'மாத்ரு பாஜை' ( அனைத்து மொழிக்கும் தாய் ) என்று கூறியபோது, அப்படியானால் தமிழ் 'பித்ரு பாஜை' ( தந்தை மொழி ) என்று வாதிட்டு, தமிழின் சிறப்பை விரிவாக விளக்கி வாதம் செய்திருக்கிறார், அடிகளார்.
- பூணூல், உச்சிக்குடுமி என்ற பார்ப்பன அடையாளங்களுக்கு ஞானசபையில் இடமில்லை. அதனால் அவரது சீடரான சபாபதி சிவாச்சாரியார் அந்த அடையாளங்களை நீக்கிக் கொண்டார்.
- தில்லை நடராசன் கோயிலுக்குத் தரிசிக்கச் சென்ற அடிகளார், இரகசிய லிங்கத்தைக் காட்டுமாறு தீட்சதர்களிடம் கேட்க, தீட்சதர்கள், கோயிலுக்குள் உங்களுக்கான இடத்தில் போய் தரிசியுங்கள்; கர்ப்பகிரகம் அருகே வரக் கூடாது என்று கூறினர். சினமடைந்த வள்ளலார், உங்களுக்கு எதிராக ஒரு தலம் உண்டாக்கி, நடராசனையும் அங்கே அழைத்துக் கொள்கிறேன் என்று சபதம் செய்தார். தில்லைக்கு அருகே வடலூரில் தனது சன்மார்க்க சபையை உருவாக்கியதற்கு காரணம் அதுதான் என்கிறார் பு. பாலசுந்தரநாயகர். தனது "இராமலிங்கப் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் - மருட்பா மறுப்பு" என்ற நூலில் இதைப் பதிவாக்கியுள்ளார். திரு.வி.க.வும் தனது வாழ்க்கைக் குறிப்பில் இதைப் பதிவு செய்கிறார். உண்மையில் இது வள்ளலாரை எதிர்த்து எழுதப்பட்ட நூல். அப்படி வள்ளலார் வடலூரில் உருவாக்கிய கட்டிடம் இடி விழுந்து தகர்ந்து விட்டது என்ற செய்தியும் வள்ளலாருக்கு எதிராக மேற்குறிப்பிட்ட நாயகர் தனது நூலில் எழுதினார். அது உண்மையல்ல; அந்தக் கட்டிடம் தாமரை வடிவில் இப்போதும் காட்சியளிக்கிறது. கட்டடத்துக்கு முன்பு போடப்பட்ட பந்தல்தான் தீப்பற்றி எரிந்தது.
- ம.பொ.சி.யும் தில்லை கோயிலில் தீட்சதர்கள் வள்ளலாரை அவமதித்ததற்குச் சான்றுகள் இல்லை என்றே எழுதுகிறார். "வருவார் அழைத்து வாடி வடலூர் வடதிசைக்கே" என்ற கீர்த்தனை ஒன்றைத் தவிர வேறு சான்றுகள் இல்லை என்று ம.பொ.சி. சாதிக்கிறார். உண்மையில் வள்ளலாரே அருட்பா உரை நடைப் பகுதியில் சிதம்பரம் கோயிலைத் தான் தனது திருச்சபைகளின் வழியாக புதிதாக உருவாக்கினேன்" என்று எழுதியிருக்கிறார். தனது ஞானசபைக்கு அதுதான் உண்மை. சிதம்பரம் என்பதை வலியுறுத்த 'உத்திரஞான சிதம்பரம்' என்றே வள்ளலார் அழைத்தார், ம.பொ.சி.யின் ஒரு சார்புப் பார்வையினால் இந்த ஆதாரங்களை மறைத்துத் தனது 'விபீடண'ச் சிந்தனையை வெளிப்படுத்துகிறார்.
- சமரச சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை, சுத்த சன்மார்க்க சத்திய தருமச் சால என்ற பெயர்களோடு தொடக்கத்தில் இணைத்திருந்த 'வேத' என்ற சொல்லைப் பிறகு முற்றிலுமாக நீக்கினார்.

- வடலூருக்குப் பெரியார் ஒருமுறை நேரில் பார்வையிடச் சென்ற போது, அசைவ உணவு உண்போருக்கு அனுமதி இல்லை என்ற அறிவிப்புப் பலகையைப் பார்த்து உள்ளே செல்ல நிர்வாகிகள் அழைத்தும் மறுத்து விட்டார். ஆறாம் திருமுறையில் தேர்வு செய்த பாடல் தொகுப்பைச் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் சார்பில் பெரியார் வெளியிட்டார்.

- தொடர்ந்து 'ஞானசபை' வருவதை நிறுத்திக் கொண்ட வள்ளலார் தனது சித்தி விளாகம் குடியிருப்பிலேயே தங்கிக் கொண்டார். எப்போதோ ஒருமுறை வருவதும் சன்மார்க்கிகளைச் சந்திப்பதும் வழக்கமாக்கிக் கொண்டார். இறுதியாக தன் குடிலுக்குள் சென்று கதவை தாளிட்டுக் கொண்டவர் திரும்பவே இல்லை. ( 1874 - ஜன. .30 )

விடைபெறும் முன்அவர் "கடை விரித்தேன் கொள்வாரில்லை" என்று கூறியதாகக் கூறப்படுகிறது. இதற்கு வரலாற்றுப் பதிவு இல்லை; செவி வழிச் செய்தி தான்.

சொந்த சைவ நெறியையே எதிர்த்து மதம், குலம் சார்ந்த ஆச்சாரங்களைப் புறக்கணித்து மனிதர் மீது மனிதர் காட்டும் அன்பு எனும் ஜீவகாருண்யமே கடவுள் என்று பறைசாற்றி கோயில், சிலை, ஆகமம், சடங்குகளைப் புறக்கணித்து, காவி உடைக்கு மாற்றாக வெண்ணிற உடை தரித்து பார்ப்பன வேத அடையாளங்களை நீக்கிக் கோயில் என்ற நிறுவனத்தைப் புறக்கணித்துப் புலால் மது அருந்தாத எந்தச் சாதியும் நேரடியாக ஒளி வடிவக் கடவுளை வணங்கலாம் என்ற சமத்துவத்தை உருவாக்கி அர்ச்சகர் எனும் இடைத்தரகர்களை ஒழித்து வாழ்ந்து காட்டிய வள்ளலார் ஒரு புரட்சித் துறவி! பார்ப்பன எதிர்ப்பு மரபின் வரலாற்றுத் தொடர்ச்சி!

ஆதார நூல்கள் :


1) இராமலிங்க அடிகள் வரலாறு - ஊரன்அடிகளார்
2) அருட்பா X மருட்பா - பா.சரவணன்.
3) தமிழகத்தில் சமூக சீர்திருத்தம் - இரு நூற்றாண்டு வரலாறு - பேராசிரியர் அருணன்
4) வடலூரும் ஈரோடும் - திருக்குறள் முனுசாமி
5) வள்ளலாரின் ஆறாம் திருமறை பாடல்தொகுப்பு - குடி அரசு வெளியீடு
6) திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள்
7) ஆறுமுக நாவலர் சரித்திரம் - கைலாசப் பிள்ளை
8) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு - மா.பொ.சி
9) கா.சுப்பிரமணியப் பிள்ளை - இலக்கிய வரலாறு.

# வெள்ளை வேட்டி மரபும் காவி வேட்டி மரபும்

**- ரெங்கையா முருகன்**

ஆழ்வார்கள், நாயன்மார்கள் காலத்திற்குப் பிறகு தோன்றிய சமயப் பெரியார்களை நினைவு கூறுகையில் பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் மூவரும் இயல்பாக நினைவுக்கு வருபவர்கள்.

பட்டினத்தார் கடுந்துறவு இயக்கத்தைச் சார்ந்தவர். தாயுமானவர் பொதுநெறி இயக்கத்துக்கு வித்திட்டவர். இராமலிங்க சுவாமிகளோ சமயத்தோடு சமூகத் தொண்டையும் இணைத்தவர்.

தமிழ்ச் சமூக மறுமலர்ச்சி இயக்க வரலாற்றை வள்ளலாரிடமிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். இராமலிங்க சுவாமிகள் தாம் வாழையடி வாழையென வரும் திருச்சிற்றம்பலக் கூட்ட மரபில் வந்தவனென்று ஓர் இடத்தில் கூறுவார்.

தன்னை எப்பொழுதும் சிதம்பரம் இராமலிங்கம் என்று மட்டுமே அழைத்துக் கொண்டவர். பிற்காலத்தில் வள்ளலார் என்ற சிறப்புப் பெயர் எப்படி இராமலிங்க சுவாமிகளுக்கு வழங்கலாயிற்று என்பதையும் பார்க்க வேண்டி உள்ளது.

1867-ஆம் ஆண்டு வெளியான திருவருட்பா முதற் புத்தகத்தில் திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பா என்று தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களால் சிறப்புப் பெயரிட்டுப் புத்தகம் வெளியானது. புத்தக முகப்பில் இப்பெயரைக் கண்டதும் "திருவருட் பிரகாச வள்ளல் ஆர்? என்று கேட்கிற இராமலிங்கம் என்று வைத்துக் கொள்ள வேண்டுமோ?" என்று வினவியுள்ளார். இறுக்கம் இரத்தினசாமி முதலியாரிடம்,'இவ்வாறு பெயரிடுவதில் எனக்கு விருப்பம் இல்லை' என்றும் அறிவுறுத்தினார்.

திருவருட்பா, அருட்பிரகாச வள்ளலார் என்ற பெயரிட்ட தலைப்பு ஆறுமுக நாவலர் அவர்களுக்கு உடன்பட முடியவில்லை. அதன் பின்பு வழக்குமன்றம் வரை சென்று அருட்பா X மருட்பா தர்க்க விவாதங்கள் நடந்தது தனிக்கதை.

இராமலிங்க சுவாமிகள் 1851-ல் 'ஒழிவிலொடுக்கம்' என்ற நூலினை முதன் முதலாகப் பதிப்பிக்கிறார். இந்த நூலில் வரும் சிறப்புப் பாயிரச் செய்யுள் "வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்" என்ற வெண்பாவுக்கு விரிவான விருத்தி உரை செய்து பதிப்பிக்கிறார்.

இதில் வள்ளல் என்னும் திருப்பெயர் வள்ளலார் என்ற பெயருடையவர். காழி ஞானசம்பந்தனை ஞான குருவாகக் கொண்டு சீர்காழி என்ற ஊரில் பிறந்த கண்ணுடைய வள்ளலார். இவரே ஒழுவிலொடுக்க நூலாசிரியர். இந்த நூல் ஐக்கியவாத சைவ நூல். கண்ணுடைய வள்ளலார் ஐக்கியவாத சைவர் என்றும் கருத இடம் உண்டு.

வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் பாலமாக இணைக்கும் சமரச நூல் இது. அந்தக் காலங்களில் சைவ மடங்களில் ஒழுவிலொடுக்க நூல் விலக்கப்பட்ட நூலாகவே இருந்துள்ளது.

கண்ணுடைய வள்ளலார் சித்தாந்தச் சைவ நெறியிலிருந்து விலகி ஐக்கியவாத சைவ நெறிக் கொள்கைக்கு வித்திட்டு சைவக் கோட்பாட்டின் முக்கிய ஞான நெறியாகிய சரியை, கிரியை, யோகம் மூன்று வழிகளையும் பழித்துத் தற்போது வொடுக்கம் வேண்டியபடி எழுதிய நூல் ஒழுவிலொடுக்கம். இந்த நூலினை எழுதியவர் வள்ளல் பரம்பரையினர்.

மெய்கண்ட தேவநாயனார் பரம்பரையினர் மரபுக்கு விலகிய கொள்கையாக இருந்ததால் மனமுடைந்து தன்னுடைய கோபத்தை வெளிக்காட்டினார்களாம்.

அதற்கு அறிகுறியாக தந்து திருமேனியில் இடப்பட்ட விபூதியை அழித்துச் சைவ சமயத்துக்குக் கேடு வந்துள்ளதே என்று கூறியதாகவும், அதனால் வள்ளலாதீனத்துப் பரம்பரையினர் கைகளில் குறிகளையிட்டு அழிக்கும் வழக்கமும் இருந்துள்ளது என்ற ஒரு கதையும் உண்டு.

500 ஆண்டுகளுக்கு முந்தைய சீர்காழி வள்ளலார் ஆதினம் காலப் போக்கில் அடையாளம் இல்லாமல் சீரழிந்து விட்டது. மு. அருணாசலம் இந்த மடம் குறித்துக் கூறுகையில் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மிகவும் இழிந்த நிலைக்கு வந்து அடியோடு மறைந்து விட்டது என்கிறார்.

ஐக்கியவாதச் சைவர் காழி கண்ணுடைய வள்ளலாரும், தாயுமானசுவாமிகள், வள்ளலார் கொள்கை அளவில் பல்வேறு விசயங்களில் ஒத்துப் போவதை காண முடிகிறது. கண்ணுடைய வள்ளல் ஆதினத்தை வெள்ளை வேட்டி ஆதினம் என்றும் அழைப்பர். மேலும் இல்லறத்திலிருந்து துறவை மேற்கொள்வார்கள்.

தாயுமானவரும் இல்லறத்திலிருந்து துறவு நிலைக்கு வந்த வெள்ளாடை தரித்த மகான். சித்தாந்தத்தையும் வேதாந்தத்தையும் இணைத்துச் சமரச சன்மார்க்க நெறிக்கு வித்திட்டார். “வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின் விளங்கு பரம்பொருளே நின் விளையாட்டல்லன்''என்றும், ‘‘கிழக்கு மேற்கறியான் வழக்குப் பேச புகுந்தானென்ன'' போன்ற பல பாடல் மூலம் அறியப்படுகிறது.

தாயுமானவர் பாடல்கள் சைவமடங்களில் பிரதானமாகக் கொள்வதில்லை என்பதையும் கவனிக்க வேண்டி உள்ளது.

இந்த வாரிசின் தொடர்ச்சியாக இராமலிங்க சுவாமிகளும் ஞானசம்பந்தரைக் குருவாகக் கொண்டு சைவ நூல்களிடையே திளைத்துச் சைவ சமயத்தில் ஒளிந்து கிடக்கும் சாதி மதங்களைப் பழிக்கும் சமய சமூகச் சீர்திருத்தப் பாடல்களாக ஆறாம் திருமுறையில் வெளியிட்டார்.

தமிழ் மரபில் சந்நியாசம் கிடையாது. துறவு மட்டுமே உண்டு. தமிழக ஞானிகள் பலரும் வெள்ளாடைத் துறவிகளே. சமயக் குரவர்களும், சந்தானக் குரவர்களும் வெள்ளாடைத் துறவிகளே.

குருபரம்பரை ப்ரபாவத்தில் தென்கலை வைணவரான ராமானுஜர் கூட வெள்ளாடை அணிந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (தகவல்: சு. வெங்கட்ராமன்).

தமிழகத் துறவு மரபில் கஷாயம் (காவி) அணிவது புறச் சமயங்களிலிருந்து புகுந்து விட்டது.

கோவிலூர் மடத்து ஆதினத்தில் முதல் நான்கு பட்டம் மடாதிபதிகள் வெள்ளை வேட்டி அணிந்தவர்கள்தான். சிருங்கேரி மடாதிபதி கோவிலூர் ஆதினத்திற்கு ஐந்தாம் பட்ட மடாதிபதியின் ஆட்சியின் போது விஜயம் செய்த பிறகு காவி உடைக்கு மாறிவிடுகின்றனர்.

பாம்பன் சுவாமிகள் கூட முதலில் வெள்ளாடை அணிந்தவர். காசிக்கு போய் வந்த பின்னர் காவி ஆடைக்கு மாறியவர்.

இராமலிங்க சுவாமிகளை வெள்ளை வேட்டிப் பரதேசிப் பண்டாரம் என்று சிலர் அழைப்பார்கள். பிள்ளை பெரு விண்ணப்பம் பகுதியில்,

“மெய்யுறக் காட்ட வெருவி வெண் துகிலால் மெய் எலாம் ஐயகோ மறைத்தேன்” என்று அடிகள் பாடியதிலிருந்து வெள்ளாடை துறவி என்று புலனாகிறது.

அவரது உடை இரண்டு வெள்ளை ஆடைகளே. வெள்ளாடையிலும் அடிகள் உடுத்துவது லாங்கிளாத் என்ற வகையே.

இராமலிங்க சுவாமிகள் ஆடை குறித்து அவரது வார்த்தைகளில் கூறுவோமானால், “மூன்றாசைகளில் விசேஷம் பற்றுள்ளவர்களாகித் தயவில்லாத கடின சித்தர்கள் சந்நியாசம் பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்படி குற்றமற்றவர்களுக்குச் சந்நியாசம் வேண்டுவதில்லை. சந்நியாசி காவி வேஷ்டி போடுவதற்கு ஞாயம். தயவில்லாத கடின சித்தர்களாகையால் தத்துவாபாசமுள்ளது.

”தத்துவத்தை செயித்து தயவை நடத்துவதற்கு யுத்த குறி காவி”

"வெற்றியான பிறகு அடைவது தயவு.ஆதலால் வெற்றிக்கொடி வெள்ளை".

வள்ளலார் தன்னுடைய வெள்ளி அம்பலத்து மகரிஷிகளுக்கு வேண்டிய வெள்ளை மல்பீஸ்களும், வெள்ளை லாங்கிளாத் துணிகளும், தலைப்பாகை துணிகளும் வாங்கி அனுப்பிய செய்தி அவரது வாழ்க்கை வரலாற்றில் அறிய நேரிடுகிறது.

இதைப்போல வடசென்னை தமிழ்வழி வேதாந்த மடங்களின் ஆளுமைகளும் வெள்ளாடை தரித்தவர்களாகவும், இல்லறத் துறவிகளாகவும் இருந்துள்ளனர். ரிப்பன் பிரஸ் புகழ் இரத்தின செட்டியார் இல்லறத் துறவிதான். இவருடைய சீடர்கள் கோ.வடிவேல் செட்டியார், வியாசர்பாடி கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் தமிழ் வழி மரபின் துறவை ஏற்றுக் கொண்டனர்.

வியாசர்பாடி கரபாத்திர சுவாமிகள் தனது குருவான ரிப்பன் பிரஸ் சைவ இரத்தின செட்டியாரிடம் போய்ச் சந்நியாசம் வழங்கும்படி வேண்டினார். அச்சமயம் இரத்தினசெட்டியார்,"சந்நியாசம் என்பது ஆரிய மரபுக்கு உரியது; தமிழ்நாட்டுக்கு உரியது துறவு மட்டுமே" என்றார்.

சங்க இலக்கியத்தில் முல்லைப்பாட்டில், "கற்றோய்த்துடுத்த படிவப் பார்ப்பான் முக்கோலசை நிலைகடுப்ப" என்ற வாக்கியத்தை மேற்கோள் காட்டி நாம் கை கொள்ள வேண்டியது துறவு மட்டுமே. சந்நியாசவேடமல்ல என்று கூறினார். எனது ஆசிரியர் திருக்குறள் சாமி என்னும் கிருஷ்ணாந்த யதீந்திர சுவாமிகளிடத்தில் யான் மனத்துறவு மட்டுமே பெற்றுக்கொண்டேன் என்று அறிவுறுத்தினார் சைவ இரத்தினசெட்டியார்.

அருட்பா மருட்பா விவாதத்தின் போது இராமலிங்க சுவாமிகளுக்கு உறுதுணையாக இருந்தவர்கள் இந்த வழியினர் என்பதும் முக்கியமானது. கலித்தொகை, திருக்குறள் துறவியல் அதிகாரம் போன்றவற்றில் தமிழர்களுக்கே உரித்தான துறவும், வெள்ளை வேட்டி மரபும் தனி ஆவர்த்தனமாக விளங்கியுள்ளது.

❖ ❖ ❖

# வள்ளலாரின் திருஅருட்பா பதிப்பு அரசியல்

முனைவர் வி. தேவேந்திரன்

சிதம்பரம் இராமலிங்கம் என்று தன்னை அழைத்துக் கொண்ட வள்ளலார், தனித்த ஆளுமைமிக்க மனிதர். சமயப் பாடல் மரபில் எந்தவொருவரின் பாடல்களும் புலவன் வாழ்ந்த சமகாலத்தில் தொகுக்கப்படாத நிலையில் இராமலிங்கம் (வள்ளலார்) பாடல்களை அவரின் சமகாலத்தில் (1867) அவரது மாணவரான தொழுவூர் வேலாயுத முதலியார் தொகுத்து வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

வள்ளலாரின் பாடல்களைத் 'திருஅருட்பா' என்று பெயரிட்டு முறையான பதிப்பு ஒன்று வெளியாவதற்கு ஏறக்குறைய பதினாறு ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் பங்களிப்பின் காரணமாகத் திருவருட்பாப் பதிப்பு தொடங்கிவிட்டது. இதனை 'அடிகளார் பிள்ளைப் பருவத்தில் சென்னை நகரில் 'ஏழுகிணறு' என்னும் பெயருள்ள பேட்டையில் வாழ்ந்த காலை நாள்தோறும் இந்தக் கோட்டத்திற்கு யாத்திரை சென்று சொந்தமாகக் கவிதை புனைந்து கந்தப்பெருமானை வழிபட்டு வந்தார். அப்படி அவர் புனைந்த கவிதைகளைக் கந்தப் பெருமான் கோயிலைச் சார்ந்த ஒருவர் குறித்து வைத்துக்கொண்டு, பின்னர் அதனை நூலாக வெளியிட்டார். அதுவே, அடிகளாரின் பாடல்களடங்கிய முதல் நூலாகும். 'சென்னை - கந்தர் தெய்வ மணிமாலை - சரணப்பத்து'என்பது நூலின் பெயர்.' பாளையம் முத்து செட்டியார் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, கயத்தாறு ஞானசுந்தரம் ஐயர் அவர்களால் இந்நூல் வெளியிடப்பட்டது' என, அட்டைப் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு 'அருட்பா ' எனப் பெயர் தரப்படவில்லை என்பது கவனத்திற்குரியதாகும். இந்நூல் வெளியான காலம் 1851 ஆம் ஆண்டாக இருக்கக் கூடுமென்று அனுமானிக்கப்படுகின்றது'. ( ம. பொ. சிவஞானம்,2011: 181 ) என்னும் ம.பொ.சி. கூற்றின் மூலம் அறியமுடிகிறது. வள்ளலாரின் நாற்பத்து நான்காவது வயதில், அதாவது 1867 ஆம் ஆண்டு அவரது மாணவர்களில் ஒருவரான தொழுவூர் வேலாயுத முதலியாரால், வள்ளலாரின் பாடல்களின் ஒரு பகுதி தொகுக்கப்பட்டு (முதல் நான்கு திருமுறைகள்) நூலாக வெளிவந்துள்ளது. இந்நூலின் இறுதியில் தொழுவூர் வேலாயுத முதலியார் பாடிய 'திருவருட்பா வரலாறு'(66 பாடல்கள்) அச்சிடப்பட்டிருக்கிறது. இதில் ஒரு காப்புச் செய்யுளும் அடுத்த இரண்டு பாடல்கள் குரு தோத்திரமாகவும் அமைந்துள்ளன. மீதம் 63 பாடல்கள் திருவருட்பா அச்சான வரலாற்றைக்

குறிப்பிடுகிறது. அவற்றுள், 48 முதல் 52 ஆம் பாடல் வரை உள்ள ஐந்துபாடல்கள் மூலம் 1860-களில் இறுக்கம் இரத்தின முதலியார் வள்ளலாரிடமிருந்த பாடல் ஏடுகளைத் தொகுத்துப் பதிப்பிக்கும் முயற்சியைத் தொடங்கினார். இச்சூழலில் சென்னையிலிருந்த சிலர் வள்ளலாரது பாடல்களைச் சிறு சிறு நூல்களாக அச்சிடும் பணியில் ஈடுபட்டனர். இரத்தின முதலியாரும் செல்வராய முதலியாரும் அவர்களிடம் சென்று, வள்ளலாரின் பாடல்களை முறையாகத் தாங்கள் அச்சிடவிருக்கையில் சிறுசிறு நூலாக அவர்கள் அச்சிடுவது தகாதெனத் தடுத்தனர். அவர்கள் அச்சிடத் தொடங்கிவிட்டதால் அதனை நிறுத்துமாறு கூறி அதற்கான இழப்பீடாகச் சிறிது பொருளும் கொடுத்துள்ளனர். அதன் பின்னரும் அவர்கள் அச்சிடுவதை நிறுத்தவில்லை. இந்நிலையில் இறுக்கம் இரத்தினம் முதலியார் பாடல் ஏடுகளைத் தொகுப்பதிலும் அவற்றை அச்சிடுவதற்கு வள்ளலாரின் இசைவைப் பெறுவதிலும் தீவிரமாகச் செயல்பட்டனர் என்பதை அறிய முடிகிறது.

'வள்ளலார் சென்னை, புதுச்சேரி, சிதம்பரம், கூடலூர், கருங்குழி ஆகிய இவ்விடங்களில் விளங்கிய காலத்தில் பாடிய பிரபந்தங்களையும் பதிகங்களையும் சிலர் தனித்தனிச் சிறு புத்தகங்களாய் அச்சுப் பிழைகளோடு வழங்குவதைக் கண்டு, சமரச வேத சன்மார்க்க சங்கத்தையபிமானித்த புதுவை வேலு முதலியார், சிவாநந்தபுரம் செல்வராய முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார் முதலிய அன்பர்கள் வள்ளலார்பாலடைந்து 'தேவர் திருவாக்கினின்று பொழிந்த அமுதவருஜமான பாக்களை அச்சிட உத்தரவாக வேண்டும்' என்று மிகுதியும் வேண்ட, சுவாமிகள் முதலில் இசையாது பின்னும் இவர்கள் குரையிரக்க ஒருவாறு இசைந்தனர்' (ச.மு. கந்தசாமி பிள்ளை, 2009: 48 - 49) என்று தொழுவூர் வேலாயுத முதலியாரின் பாடல்கள் மூலம் அறிந்த அதே செய்தியை ச.மு. கந்தசாமி பிள்ளையும் கூறுகிறார். வள்ளலார் பாடல்கள் 'திருஅருட்பா 'என்ற பெயரில் தொகுப்பாக வெளிவருவதற்கு முன்பே அதாவது தொழுவூர் வேலாயுத முதலியாரின் திருவருட்பா பதிப்புக்கு முன்னரே சில சிறு பதிப்புகள் வள்ளலாரின் பாடல்களுக்கு வந்திருப்பதை அறிய முடிகிறது. ஆனால் அப்பதிப்பு நூல்கள் தற்போது பார்வைக்கு கிடைக்காமையால் பல்வேறு கேள்விகள் எழுகின்றன.

தமிழ் அச்சுப் பண்பாட்டுச் சூழலில் (1867 - 2017) திருவருட்பா பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ள பதிப்புகளில் கிடைத்தத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 'திருவருட்பா'பதிப்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

மூலப் பதிப்புகள் (ஆறு திருமுறைகளும் அடங்கிய முழுப் பதிப்பு, பகுதிப் பதிப்பு, திரட்டுகள், தொகுப்புகள்).

உரைப் பதிப்புகள் (ஆறு திருமுறைகளும் அடங்கிய முழுப் பதிப்பு, பகுதிப் பதிப்பு, திரட்டுகள், தொகுப்புகள்).

## மூலப் பதிப்புகள்:
## தொழுவூர் வேலாயுத முதலியார் பதிப்பு (1867)

'திரு அருட்பா' என்ற பெயரில் வள்ளலாரின் பாடல்கள் அடங்கிய முதல் நான்கு திருமுறைகளின் முதற்பதிப்பு 1867 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் புதுவை வேலு முதலியார், சிவானந்தபுரம் செல்வராய முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார் ஆகியோரின் வேண்டுகோளின் படி வள்ளலாரின் தலைமை மாணவர் தொழுவூர் வேலாயுத முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது. இந்நூல் வெளியீட்டுக்குப் பொருளுதவி செய்தவர் மயிலை சிக்கிட்டி சோமசுந்தரம் செட்டியார்.



1857 ஆம் ஆண்டில் வள்ளலார் சென்னை விட்டு வடலூர் சென்றபின் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வள்ளலாரின் பாடல்களைத் தொகுத்து நூலாக அச்சிட்டு வெளியிட வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. இப்பணி 1860 களில் மிகத் தீவிரமானது. திருவருட்பா ஏடுகளைத் தொகுத்தல், அச்சிடுதல் தொடர்பாக இரத்தின முதலியாருக்கும் வள்ளலாருக்கும் 1860 முதலே கடிதத் தொடர்பு தொடங்கிவிட்டது.(விரிவான தகவல்களுக்குக் காண்க,ஆ.பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு,திரு அருட்பா திருமுகப்பகுதி, ஐந்தாம் புத்தகம்,தி பார்க்கர், சென்னை, மறுபதிப்பு 2007) கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட பல்வேறு இடர்பாடுகளுக்கு நடுவில் திருவருட்பாவை வெளியிடுவதில் ஏழாண்டுகள் இரத்தின முதலியார் முயன்றார்.அச்சிட அனுமதி வேண்டி வள்ளலாரிடம் தவங்கிடந்தார்.நாளும் ஒருவேளையே உண்பதென்று நோன்பு பூண்டார்.இவ்வாறு வருந்தி வருந்தி அரிதின் முயன்று திருவருட்பாவை அச்சிட்டு வெளிக்கொணர்ந்த பெருமை இறுக்கம் இரத்தின முதலியாரையே சேரும்.

பாடல்களை அச்சிட்டு வெளியிட வள்ளலாரின் இசைவைப் பெற்ற இறுக்கம் இரத்தின முதலியார், புதுவை வேலு முதலியார், சிவாநந்தபுரம்

செல்வராய முதலியார், தொழுவூர் வேலாயுதம் முதலியார் ஆகியோருடன் இணைந்து வள்ளலாரின் பாடல்களை வெளிக்கொணர்வதில் அதித்தீவிரமுடன் செயல்பட்டார். அத்துடன் தான் தொகுத்துக் கொண்டுவரவிருக்கும் நூலின் தலைப்பேட்டில் வெறுமனே 'இராமலிங்கப் பிள்ளை' என்று பொறிப்பதைக் காட்டிலும் 'இராமலிங்க சாமி' என்று பொறிக்கக் கருதி அதற்கான அனுமதி வேண்டி வள்ளலாருக்கு கடிதம் ஒன்றை எழுதினார். மேலும் சிதம்பரம் பொருளாக அண்மைக்காலங்களில் பாடிய பாடல்களையும் பாயிரத்தையும் அச்சுக்கு அனுப்புமாறு அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

மேற்குறிப்பிட்ட வகையிலான கடிதத்தைக் கண்டு வள்ளலார் 28.03.1866 அன்று இறுக்கம் இரத்தின முதலியாருக்குப் பின்வருமாறு பதில் கடிதம் எழுதியுள்ளார் அவை, 'இராமலிங்கசாமியென்று வழங்குவிப்பது என் சம்மதமன்று. என்னை? ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலில். இனி அங்கனம் வழங்காமை வேண்டும் (ஆ. பாலகிருஷ்ணபிள்ளை, தொகுதி-5, 2007: 62) என்று குறிப்பிட்டுப் பதில் கடிதம் எழுதியிருந்தார்.

வள்ளலாரின் இசைவு, பாடல்களின் தொகுப்பு என அனைத்துப் பணிகளும் நிறைவுற்ற பிறகு நூலுக்குப் பெயரிட வேண்டிய தருணம் வந்தது. அப்போது 'திரு அருட்பா' என்று பெயரிடப்பட்டது. பெயரை வைத்தவர் தொழுவூர் வேலாயுதம் முதலியார். 1867 இல் திருவருட்பாவினை முதன் முதலில் முதலியார் பதிப்பித்த காலத்தில் நூலுக்குப் பெயரிடுவதில் வள்ளலார் எந்தவிதக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. பாடல்களைப் பதிப்பித்த தொழுவூர் வேலாயுதம் முதலியாரே இப்பெயரைத் தெரிவு செய்தார். அதேபோலப் பாடல்களை வகைதொகைப்படுத்தி ஆறு திருமுறைகளாக வகுத்தவரும் அவரே. இதனை, தொழுவூர் வேலாயுத முதலியாரின் 'திருவருட்பா வரலாறு '34, 35, 38 ஆகிய பாடல் பகுதியின் மூலம் அறிய முடிகிறது.

திருமுறைகளும் அவற்றின் பதிகங்களும் அவை பாடப்பெற்ற காலத்தில் வகுக்கப்படவும் அடைவு செய்யப்பெறவும் இல்லை. பொருளமைதி கருதியும் வகுத்திருப்பதாகக் கூறுவதற்கில்லை. திருவெழுத்து ஆறு, சமயம் ஆறு, அத்துவா கதியடைவிக்கும் வழி) ஆறு என்பவற்றை உட்கொண்டு திருமுறைகளைத் தொழுவூர் வேலாயுதம் முதலியார் வகுத்துள்ளார்.

தமது பாடல்களைத் தொகுத்து வெளியிட முதலில் அனுமதியளிக்க மறுத்துவந்த வள்ளலார், பின்பு திருவொற்றியூர், சிதம்பரப் பாடல்களைத் தொகுத்து வெளியிட அனுமதியளித்தார். அப்போது, அண்மைக்காலங்களில் பாடிய புரட்சிகரமானக் கருத்துக்கள் கொண்ட பாடல்களைப் பின்புத் தொகுத்து வெளியிட்டுக் கொள்ளலாம். எனவும் தற்போது வெளியிட வேண்டாம் எனவும் வள்ளலார் கட்டளையிட்டதால் அதனையும் இனி வருங்காலத்தில் வள்ளலார் பாடக்கூடியவற்றையும் தொழுவூர் வேலாயுத முதலியார் ஆறாம் திருமுறையாக

வகுத்தார் (126 பதிகங்களும் 172 தனிப்பாடல்களும் அவர் வகுத்துவைத்திருந்த ஆறாம் திருமுறையில் அப்போது இருந்தன). ஆறாம் திருமுறையாக நிறுத்திக் கொண்டவை போக, மீதமுள்ளப் பாடல்களை ஐந்து திருமுறைகளாக வகுத்தார். இளமைக்காலத்தில் சென்னையில் வாழ்ந்த போது (1823-1855) பாடப்பெற்ற திருத்தணிகைப் பதிகங்கள் கைக்குக் கிடைக்கப் பெறாது அச்சுக்குத் தயாராகமையின் அவற்றையும் பின்னர் வெளியிடக் கருதி ஐந்தாம் திருமுறையாகக் கொண்டார். இவ்வாறு நிறுத்தி வைத்த ஆறாம் திருமுறையும் அச்சுக்குத் தயாராகாத ஐந்தாம் திருமுறையும் நிற்க, மீதமுள்ளவை முதல் நான்கு திருமுறைகளாக வகுக்கப்பட்டன. என்று ஊரன் அடிகள் 'இராமலிங்க அடிகள் வரலாறு'என்னும் தம்நூலில் குறிப்பிட்டுள்ளார் (ஊரன் அடிகள், 2006).

தனித்தனி நூல்களாக விளங்கத்தக்க திருவடிப் புகழ்ச்சி (128 அடி விருத்தப்பா), விண்ணப்பக் கலிவெண்பா (417 கண்ணிகள்), நெஞ்சறிவுறுத்தல் (703 கண்ணிகள்), சிவநேச வெண்பா (104 கண்ணிகள்), மகாதேவ மாலை (100 எண்சீர் விருத்தம்), திருவருள் முறையீடு (232 கட்டளைக் கலித்துறை), வடிவுடை மாணிக்கமாலை (101 கட்டளைக் கலித்துறை), இங்கிதமாலை (167 அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்) ஆகிய எட்டும் முதல் திருமுறையாக வகுக்கப்பெற்றன.

சென்னையில் வாழ்ந்த காலத்தில் ஒற்றியூர் வழிபாட்டுக் காலத்தில் திருவொற்றியூரைக் குறித்தும் தில்லையைக் குறித்தும் பாடிய பதிகங்களும், திருமுல்லைவாயில், திருவலிதாயம், புள்ளிருக்கு வேளூர், திரு ஆரூர், திரு அண்ணாமலைப் பதிகங்களும், பொதுப்பதிகங்களும், கீர்த்தனைகளும் ஆகியவை இரண்டாவது திருமுறையாக வகுக்கப்பெற்றன. திருவொற்றியூரைக் குறித்துப் பாடப்பெற்ற அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலான அகத்துரைப் பதிகங்கள் பத்தொன்பது மட்டும் மூன்றாம் திருமுறையாக வகுக்கப்பட்டன. சென்னையிலிருந்து கருங்குழிக்கு வந்தபின் சிதம்பர வழிபாட்டுக் காலத்தில் சிதம்பரத்தைக் குறித்துப் பாடப்பெற்ற எட்டு மாலைகள், ஆளுடைய நால்வர் அருள் மாலைகள் நான்கு ஆகப் பன்னிரண்டு நூற்பகுதிகளைக் கொண்ட 238 பாடல்கள் அடங்கியன நான்காம் திருமுறையாக வகுக்கப்பெற்றன. திருத்தணிகைப் பாடல்கள் ஐந்தாம் திருமுறையாக வகுக்கப்பெற்றன.'முருகன் பாசுரங்கள்'என்னும் வேறு பெயரும் இத்திருமுறைக்கு உண்டு. 604 பாடல்களைக் கொண்ட 56 பதிகங்கள் இத்திருமுறையில் உள்ளன.

வள்ளலாரின் ஆணைப்படி தற்சமயம் வெளியிட வேண்டாமென வைக்கப்பட்ட பாடல்கள் ஆறாம் திருமுறையின் பாற்பட்டன. இது மூன்று பகுதிகளையுடையது. முதல் பகுதி 'கருங்குழிப் பாசுரங்கள்' என்றும் 'பூர்வஞான சிதம்பரப் பகுதி' என்றும் அழைக்கப்படும். இது 476 பாடல்களைக் கொண்ட

24 நூல் பகுதிகளைக் கொண்டது. இரண்டாம் பகுதி 'வடலூர் பகுதி' என்றும் 'உத்திர ஞான சிதம்பரப் பகுதி' என்றும் அழைக்கப்பெறும் இதில் 635 பாடல்களைக் கொண்ட 40 நூல்கள் உள்ளன. மூன்றாம் பகுதி 'சித்தி வளாகப் பகுதி' என்று அழைக்கப்படும். இதில் 44 நூற்பகுதிகள் உள்ளன.

திருவொற்றியூர் பற்றிய பாடல்கள் அனைத்தும 1, 3 ஆகிய திருமுறைகளிலும் சிதம்பரம் பற்றிய பாடல்கள் முறையே 4,6 திருமுறைகளிலும் சிதம்பரம் மற்றும் திருவொற்றியூர் பற்றிக் கலந்து பாடிய பாடல்கள் 2ஆம் திருமுறையிலும் முருகன் பற்றிய பாடல்கள் 5ஆம் திருமுறையிலும் அடங்குமாறு பகுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

வள்ளலார் பாடல்களின் முதல் வெளியீட்டுப் பணி 1860 இல் தொடங்கி 1867இல் முடிவடைகிறது. இக்காலகட்டத்தில் முதல் நான்கு திருமுறைகள் மட்டுமே அச்சுக்குத் தயார் நிலையில் இருந்தன. அதோடு, அது வள்ளலாரின் நேரடி மேற்பார்வையில் உருவானது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனை, 'ஒற்றியூர் பாடல்களையும் மற்றவைகளையும் அச்சிடத் தொடங்குகிறதாய்க் கேள்விப்படுகிறேன். அவைகளை தற்காலம் நிறுத்தி வைத்தால் நான் அவ்விடம் வந்தவுடன் இவ்விடத்திலிருக்கின்ற இன்னுமஞ் சில பாடல்களையுஞ் சேர்த்து அச்சிட்டுக் கொள்ளலாம். பின்பு தங்களிஷ்டம். நமது சினேகிதர் மகா ள-ள-ஸ்ரீ வேலு முதலியாரவர்களுக்கு இதைத் தெரியப்படுத்துவீர்களாக'. (ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, தொகுதி - 5, 2007: 60 - 61) என்று இறுக்கம் இரத்தின முதலியாருக்கும்,'ஸ்ரீ அப்பாசாமி செட்டியா ரவர்கட்குத் தாங்கள் வரைந்த கடிதத்திற் குறித்த வண்ணம் சிதம்பர விஷயமான பாடல்களை தங்கள் கருத்தின்படி அச்சிட்டுக் கொள்ளுங்கள். அன்றியும் 'கண்டாயென்தோழி'என்கிற பாடல்களை வைத்திருக்கின்றவர் தற்காலம் சமீபத்தில்லை. அவர் வந்தவுடன் வாங்கி யனுப்புகிறேன்'. (ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, தொகுதி - 5, 2007: 68 - 69) என்று கடலூர் அப்பாசாமி செட்டியாருக்கு வள்ளலார் எழுதிய இரு கடிதங்கள் உறுதிப்படுத்துகின்றன. சில நேரங்களில் பாடல் தொகுப்புப் பணிகள் வள்ளலாரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படாமலும் நடைபெற்றுள்ளன என்பதை மேற்குறிப்பிட்டுள்ள முதல் கடிதத்தின் மூலம் உணரமுடிகிறது.

ஒருவழியாகப் பாடல்களைத் தொகுத்து முடிவுற்றவுடன் தொகுப்பிற்குப் பெயரிடுவதிலும் வள்ளலாருக்கு உடன்பாடில்லாத சம்பவங்கள் நடந்துள்ளன. நூலின் தலைப்பில் 'இராமலிங்கசாமி அருளிச் செய்த' என்று பெயரிட்டதற்கும் அவர் உடன்படவில்லை. அதனை விளக்கும் திருமுகத்தின் ஒரு பகுதி வருமாறு; 'இராமலிங்கசாமி யென்று வழங்குவிப்பது என் சம்மதமன்று என்னை? ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலில். இனி அங்கனம் வழங்காமை வேண்டும்' (ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, தொகுதி -5, 2007: 62).

'ஆனால் நூலுக்கு 'திரு அருட்பா' என்று பெயரிட்டதற்கு வள்ளலாரிடமிருந்து எந்த மறுப்பு செய்தியும் வெளிவந்ததாக ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. பின்னாளைய அருட்பா × மருட்பா போராட்டத்திற்கு இப்பெயர் ஒரு காரணமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

'இராமலிங்க சுவாமிகள்' என்று வழங்கப்படாமை வேண்டும் என்று வள்ளலார் தடுத்துவிட்டபடியால் அங்ஙனம் வழங்க விரும்பியும் அஃதியலாது போயிற்று. அஃதியலாது போன நிலையில் வேறுசெயலறியாது எங்ஙனம் வள்ளலாரைச் சிறப்பித்து வழங்குவோம் என்று சிந்தித்து இறுதியாக நூலின் முகப்பில் 'திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை' என்று வழங்கத் தொடங்கினர். சிதம்பரம் இராமலிங்கருக்கு இப்பெயரைச் சூட்டியவர் தொழுவூர் வேலாயுத முதலியாரே ஆவார்.

'நூலை கண்ட அடிகள் அதில் தமது பெயருக்கு முன் 'திருவருட்பிரகாச வள்ளலார்' என்று பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து, அதில் உபய கலாநிதிப் பெரும்புலவரை நோக்கி 'பிச்! ஏங்காணும்! திருவருட்பிரகாச வள்ளலார் என்று உம்மை யார் போடச் சொன்னது?' என்று அதட்டிக் கேட்க, முதலியார் நடுநடுங்கியவராய் வாய்புதைத்து, வள்ளலாரது திருவடிகளை சிந்தித்து வண்ணமாய் நின்று இருந்தார் சிறிது நேரம் மௌனத்திற்கு பின்னர் நமது அடிகளாரே உண்மை விளக்கம் தந்து அமைதி பெறச் செய்தார் அதாவது திருவருட்பிரகாச வள்ளலார் என்ற பெயரை திருவருள் பிரகாச வள்ளல் - ஆர்? எனப் பிரித்து வினாவாகக் கொண்டு, அதற்கு விடையாக கடவுள் அல்லது பதியேதான் திருவருட்பிரகாச வள்ளல் என்று உண்மையைச் சுட்டுவதற்காகக் கூறிவிட்டுத் தன்னை அப்பதியின் திருவடியிற் கிடக்கும் சிற்றணுவாகக் குறிப்பிட்டார். யாதெனில் திருவருட்பிரகாச வள்ளல் ஆர் என்ற சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை எனக் குறித்திட்டார்'. (சரவணானந்தா,1974: 38). தமது மாணவரான வேலாயுத முதலியார் தமக்குச் சூட்டிய பட்டப் பெயரைத் தம் புலமைத் திறம் கொண்டு தெய்வத்துக்குச் சூட்டினார் வள்ளலார். அத்துடன் வள்ளலார் தனது பாடல்களில் பலவிடங்களில் இறைவனை 'வள்ளல்' என்று குறித்திருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

வள்ளலாரின் அனுமதியும் ஒத்துழைப்பும் முறையாகக் கிடைத்த பின்பு, திருவருட்பாவின் முதல் திருமுறையில் 712 பாடல்களும், இரண்டாம் திருமுறையில் 1206 பாடல்களும், மூன்றாம் திருமுறையில் 235 பாடல்களும், நான்காம் திருமுறையில் 238 பாடல்களும் சேர்த்து 2391 பாடல்கள் இடம்பெற்ற முதல் நான்கு திருமுறைகள் அடங்கிய ஒரே நூலாக 1867 இல் தொழுவூர் வேலாயுத முதலியாரால் முதன் முதலில் பதிப்பிக்கப்பட்டது.

தொழுவூர் வேலாயுத முதலியார் பதிப்பில் பாடல்கள் அச்சாகியுள்ள அமைப்பு முறையை பார்க்கும்போது பத்திபோல் அமைத்தல், இலக்கண

முறையில் அமைத்தல், தடித்த தொடர்களில் அமைத்தல், எனச் சில நுணுக்கங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமையைப் பார்க்க முடிகிறது. மேலும், சில பாடல்கள் சீர் பிரித்து அச்சிடப்பட்டுள்ளன. சில பதிகங்கள் ஓலைச்சுவடியில் 'இருப்பதைப்போன்றே பத்திப் பத்தியாகக் காணப்படுகின்றன. சீர்களுக்கிடையே இடைவெளியும் அதிகம் இல்லாமல் அச்சிடப்பட்டிருக்கிறது. மேலும் உடுக்குறி, பிறைக்குறி, வாட்குறி, வட்டக்குறி போன்ற குறியீடுகளைப் பயன்படுத்திச் சிறப்பான விளக்கங்கள் அடிக்குறிப்பாகத் முதலியாரால் தரப்பட்டுள்ளன (இந்தவகையில் ஆ. பாலகிருஷ்ண பிள்ளைக்கு இவர் முன்னோடியாகத் திகழ்வதை அறியமுடிகிறது). முதலியார் தமது பதிப்பின் முதல் திருமுறையில் 91 அடிக்குறிப்புகளையும் இரண்டாம் திருமுறையில் 4 அடிக்குறிப்புகளையும் ஐந்தாம் திருமுறையில் 15 அடிக்குறிப்புகளையும் தந்துள்ளார். மூன்றாம், நான்காம் திருமுறைகளில் எவ்வித அடிக்குறிப்புகளையும் காண முடியவில்லை.

இப்பதிப்பில் உரைநடைப் பகுதிகள் இல்லை; வசனப் பாகங்கள் சேர்க்கப்படவில்லை. வள்ளலாரின் பிறப்பு, வளர்ப்பு, சிறப்பு திருவருட்பா அருளிச் செய்தது, பதிப்பு வரலாறு ஆகியவற்றை அறுபத்தாறு (66) பாக்களில் தொழுவூர் வேலாயுத முதலியார் பாடித் 'திருவருட்பா வரலாறு' என்னும் தலைப்புடன் நூலின் இறுதியிற் சேர்த்து அச்சிட்டார்.

நூலின் இறுதியில் பிழைத்திருத்தம் கொடுக்கப்பட்டுள்ளதோடு பாட்டு முதற்குறிப்பகராதி ஒவ்வொரு திருமுறைகளுக்கும் தனித்தனியாகப் பிரித்துத் தரப்பட்டுள்ளது. முதல் இரண்டு திருமுறைகளுக்குத் தொடர்ச்சியாகவும் மூன்றாவது நான்காவது திருமுறைகளுக்குத் தனித்தனியாகவும் பக்க எண்கள் தரப்பட்டுள்ளன. இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1887 ஆம் ஆண்டு மீண்டும் தொழுவூர் வேலாயுத முதலியாராலேயே வெளியிடப்பட்டது எனப் பரவலாக ஆய்வுலகில் ஆதாரப்பூர்வமாக பதிவு செய்யப்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் தற்போது 'திருவருட்பா முதல் நான்கு திருமுறை'க்கு 1883 ஆம் ஆண்டு வெளிவந்த பதிப்பு ஒன்று ஆய்வாளருக்கு பார்வைக்கு கிடைத்துள்ளது. 1887 ஆம் ஆண்டு வெளிவந்த பதிப்பின் முகப்பு பக்கத்தில் 'இரண்டாம் பதிப்பு'என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 1883இல் வெளிவந்த பதிப்பில் அவ்வாறு முதல் பதிப்பா, இரண்டாம் பதிப்பா என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே 'திருவருட்பா'முதல் நான்கு திருமுறைக்கு இரண்டாம் பதிப்பு எப்போது வந்திருக்கும் என்பதில் ஐயம் உருவாகியுள்ளது. ஐயத்தை தெளிவுபடுத்திக்கொள்ள முன்னாய்வுகளை எடுத்துப் பார்க்கும் போது இராம. பாண்டுரங்கன் என்பவர் மட்டுமே இப்பதிப்பைப் பற்றி 'திருவருட்பா பதிப்புச்சோலை'என்னும் தம் நூலில் கீழ்வருமாறு பதிவு செய்கிறார்.

'1880ஆம் ஆண்டு ஐந்தாம் திருமுறையை வெளியிட்ட தொழுவூர் வேலாயுதனார், அதன் இரண்டாம் பதிப்பை 1882இல் வெளியிட்டார்.

பிப்ரவரி,1883இல் முதல் நான்கு திருமுறையின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார் இருப்பினும்,இவ்வாறாம் திருமுறையை அச்சிடும் முயற்சியில் அவர் ஈடுபடவில்லை.ஆறாம் திருமுறைக்கான பதிகத் தலைப்புகள் தொழுவூராரால் வகுக்கப் பெற்றிருந்தன.வேலூர் பத்மநாப முதலியார் 1885ஆம் ஆண்டு ஆறாம் திருமுறையைப் பதிப்பிக்குபோது,தொழுவூர் வேலாயுதமுதலியார் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.ஆறாம் திருமுறை வெளிவந்த ஈராண்டுகளுக்குப் பின்னர் நான்காம் திருமுறையின் இரண்டாம் பதிப்பை 1887இல் அச்சிட்டார்.இருப்பினும், ஆறாம் திருமுறையை அச்சிட அவர் இசையவில்லை' (இராம. பாண்டுரங்கன், 2017: 67 - 68).

இப்பதிவின்மூலம் 'திருவருட்பா' முதல் நான்கு திருமுறைக்கு 1883 லும் 1887லும் இரண்டாம் பதிப்பு வெளிவந்ததாக அறியமுடிகிறது. அது எப்படி வெவ்வேறு ஆண்டுகளில் ஒரே நூலுக்கு இரண்டாம் பதிப்பு வந்திருக்கமுடியும்? எனவே இவ்விரு பதிப்புகள் குறித்து பதிவு செய்துள்ள இவரது கருத்தும் குழப்பத்தையே ஏற்படுத்துகிறது. இக்குழப்பத்தை தெளிவுபடுத்த சரியான தரவுகள் கிடைக்காமையால் இந்நிலையிலேயே இவை பதிவு செய்யப்படுகின்றன.

## தொழுவூர் வேலாயுத முதலியார் பதிப்பு (1880)

முதல் நான்கு திருமுறைகள் (1867) வெளிவந்த ஏழாண்டுகளுக்குப் பின் 1874 இல் வள்ளலார் இவ்வுலகைவிட்டு மறைந்தார். வள்ளலார் மறைவுற்று ஆறு ஆண்டுகளுக்குப்பின் அதாவது முதல் நான்கு திருமுறைகள் வெளியான பதின்மூன்றாண்டுகள் கழிந்து 1880இல் ஐந்தாம் திருமுறையின் முதற்பதிப்பு வெளிவந்தது. 1867இல் முதல் பகுதி (முதல் நான்கு திருமுறைகள்) வெளியான ஆண்டிற்கும் 1880 இல் இரண்டாம் பகுதி (ஐந்தாம் திருமுறை) வெளியானதற்குமான பதின்மூன்றாண்டுகால இடைவெளியில் பல வரலாற்று முக்கியத்துவமிக்க நிகழ்வுகள் நடந்தேறின. இந்தக் காலப்பகுதியில் சத்திய தர்மசாலை (1867) சன்மார்க்க போதினி என்ற கல்வி நிலையம் (1867) (இதில் வள்ளலாரின் தலைமை மாணாக்கர் தொழுவூர் வேலாயுதம் முதலியார் ஆசிரியராக இருந்தார்). சித்திவளாகம் (1870) சத்திய ஞான சபை (1872), 1596 அடிகளை கொண்ட அருட்பெருஞ்ஜோதி அகவல் (1872) முதலானவற்றை வள்ளலார் பாடி அளித்திருந்தார். இவைமட்டுமின்றி வள்ளலார் மறைவு (1874), அருட்பா தொகுப்பிற்கு எதிரான மருட்பா போராட்டம், இப்போராட்டம் முன்னெழுந்ததற்குக் காரணமாகச் சொல்லப்பட்ட ஆறுமுக நாவலரின் மறைவு (1879) போன்ற பல நிகழ்வுகள் அந்த இடைவெளியில் நடந்து முடிந்திருந்தன.

வள்ளலார் சென்னையிலிருந்தபோது இளம்போதில் ஏழு, எட்டாண்டுப்

பருவத்தில் பாடிய கந்தகோட்டம் பதிகங்கள் 2, ஒற்றியூர் வழிப்பாட்டுக் காலத்தில் பாடிய திருத்தணிகைப் பதிகங்கள் 47, சென்னையிலிருந்து வடலூருக்குச் சென்றபின் கருங்குழியிலிருந்த காலத்திற் பாடிய மூத்தபிள்ளையார் திருப்பதிகங்கள் 4 ஆகியவற்றை ஐந்தாம் திருமுறையாகத் தொகுத்துத் தொழுவூர் வேலாயுத முதலியார், ''திருவருட்பா - திருத்தணிகைப் பதிகம்'' எனப் பெயரிட்டு வெளியிட்டார். முதற் புத்தகமாகிய முதல் நான்கு திருமுறை நூலை வெளியிடுவதற்குப் பொருளுதவி செய்த மயிலை சிக்கிட்டிச் செட்டியார் குமாரர் சோமசுந்தர செட்டியாரே இவ்விரண்டாம் புத்தகமாகிய திருத்தணிகைப் பதிகம் வெளிவரவும் உதவினார்.இதனை வெளியிடும்போது தொழுவூர் வேலாயுத முதலியார் வள்ளலார் நிறுவிய கல்விச் சாலையின் ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகி வெளிவந்து சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பாடிய 'புண்ணியமுடைத்து'என்னும் வாயுறைவாழ்த்தும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பிலும் வள்ளலாரின் உரைநடைப் பகுதிகள் சேர்க்கப்படவில்லை. இது சென்னைத் தம்புச்செட்டித்தெரு மெமோரியல் அச்சகத்தில் அச்சிடப்பெற்றுள்ளது. வள்ளலாரின் பாடல்கள் அருட்பா இல்லை மருட்பா என்ற போராட்ட முன்னெடுப்பு அவரது ஏனைய பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதில் தயக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. எனவேதான் வள்ளலார் மறைந்து (1874) ஆறாண்டுகள் கழிந்தும் ஆறுமுகநாவலர் மறைந்து (1879) ஓராண்டு கழிந்தும் ஐந்தாம் திருமுறையை (1800) வெளியிட்டுள்ளனரோ என எண்ணத் தோன்றுகிறது.

## வேலூர் பத்மநாப முதலியார் பதிப்பு (1885)

ஆறாம் திருமுறை என்பது 1867 ஆம் ஆண்டில் முதல் நான்கு திருமுறைகளை அச்சிட்டபோது வள்ளலாரின் கட்டளைக்கிணங்க நிறுத்தி வைக்கப்பட்டுள்ளவையும் அதன் பின் வள்ளலார் சித்தி பெற்ற 1874 ஆம் ஆண்டு வரை பாடப் பெற்றவையுமாகும். வள்ளலாரின் பாடல்களை முதல் நான்கு திருமுறைகளாகவும் அடுத்து ஐந்தாம் திருமுறையாகவும் பதிப்பித்து வெளியிட்ட தொழுவூர் வேலாயுத முதலியார் ஆறாம் திருமுறையைப் பகுத்து வைத்திருந்தாரேயன்றி, வெளியிடுவதில் ஆர்வம் காட்டவில்லை. ஏனெனில் வள்ளலாரின் ஆறாம் திருமுறைப் பாடல்கள் சமயம் கடந்த புரட்சிகரமான சமூகச் சீர்த்திருத்தப் பாடல்கள். தொழுவூராரோ சைவத்தில் ஆழ்ந்த புலமையும் பற்றும் உடையவர். முதல் நான்கு திருமுறைகளை வெளியிட மிகுந்த ஆர்வம் காட்டிய இறுக்கம் இரத்தின முதலியார், புதுவை வேலு முதலியார், சிவானந்தபுரம் செல்வராய முதலியார் ஆகியோரும் பொருளுதவி செய்த மயிலை சிக்கிட்டி சோமசுந்தரச் செட்டியாரும் ஆறாம் திருமுறையை அச்சிட்டு வெளிப்படுத்தத் தலைப்படவில்லை. இவர்கள் அனைவரும்

சைவத்தில் மிக்க ஈடுபாடுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இவர்கள் கொண்டுள்ள சைவப் பற்றின் காரணமாக ஆறாம் திருமுறையை வெளியிடும் பணியில் ஈடுபடாமல் இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் 'அடிகளாரின் ஆணைக்கஞ்சி தம் வாழ்நாளில் ஆறாம் திருமுறையை தொழுவூர் வேலாயுத முதலியார் அச்சிடவில்லை என்பதும், அவரது காலத்திற்குப் பிறகே அச்சிடப்பட்ட தென்பதும் புலனாகும்' (ம.பொ. சிவ ஞானம், 2011: 186). என ம. பொ.சி. குறிப்பிடுகின்றார். இக்கருத்து உண்மையன்று. தொழுவூராரின் காலகட்டம் 1832 - 1889. திருஅருட்பா ஆறாம் திருமுறை வெளியானதோ 1885இல். எனவே தொழுவூராரின் மறைவுக்கு முன்பே ஆறாம் திருமுறை வெளியானது என்பதும், சைவப் பற்றே இவரை ஆறாம் திருமுறையை வெளியிடாது தடுத்தது என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது. ஆக முதல் நான்கு திருமுறைகளை முதல் தொகுப்பாகவும் ஐந்தாம் திருமுறையை இரண்டாம் தொகுப்பாகவும் வெளியிட்டுக் கொண்டாடிய இவர்கள் மூன்றாம் தொகுப்பான ஆறாம் திருமுறையை வெளியிடாமல் பின்வாங்கியுள்ளனர். இது மிகவும் கவனிக்கத்தக்கதாகும்.

சைவத்துக்குள் தனக்கான இடத்தைத் தேடிய இடைநிலைச் சாதியினர் சைவ சமயத்துக்குள் ஆளுமை செலுத்திய மேல் சாதியினரை எதிர்க்கத் தொடங்கியதும், இதற்கு ஆதரவாக இடைநிலைச் சாதியினர் வள்ளலார் பாடி அளித்த பாடல்களை பயன்படுத்திக் கொள்ள முயன்றதும் தொகுப்பு நிலையில் பல்வேறு தடைகள் ஏற்படக் காரணமாக அமைந்தன. வள்ளலாரது பாடல்கள் யாவும் காலமுறைப்படியே தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. முன்னைய இரண்டு தொகுப்புகளில் வெளிவராத எஞ்சிய பாடல்கள் வள்ளலார் கருங்குயில் வாழ்ந்த காலத்தில் பாடியதாகும்.

*கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்*
*கூட்டமும் அக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்*
*கள்ளம்உறும் அக்கலைகள் காட்டியபல் கதியும்*
*காட்சிகளும் காட்சிதரு கடவுளையும் எல்லாம்*
*பிள்ளைவிளை யாட்டெனநன் கறிவித்திங் கெனையே*
*பிள்ளைஎனக் கொண்டு பிள்ளைப் பெயரிட்ட பதியே*
*தள்ளரிய மெய்யடியார் போற்றமணி மன்றில்*
*தனிநடஞ்செய் அரசேஎன் சாற்றும் அணிந் தருமே*

*(ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, தொகுதி - 9, 2013: 469, பா.4173).*

நான்கு வருணங்களும், நால்வகை ஆசிரமங்களும் (பிரம்மச்சரியம்,

கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்) ஆசாரங்களும் (சாதி, மத, குல, ஒழுக்கங்கள்) சொன்ன சாத்திர சரிதங்கள் எல்லாமே பிள்ளை விளையாட்டு என்றும், மேல் வருணம், தோல் வருணம் கண்டு அறிவார் இல்லை என்று 1870 களின் தொடக்கத்தில் துணிந்து எழுதியவர் வள்ளலார். இதோடு அவர் விடவில்லை. இதுவரை வந்த நூல்களில் 'இந்திரசாலம்' என்ற நூலை மட்டும் ஜாலம் என்று கூறுவார்கள்; ஆனால், வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலான அனைத்து நூல்களுமே ஜாலம்தான் என்று மறுத்தார்.

*இயல்வேதா கமங்கள்புரா ணங்கள்இதி காசம்*
*இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பர்*
*மயல்ஒரு நுல் மாத்திரந்தான் சாலம் என அறிந்தார்*
*மகனேநீ நூல் அனைத்தும் சாலம் என அறிக*
*செயல் அனைத்தும் அருள் ஒளியால் காண்கஎன எனக்கே*
*திருவுளம்பற் றியஞான தேசிகமா மணியே*
*அயல்அறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற*
*ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்தருளே.*

(ஔவை சு. துரைசாமி பிள்ளை, தொகுதி - 9,
2013: 473 பா.4176).

*தோன்றியவே தாகமத்தைச் சாலம்என உரைத்தேம்*
*சொற்பொருளும் இலக்கியமும் பொய்எனக் கண்டறியேல்*
*ஊன்றியதே தாக்கத்தின் உண்மை நினக் காக்கும்*
*உலகிறிவே தாகமத்தைப் பொய்எனக் கண்டுணர்வாய்*
*ஆன்றதிரு அருட்செங்கோல் நினக்களித்தோம்நீயே*
*ஆள்க அருள் ஒளியால் என் றளித்ததனிச் சிவமே*
*ஏன்றதிரு அமுதெனக்கும் ஈந்த பெரும் பொருளே*
*இலக்குடன் தரசேஎன் இசையும் அணிந் தருமே.*

(ஔவை சு. துரைசாமி பிள்ளை, தொகுதி - 9,
2013: 474, பா. 4177)

இவை எல்லாம் பொய் என்றார். மேற்கண்ட கொள்கையுடைய பாடல்கள் அனைத்தும் முன் இரண்டு தொகுப்புகளில் வெளிவராதவையாகும். வள்ளலாரின் சாதி மதம் கடந்த பாடல்களே ஆறாம் திருமுறையில் அடங்குவனவாகும்.

வள்ளலார் தம் வாழ்நாளின் இறுதிக்காலங்களில் சாதி மதம் கடந்து சென்று பாடல்கள் பாடியுள்ளார். இவை சாதி சமயச் சார்பான சமூக அமைப்பினைப் பாதுகாக்கும் நோக்கில் செயல்பட்ட தீவிர சைவப் பற்றுடைய மேல் சாதியினருக்கும் சைவத்துக்குள் தனக்கான இடத்தைத் தேடிய

இடைநிலைச் சாதியினருக்கும் நெருடலாகத் தெரிந்தது. இதன் விளைவாக வள்ளலாரின் ஆறாம் திருமுறைப் பாடல்கள் அவரது ஆதரவாளர்களாலேயே மௌனப்படுத்தப்பட்டுள்ளன. சைவத்துக்குள் தனக்கான இடத்தைப் பெறுவதே இடைநிலைச் சாதியினரின் நோக்கமேயன்றி சைவத்தைப் புறக்கணிப்பதல்ல. முதலில் இரண்டு தொகுப்புகளைப் பதிப்பித்த தொழுவூர் வேலாயுத முதலியாரும் அதற்குப் அதற்குப் பொருளுதவி செய்து ஆதரவு தந்தவர்களும் ஆறாம் திருமுறையைத் தொகுத்து வெளியிடாமல் அமைதிகாத்ததை இவ்வாறாகத்தான் புரிந்து கொள்ள முடிகிறது. இதே காலகட்டத்தில் முதல் நான்கு திருமுறைகள் அடங்கிய தொகுப்பையும் ஐந்தாம் திருமுறை தொகுப்பையும், இரண்டாம் பதிப்பாகத் தொழுவூர் வேலாயுதம் முதலியார் அச்சிட்டு வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படியான புறக்கணிப்பிற்குப் பின்பு, வள்ளலார் சித்தி பெற்றுப் பதினோராண்டுகள் ஆகியும், முதல் நான்கு திருமுறைகள் வெளியாகி ஏறத்தாழ இருபது ஆண்டுகள் கழிந்தும் திருவருட்பாவின் தொடக்க காலப் பதிப்பாளர்கள் அமைதியாக இருந்தமையால், இனியும் காலந்தாழ்த்தாது ஆறாம் திருமுறையை அச்சிட வேண்டும் என்ற எண்ணமுடையவராய் வேலூர் பத்மநாப முதலியார், பெங்களூர் இராகவலு நாயகரின் துணையோடு அதனை அச்சிட முன்வந்தார். இவ்விருவரின் வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் மாணாக்கரும் சென்னை கவர்ன்மெண்டு நார்மல் பாடசாலை தமிழ்ப் புலவர் சோடசாவதானம் தி.க. சுப்பராய செட்டியாரால் பார்வையிடப் பெற்றுத் திரிசிரபுரம் ம. லோகநாத செட்டியாரின் பொருளுதவியால் 1885 ஆம் ஆண்டு சென்னை ஆதி கலாநிதி அச்சகத்தில் ஆறாம் திருமுறை முதன் முதலாக அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

'அருட்பெருஞ்ஜோதி அகவல்' தொடங்கி 'அம்பலவர்' ஈறாக 126 பதிகங்களும் 'கள்ளத்தை' என்னும் பாடல் தொடங்கி 'ஒன்றுமுன்' என்னும் பாடல் ஈராக அமைந்த 172 தனிப்பாடல்களையும் தொழுவூர் வேலாயுத முதலியார் ஆறாம் திருமுறையாக வகுத்து வைத்திருந்தார். இவற்றோடு இவ்வாறம் திருமுறையின் முற்பகுதியில் ஜீவகாருணிய ஒழுக்கத்தின் முதற்பகுதியும், பிற்பகுதியில் சமரச சுத்த சன்மார்க்க சத்தியச் சிறுவிண்ணப்பம், சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம், சமரச சுத்த சன்மார்க்க சத்திய விண்ணப்பம், அற்புதப் பத்திரிகை, திருவருட்பா உட்கிடை ஆகிய உரைநடைகளையும் சேர்த்து இந்த ஆறாம் திருமுறை அச்சிடப்பட்டுள்ளது. முதன் முதலில் திருவருட்பாவில் உரைநடை பதிப்பிக்கப்பெற்ற பதிப்பு இந்த ஆறாம் திருமுறைப் பதிப்பேயாகும்.

## ச.மு. கந்தசாமிப்பிள்ளை பதிப்பு (1924)

புதுக்கோட்டை தி.நா. முத்தையா செட்டியார் என்பவர் 1924 ஆம் ஆண்டு வள்ளலாரின் மாணவர்களில் ஒருவரான சமரச பஜனை ச.மு. கந்தசாமிப்

பிள்ளையைக் கொண்டு ஆறு திருமுறைகளும் அடங்கிய ஓர் இலவசப் பதிப்பை வெளியிட்டார். சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் மோசூர் கந்தசாமி முதலியார், பதிப்புப் பணிகளில் உதவி செய்ததோடு முன்னுரையும் எழுதியுள்ளார். வள்ளலாரோடு பழகிய அன்பர்கள் பலரை ச.மு. கந்தசாமிப்பிள்ளை நேரில் சந்தித்துத் தரவுகளைத் திரட்டி வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதி இப்பதிப்பில் சேர்த்துள்ளார். (இதுவே இன்றளவும் உண்மையான வரலாறாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது). ஆறாம் திருமுறை முதல் பதிப்பில் (1885) நூலின் முன்பகுதியில் 'ஜீவகாருணிய ஒழுக்கம்' சேர்க்கப்பட்டு, பின்வந்த எல்லாப் பதிப்புகளிலும் இன்நடைமுறையே பின்பற்றப்பட்டுள்ளது. ஆனால், இந்த இலவசப் பதிப்பில் ஜீவகாருணிய ஒழுக்கத்துடன் மநுமுறைக்கண்ட வாசகம், ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி, தொண்ட மண்டல சதகத்தின் நூற்பெயர் இலக்கணம், வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரை, தமிழ் என்பதன் உரை, அடிகள் உபதேசித்தருளிய உண்மை நெறி ஆகியனவும் நூலின் முன்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்துடன் முன்பதிப்புகளில் சேராது விடுபட்ட பாடல்கள் சிலவும் குடும்ப கோரம், சில கடிதங்கள் முதலியனவும் இப்பதிப்பில் புதியனவாகச் சேர்க்கப்பெற்றன.

இதுவரை வெளிவந்த பதிப்புகள் எல்லாவற்றிலும் வள்ளலாரின் பெயர் 'சிதம்பரம் இராமலிங்க பிள்ளை' அவர்கள் என்றே குறித்திருக்க இப்பதிப்பில் தான் 'சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்' என்று முதன் முதலாகக் குறிப்பிடப்பெறுகிறது. வடலூர் சத்திய ஞான சபையின் படமும் முதன் முதலில் இப்பதிப்பில்தான் சேர்க்கப் பெற்றுள்ளது.



**ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு (1931 - 1958)**

திருவருட்பாவிற்கு இதுவரை வெளிவந்த பதிப்புகளில் குறிப்பிடத்தக்கவை, அனைத்திலும் சிறந்தவை ஆ. பாலகிருஷ்ண பிள்ளை (1890 - 1960) பதிப்பேயாகும். இவர் பி.ஏ., எம்.எல்., பட்டம் பெற்றவர்; வழக்கறிஞர்; சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தத்துவ நூல் ஆசிரியராகவும், சென்னை

சட்டக் கல்லூரியில் சட்டநூல் ஆசிரியராகவும் இருந்தவர்; சென்னை இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தில் செயலாளராகவும் ஆணையாளராகவும் பணிசெய்தவர். அறநிலைப் பாதுகாப்புக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் வடலூர் நிலையங்களைப் பார்வையிட ஒரு முறை வடலூர் வந்தபோது வள்ளலாரின் திருக்கரத்தால் எழுதப்பெற்ற திருவருட்பா மூல ஏடுகள், அன்பர்களால் எழுதி வைக்கப் பெற்ற படி ஏடுகள் முதலியவை வடலூர் சத்தியஞான சபையின் பூசகர் உ.ப. பாலசுப்பிரமணிய சிவாசாரியரிடம் இருப்பதை அறிந்தார். அவரிடம் நட்புக் கொண்டும் உத்தியோகச் செல்வாக்கைப் பயன்படுத்தியும் அவற்றைச் சிவாசாரியரிடமிருந்து இரவலாகப் பெற்று ஆராய்ந்து பகுதி பகுதியாகப் பதிப்பிக்கத் தொடங்கினார். பாலகிருஷ்ண பிள்ளைக்கு கிடைத்த மூலங்கள் அனைத்தும் சத்தியஞான சபையின் பூசகர் உ.ப. பாலசுப்பிரமணிய சிவாசாரியரிடமிருந்து இரவல் பெற்றவையே. என்பதை, ‘இவ்வகையில் பாலகிருஷ்ண பிள்ளையும் பாலசுப்பிரமணிய சிவாசாரியரும் செய்து கொண்ட ஒப்பந்தம் (Agreement in 12 Annas Stamp Paper) ஒன்று உண்டு. ஆயினும் பாலகிருஷ்ண பிள்ளை தமது பதிப்பில் 12 புத்தகங்கள், 27 பதிப்புகளில் ஓரிடத்திலாதல் சிவாசாரியரிடமிருந்து தாம் மூலங்களைப் பெற்றதைக் குறிப்பிடவில்லை. மேற்கூறியவாறு தமக்கு ஒரே இடத்திலிருந்து மிக எளிதில் கிடைத்த மூலங்களைப் பல்லாண்டு காலம் துருவித்துருவி எழுத்தெண்ணி அரிதின் ஆராய்ந்து தமது பதிப்பை வெளியிட்டார்‘ என்னும் ஊரன் அடிகள் பதிவின் முலம் அறியமுடிகிறது (ஊரன் அடிகள்,1989: 54).

1931-ஆம் ஆண்டு தொடங்கி 1958 ஆம் ஆண்டு வரை திருவருட்பா பதிப்பிற்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்டு மொத்தம் பன்னிரண்டு நூல்களை பகுதி பகுதியாக, ஆனால் முழுமையாக வெளியிட்டவர் ஆ. பாலகிருஷ்ண பிள்ளை. அவை; (1) கீர்த்தனைப் பகுதி (1931, 1933, 1961), (2) வசனப்பகுதி (1931, 1934, 1958,....1959), (3) உரைப்பகுதி(மூன்றாம் பதிப்பு - வியாக்கியானப் பகுதி)(1931,1935, 1961), (4) உபதேசப் பகுதி (1932,1959), (5) திருமுகப்பகுதி (1932,1959), (6) தனிப்பாசுரப்பகுதி (1933, 1959), (7) முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதி (1956), (8) இரண்டாம் திருமுறையும் மூன்றாம் திருமுறையும் அல்லது திருஒற்றியூர்ப் பகுதி(1956), (9) ஐந்தாம் திருமுறை அல்லது திருத்தணிகைப் பகுதி(1957), (10) நான்காம் திருமுறையும் ஆறாம் திருமுறை முன்பகுதியும் அல்லது பூர்வமான சிதம்பரப் பகுதி(1958), (11) ஆறாம் திருமுறை இடைப்பகுதி அல்லது உத்தரஞான சிதம்பரப் பகுதி (1958), (12) ஆறாம் திருமுறை முடிந்த பகுதி அல்லது சித்திவளாகப் பகுதி (1958) எனப் பன்னிரண்டுப் புத்தகங்களாகும்.

ஆ. பாலகிருஷ்ண பிள்ளையின் பன்னிரண்டு புத்தகங்கள் மட்டுமே அடுத்தடுத்து ஓரிரு பதிப்புகளைக் கண்டன என்பதை மேற்குறிப்பிட்ட தகவல்களின் மூலம் அறிய முடிகிறது. அதிலும் அதிகப்படியாக

வசனப்பகுதியே ஐந்து பதிப்புகளைக் கண்டுள்ளது. அடுத்த ஆறு புத்தகங்கள் முதல் பதிப்போடு நின்றுவிட்டன. இவை அனைத்தும் அடக்க விலைப் பதிப்பாக வெளிவந்ததோடு முதல் ஆறு புத்தகங்கள் எளிதில் கையாளக்கூடிய கையடக்கப் பதிப்பாக அச்சிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. 'முதல் ஆறு பகுதிகளை அடக்க விலைப் பதிப்பாக அச்சிட்டதில் நான் அடைந்த பொருள் நஷ்டத்தாலும், பிரதி நஷ்டத்தாலும் சிநேக நஷ்டத்தாலும் சோர்வடைந்து, நான் கொண்ட விரதம் எப்படி முடியப்போகிறது என்று திருவருளை இரவும் பகலும் நாடிக் கலங்கிக் கொண்டிருந்தபோது 'மலங்கினேன் கண்ணீரை மாற்றி மலங்கெடுத்த பெருந்துறை' என்றவாறு திருவருளின் துணைமை தோன்றி விளங்க, உலக விவகாரங்களில் தேர்ச்சி யடைந்ததோடு ஆன்மார்த்தங்களில் ஆழ்ந்த பற்றுடையவரும் எனது இளம்போதிய கலாசாலை நண்பருமான ஓர் அன்பர், நான் ஆராய்ந்து முடித்த இப்பகுதிகளைப் பொருள் நஷ்ட முண்டாகாத எல்லையில் அடக்கவிலைப் பதிப்பாகவே வெளியிடுவதற்கு வேண்டிய ஓர் ஏற்பாட்டினைச் செய்து கொடுத்தார். இங்கனம் அவர்கள் ஆடை இழந்தவன் கைபோல் எனக்கு உதவி செய்ய முன்வந்ததால், நான் இதுவரையில் செய்ய முடியாது வருந்தி விட்டிருந்தவற்றில் சிலவற்றோடுகூடி இப்பதிப்பு வெளிவருகிறது'(ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, தொகுதி - 1, 2007: 31). என்பதன் மூலம் ஆ. பாலகிருஷ்ண பிள்ளை அடக்கவிலை பதிப்பால் அடைந்த பொருள் நஷ்டத்தை அறிய முடிகிறது.

தொழுவூர் வேலாயுத முதலியாரின் பதிப்பை அடுத்துச் சில புதிய செய்திகளைச் சேர்த்துப் பதிப்பித்தவர் ச.மு. கந்தசாமி பிள்ளை. ஆனால் அதையும் தாண்டி வள்ளலாரின் கடிதங்கள், வள்ளலார் தமது அன்பர்களுக்கு இட்ட கட்டளைகள், அழைப்பிதழ்கள், உபதேசங்கள், உரைகள் மற்றும் சிறு குறிப்புகள் என்று அரிய பல செய்திகளை வெளிக்கொணர்ந்தவர் ஆ. பாலகிருஷ்ண பிள்ளை. அத்துடன் பதிப்பு விடையங்களிலும் பல நுணுக்கங்களைக் கையாண்டுள்ளார். 1867ஆம் ஆண்டு முதல் 1924 ஆம் ஆண்டு வரை வெளிவந்த திருவருட்பா பதிப்புகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இப்பதிப்பு அமைந்துள்ளது. அதனைக் கீழ்வருமாறு பகுத்துக்கொள்ளலாம்.

திருவருட்பா ஆறு திருமுறைகளையும் பன்னிரண்டு நூல்களாகப் பிரித்து வெளியிட்டமை.

ஆறாம் திருமுறையை முன் பகுதி, இடைப்பகுதி, முடிந்த பகுதி என்று மூன்று நூல்களாக பகுத்துப் பதிப்பித்தமை.

நான்காம் திருமுறையை ஆறாம் திருமுறையுடன் சேர்த்து அச்சிட்டமை.

தலைப்புகள் இல்லாத பதிகங்கள் சிலவற்றிற்குத் தலைப்புகள் இட்டும்

சில தலைப்புகளை மாற்றியும் அச்சிட்டமை.

தலைப்புகள் இல்லாத திருமுறைகளுக்குத் தலைப்புகள் கொடுத்தமை.

இத்தகைய சிறப்பிற்குரிய ஆ. பாலகிருஷ்ண பிள்ளையின் இந்த அரிய பதிப்புகள் அவர்தம் பேருழைப்பு, வள்ளலாரின் மெய்யன்பர்களுக்குக் கிடைக்க வேண்டும்; தொடர்ந்து கிடைத்திடுதல் வேண்டும் என்பதே அவரின் பேரவாவாகும். ஆனால், 1958க்கு பிறகு இவரின் நூல்கள் மறுபதிப்பு செய்யப்படாமல் கிடைப்பதற்கு அரிதாக இருந்தது. ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஆ. பாலகிருஷ்ண பிள்ளையின் பேரவாவை நிறைவேற்றும் வகையில் சாரதா பதிப்பகம் டிசம்பர் 2006-இல் இவரின் பன்னிரண்டு நூல்களையும் மறுபதிப்புச் செய்து நான்குத் தொகுதிகளாகக் கொண்டு வந்துள்ளது.

இதேபோன்று 2007 இல் 'தி பார்க்கர்' பதிப்பகம் ஆ. பாலகிருஷ்ண பிள்ளையின் பன்னிரண்டு நூல்களையும் மறு பதிப்புச் செய்து அப்படியே பன்னிரண்டு நூல்களாகத் தந்திருக்கின்றனர். தற்போது ஆ. பாலகிருஷ்ண பிள்ளையின் கொள்ளுப் பேரன் கா. தமிழ்வேங்கை தனது ஐந்திணை வெளியீட்டகத்தின் வாயிலாக ஆ. பாலகிருஷ்ண பிள்ளையின் திருவருட்பா பதிப்பு நூல்களை மாற்றம் எதுவும் செய்யாமல் மறு பதிப்பு செய்து 2017 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஊரன் அடிகள் வரலாற்று முறைப் பதிப்பு (1972)**

ஆ. பாலகிருஷ்ண பிள்ளையின் பதிப்பை அடியொற்றி 1972 இல் வரலாற்று முறைப் பதிப்பாக 'திருஅருட்பா' ஆறு திருமுறைகளையும் ஒரே நூலாகப் பதிப்பித்தவர் ஊரன் அடிகளார். ஆ. பாலகிருஷ்ண பிள்ளைக்கு கிடைக்காத மூல ஏடுகள் சில இவருக்கு கிடைத்ததால் மேலும் சில பாடல்களைச் சேர்த்துத் திருவருட்பாவை இவர் வெளியிட்டுள்ளார். இவ்வரலாற்று முறைப்பதிப்பில் நான்கு உரைநடை விண்ணப்பங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. பிற உரைநடைப்பகுதிகள் இப்பதிப்பில் பதிப்பிக்கப் பெறாமைக்குத் 'திருவருட்பா உரைநடை பகுதி' என்னும் நூல் தனியே வெளியிடப்பட்டதே காரணம் ஆகும்.

வள்ளலாரின் பாடல்களைத் தொகுத்துத் திரட்டியவாறே உரைநடைகளையும் அன்பர்கள் திரட்டி வைத்திருந்தனர். ஆனால் பாடல்களை முழுமையாக வெளிக்கொணரக்கூடிய ஆர்வத்தைப் போன்று உரைநடை வடிவங்களையும் முழுமையாக வெளிக்கொணர அவர்கள் ஆர்வம் கொள்ளவில்லை.

ஆ. பாலகிருஷ்ண பிள்ளையே அனைத்து உரைநடை வடிவங்களையும்

முழுமையாக ஒன்று திரட்டி வெளிக்கொணர்ந்தார். இருப்பினும், அவை நான்கு நூல்களில் பகுதி பகுதியாக வெளியிடப்பட்டன. இவரே உரைநடை முழுமைப் பதிப்புக்கு வித்திட்டவர் ஆவார். ஆ. பாலகிருஷ்ண பிள்ளை வெளியிட்ட வசனபாகம், வியாக்கியானப் பகுதி, உபதேசப் பகுதி, திருமுகப்பகுதி ஆகிய நான்கு பகுதி நூல்களையும் ஒருசேரத் தொகுத்து உரைநடை வடிவங்கள் முழுமையையும், திருவருட்பா உரைநடைப் பகுதி என 1978 இல் ஊரன் அடிகள் வெளியிட்டார். இந்நூலுள் இராமலிங்க வள்ளலார் அருளிய உரைநடைப் பகுதிகளான வியாக்கியானங்கள் மருத்துவக் குறிப்புகள், உபதேசங்கள், திருமுகங்கள், அழைப்புகள், அறிவிப்புகள், கட்டளைகள், விண்ணப்பங்கள் ஆகிய அனைத்தும் அடங்கியுள்ளன.

திருவருட்பா வரலாற்று முறைப் பதிப்பில் ஊரன் அடிகள் செய்துள்ள மாற்றங்களைக் கீழ்வருமாறு சுட்டலாம்.

நூல் முழுமையும் பாவினம் குறித்து சந்தி பிரித்தும் பதிப்பித்துள்ளமை.

திருமுறைகளும் பதிகங்களும் அவை எழுதப்பட்ட கால அடிப்படையில் வரிசையாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளமை.

பாடல்களுக்குத் தொடர் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளமை.

முதற்பதிப்பை 1972இல் சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையமும், இரண்டாம் பதிப்பை முதல் ஐந்து திருமுறைகள் ஒரு புத்தகமாகவும் ஆறாம் திருமுறை ஒரு புத்தகமாகவும், 1981இல் இராமலிங்கர் பணிமன்றமும், மூன்றாம் பதிப்பை 1989இல் மீண்டும் முதற்பதிப்பை வெளியிட்ட சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையமே இரண்டாம் பதிப்பைப் போன்று இரண்டு தொகுதிகளாக வெளியிட்டுள்ளது.

இதுவரை சுட்டிக்காட்டப்பட்ட மூலப் பதிப்புகள் தவிரச் சில தனிநபர்களும், நிறுவனங்களும் திருவருட்பாவை முழுவதுமாக, பகுதியாக வெளியிட்டுள்ளனர். அவையெல்லாம் மறு அச்சுகளாகவே பெரும்பாலும் உள்ளன.

## தொகுப்பாக:

அச்சு ஊடகத்தின் வருகையால் கடந்த 150 ஆண்டுகளில் சன்மார்க்க அன்பர்கள் பலர், திருவருட்பா ஆறு திருமுறைகளைப் பல்வேறு இன்னல்களுக்கு நடுவில் பல்வேறு காலகட்டங்களில் தம் தேவைக்கேற்ப முழுமையாகவும் குறிப்பிட்ட திருமுறைகளை மட்டும் பல்வேறு வடிவங்களில் அடக்க விலைக்கும், குறைந்த விலைக்கும், இலவசமாகவும் பதிப்பித்து வெளியிட்டு வந்துள்ளனர். இதன் மூலம் இவர்கள் வணிக நோக்கில் இப்பணியைச் செய்யவில்லை என்பதை அறியமுடிகிறது. எனில் இவர்கள்

ஏன் இப்பணியில் ஈடுபட வேண்டும் என்று ஆராயும்போது சைவத்துக்குள் தனக்கான இடத்தைத் தேடத் தொடங்கிய இடைநிலைச் சாதியினர் இராமலிங்கரைத் துணைக்கு இட்டுக்கொண்டனர் என்பதை அறிய முடிகிறது. இந்த நோக்கத்திற்காகவே தொடக்க காலங்களில் அவரது பாடல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். பாடல்களை மட்டுமே தொகுத்து வெளியிட்டுக்கொள்ள ஆர்வம் காட்டிய இவர்களுக்கு அவரது கொள்கைகளையோ, கோட்பாடுகளையோ அவர் நிறுவிய நிறுவனங்களையோ மக்களிடத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படி இருந்திருப்பின் முதல் ஐந்து திருமுறைகளை வெளியிட்ட வள்ளலாரிடம் அனுமதிக் கேட்டு உண்ணா நோன்பிருந்த இறுக்கம் இரத்தின முதலியார், ஏன் ஆறாம் திருமுறையை வெளியிடவில்லை, என்ற கேள்வி எழுகிறது. இவ்வாறு இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ள திருவருட்பா பதிப்புகளுக்கு பின்னால் பல சமூகப் பின்னணியிலான வரலாற்றுப் பதிவுகள் உள்ளன என்பதை ஊகிக்கமுடிகிறது.

துணைநூற்பட்டியல்:


(1) இராமசாமி முதலியார், திருவருட்பாத் திருமுறை, இந்து யூனியன் அச்சியந்திர சாலை,1896.

(2) ஊரன் அடிகள் (ப.ஆ.), திருஅருட்பா முதல் ஐந்து திருமுறைகள், சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், மூன்றாம் பதிப்பு: அக்டோபர் - 1989.

(3) ஊரன் அடிகள் (ப.ஆ.), திரு அருட்பா ஆறாம் திருமுறை, சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், மூன்றாம் பதிப்பு: அக்டோபர் - 1989.

(4) ஊரன் அடிகள், இராமலிங்க அடிகள் வரலாறு, சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், மூன்றாம் பதிப்பு: அக்டோபர் - 2006.

(5) கந்தசாமி பிள்ளை, ச.மு., இராமலிங்க சுவாமிகள், சரித்திரக் குறிப்புகள், சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், செப்டம்பர் - 2009.

(6) குகத்திரு ரஸபதி அடிகள், திருவருட்பா விரிவுரை திருவடிப் புகழ்ச்சி, முதல் புத்தகம், வடார்க்காடு மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், வேலூர், முதற்பதிப்பு: ஷனவரி - 1967.

(7) சரவணன், ப., நவீன நோக்கில் வள்ளலார், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதற்பதிப்பு: டிசம்பர் - 2010.

(8) சரவணானந்தா, வள்ளலார் கண்ட ஒருமைவாழ்வு, இராமலிங்கர் பணிமன்றம், சென்னை, முதற்பதிப்பு: ஷனவரி - 1974.

(9) சிவஞானம், ம.பொ., வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, பூம்புகார் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி - 2011.

(10) துரைசாமிப் பிள்ளை, ஔவை சு., (உ.ஆ.), திருவருட்பா மூலமும் உரையும், ஒன்பதாம் தொகுதி, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு: அக்டோபர் - 2013.

(11) பாண்டுரங்கன், இராம., திருவருட்பா பதிப்புச் சோலை, ஐந்திணை வெளியீட்டகம், விழுப்புரம், முதற்பதிப்பு: பிப்ரவரி 2017.
(12) பாலகிருஷ்ணபிள்ளை, ஆ., (ப.ஆ.), திருஅருட்பா கீர்த்தனைகள் பகுதி, முதலாம் புத்தகம், தி பார்க்கர், சென்னை, மறுபதிப்பு: 2007.
(13) பாலகிருஷ்ணபிள்ளை, ஆ., (ப.ஆ.), திருஅருட்பா உபதேசப் பகுதி, நான்காம் புத்தகம், தி பார்க்கர், சென்னை, மறுபதிப்பு: 2007.
(14) பாலகிருஷ்ணபிள்ளை, ஆ., (ப.ஆ.), திருஅருட்பா திருமுகப் பகுதி, ஐந்தாம் புத்தகம், தி பார்க்கர், சென்னை, மறுபதிப்பு: 2007.

❖ ❖ ❖

# சைவசமய மரபிற்குள் வள்ளலாரைக் கட்டமைக்கும் அரசியல்

முனைவர் கு. கலைவாணன் &
முனைவர் சிவகுமார்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் வளர்ச்சி என்பது தமிழ்ச் சமூகத்தின் கலை, கலாச்சார மற்றும் பண்பாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியாகும். இதனை 'மறுமலர்ச்சி' (அல்லது) 'புத்தொளி காலமாக' குறிப்பிடுகிறோம். இந்த நூற்றாண்டினைப் பொருண்மை ரீதியாகவும் கருத்தியல் ரீதியாகவும் தொழில்நுட்ப வளர்ச்சியோடும் தனிப்பட்ட ஆளுமைகள் சார்ந்தும் என எந்த வகைகொண்டும் விரிவாக விவாதிப்பதற்கான ஆவணங்கள் உள்ளன. இதில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் செயல்பட்ட ஆளுமைகளுள் மிக முக்கியமானவராகக் கருதப்படக் கூடியவர் சிதம்பரம் இராமலிங்கம் எனும் வள்ளலார். தற்போதைய தமிழ்ச் சூழலில் பல்வேறு சிந்தனை மரபை கொண்ட ஒவ்வொருவரும் தங்களது கண்ணோட்டத்தில் வள்ளலாரைப்பற்றிப் பதிவு செய்கின்றனர். ஆனால் வெகுசன மக்கள் மத்தியில் சைவ சமயத்தைச் சார்ந்த சைவ அடியாராகவே, இராமலிங்கசுவாமியாகவே வழிபாடு செய்யப்பட்டு வருகிறார். இராமலிங்க அடிகள் மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், தாயுமானசுவாமிகளைப் பின்பற்றித் தனது பாடல்களைப் பாடினாலும் அவரது ஆறாவது திருமுறையைப் பலர் ஏற்றுக்கொள்வதில்லை. இன்றைய பொதுவெளியில் இராமலிங்க அடிகளாரைச் சைவ அடையாளத்தோடு மட்டுமே பொருத்திப் பார்க்கின்ற தன்மை தமிழ்ச் சூழலில் எப்படி உருவாகி வளர்ந்தது என்பதைத் தர்க்கப்பூர்வமாகப் புரிந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தைக் கவனப்படுத்துகிறது இக்கட்டுரை. இதனை வள்ளலாரின் கொள்கைகள், அவரது படைப்புகள், வள்ளலார் குறித்து ஆய்வு செய்த ஆளுமைகள் ஆகியவற்றோடு அச்சு ஊடக மரபில் வள்ளலாரின் ஆக்கங்கள் உருவாகி வளர்ந்த தன்மைகள்ஆகியவற்றையும் இணைத்து நோக்கும்போது இராமலிங்க அடிகளாரும் சைவமும், சைவமும் இராமலிங்க அடிகளாரும் இணைந்து இயங்குகின்ற முறைமையை அறிய இயலும்.

## அருட்பெருஞ்சோதியும் அன்பும்

'அன்பே சிவம்' என்பது சைவக்கொள்கை. 'அருட்பெருஞ்சோதி

தனிப்பெருங்கருணை' என்பது இராமலிங்கரின் கொள்கை. சைவத்திலிருந்து விலகி வாழ்ந்தவரில்லை இராமலிங்கர். ஆனால் அன்பு என்பதைக் கருணை, இரக்கம் என்று பரந்த பொருளில் புரிய வைக்கக்கூடிய 'ஆன்மநேய ஒருமைப்பாட்டு நெறியை' புதிய சொல்லால் வெளிப்படுத்தியவர். அதுதான் அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை என்பதாகும். அன்பு என்ற சொல்லினைச் சொல்லும்போது இராமலிங்கரின் பொருளை நாம் நேரடியாகப் பெற இயலாது. மேலும் இராமலிங்கர் தன்னுடைய சிறுவிண்ணப்பத்தில், சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம் என்ற தலைப்பில் "எல்லாமுடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே | இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் வருணம் ஆசிரம முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்திற் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்" (உரைநடை நூல்கள், 1999, ப. 68) என்று குறிப்பிடுகின்றார். இதில் சைவத்தின் அன்பையும் அருட்பெருஞ்சோதியின் தன்மையையும் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் கருணை என்பதில் தம்மிடம் உள்ளதை பிறர்க்கு கொடுத்து மகிழ்வதும் பிறர்க்கு வரும் துன்பத்தைக் கண்டு இரங்கி உதவிபுரிதலுமே ஆன்ம நேயமாகப் புரிந்துகொள்ள முடியும்.

## வள்ளலாரும் தமிழ் ஆளுமைகளும்

தமிழ் ஆராய்ச்சியிலும் வள்ளலார் பற்றிய புரிதலிலும் தனித்து விளங்கக் கூடிய தமிழ் ஆளுமைகள் வள்ளலாரை எப்படிப் புரிந்து வைத்திருக்கின்றனர் என்பது மிக முக்கியமானதாகும். ஏனென்றால் தமிழ் ஆய்வு வரலாற்றில் தவிர்க்க முடியாததாக இருக்கும் ஆளுமைகளின் கருத்துகள் வள்ளலாரைப் பற்றிய ஆய்விலும் புரிதலிலும் முக்கியத்துவம் பெறும். இதனை, திரு.வி.க., வையாபுரிப்பிள்ளை, தெ.பொ.மீ., மு. அருணாசலம், கா. அப்பாதுரையார் ஆகியோர் இராலிங்க அடிகளைப் பற்றிக் கூறும் கூற்றுகளிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

திரு.வி.க. இராமலிங்கரை அவர் காலத்தில் வாழ்ந்த சீர்திருத்தவாதிகளோடு ஒப்பிட்டுக் கூறுகிறார். ஆனால் அந்த ஒப்பிடுதலைக் கொல்லாமைக் கோட்பாட்டோடு ஒப்பிட்டு அத்தன்மை கொண்டவராக இராமலிங்கரைக் குறிப்பிடுகிறார். இதுபற்றிய திரு.வி.க.வின் கருத்தானது "இராமலிங்க வள்ளலார் அருளிச் செய்த திருவருட்பாவில் அவர் காலத்தில் வாழ்ந்த பெரியோர்களின் கருத்துகள் மலிந்துக் கிடக்கின்றன. வள்ளலார்

அருட்பா அவ்வளவில் கட்டுப்பட்டு நிற்கவில்லை. பண்டைக்காலச் சான்றோர்களின் உள்ளக் கிடக்கைகளும் அருட்பாவில் உண்டு.

*“ வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட*
*மரபினில் யானொருவ னன்றோ?*

என்பது வள்ளலாரின் திருவாக்கு.” (வள்ளலார் பன்முக வாசிப்பு (வ.ப.மு.வா), 2018, ப. 25) இதில் வாழையடி வாழை என்பதற்கு திரு.வி.க. கொல்லாமையை வலியுறுத்துகின்ற அன்புநெறி சார்ந்தவராக வள்ளலாரைக் குறிப்பிடுகின்றார். அதில் “அம்மரபு அஹிம்சா தர்ம மரபு. இதற்குக் கால்கொண்டவர் விருஷப தேவர். அவரதுகாலம் தெரியவில்லை. அது சாத்திரக் காலம் கடந்தது. பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அவர் தோன்றியவர் என்பது நன்கு தெரிகிறது. அவரே உலகிற்கு முதன்முதலில் அஹிம்சையை அறிவுறுத்தியவர். இவ்வஹிம்சையை காலதேச வர்த்தமானத்துக்கு ஏற்றவாறு பல பெரியோர்களால் வளர்க்கப்பட்ட இந்நாளில், மக்கள் கூட்டத்தின் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் அவ்விழுமிய அறத்தை ஓம்பினர். அருட்பா என்னும் கனியினின்று வடியும் சாறு கொல்லாமை என்னும் பேரறமாகும்” (மேலது) என்கிறார் திரு.வி.க..

வள்ளலார் குறித்து தெ.பொ.மீ. எழுதிய மரணமில்லா ஒளிமயமான வாழ்க்கை என்ற கட்டுரையில் இராமலிங்கர் கொள்கை அன்பினை வலியுறுத்தும் தன்மை உடையவை என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். அதில் “இராமலிங்கரைப் பொருத்தவரை கடவுள் அன்பாகவே இருக்கிறார். இது அவருடைய முன்னோடி திருமூலர் சொல்வது போன்று அன்பே கடவுள் என்று இருந்தாலும்: அது கண்மூடித்தனமான அன்பு கிடையாது. பிரபஞ்சமளாவிய உன்னதமான இறைவனில் இருள் என்பதே கிடையாது. இராமலிங்கருக்கு அக்கடவுளே அருட்பெருஞ்ஜோதியும் ஒளிமயமான ஒப்பற்ற அன்புமாவர்” (மேலது, ப.32) என்று குறிப்பிடுகின்றார்.

பேரா. வையாபுரிப்பிள்ளைஇராமலிங்க அடிகளைத் தமது ஆய்வு அணுகுமுறைமையின் மூலம் நன்கு புரிந்து வைத்திருக்கிறார். வள்ளலார் எப்படி எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நபராக இருந்தார். அதற்குக் காரணமாக இருந்த செயல்பாடு எது? தமிழ் பக்தி மார்க்கத்தில் வள்ளலார் கரைந்து போனதும் வள்ளலார் பக்தி மார்க்கத்தில் தமிழ் மக்கள் உருகிப் போனதை வையாபுரிப்பிள்ளை எப்படிப் பார்க்கிறார்? வள்ளலாரின் பக்தித்திறம் சிறக்கக்காரணமாக இருந்தது எது? என்ற மூன்று வினாக்களுக்கான விடையை வையாபுரிப்பிள்ளையிடம் தேடினால் சுடர்மணியாக வள்ளலார் தெரிகிறார். வையாபுரிப்பிள்ளையின் தமிழ்ச்சுடர்மணிகள் கட்டுரைத் தொகுப்பில் ‘இராமலிங்க சுவாமிகள்’ தலைப்பில் எழுதியுள்ளார். அதில்

மேற்கண்ட வினாக்களுக்கான விடையைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

- இராமலிங்கரின் “தர்க்க வெற்றிகளும், பிரசங்கச் சிறப்பும் எண்ணுந்தோறும் இனித்து உள்ளத்தை யுருக்கும் செஞ்சொற் கவிதையின் பெருக்கமும் தூய ஒழுக்கத்தின் மேம்பாடும் தமிழ் மக்களைப் பெரிதும் வசிகரீத்தன.” ( 2012, ப. 183)

- “இராமலிங்க சுவாமிகள் வெகுகாலமாகத் தமிழ் நாட்டிற் கரைபுரண்டு, பெருகிவந்த பக்திப் பெருவெள்ளத்தை அணைகோலி, தமது கவிதா மார்க்கத்திற்குச் செல்லவிட்டு, தம் கவியின் இசையினிமையால், தமிழ் மக்கள் உள்ளத்தைக் கொள்ளைக்கொண்டு, இல்லறந்துறந்து வாழ்ந்தவர்; ஒரு பக்த பரம்பரைக்குத் தலைவராய்த் திகழ்ந்தவர்” (மேலது, ப.188)

- தொழுவூர் வேலாயுத முதலியார் “இவர் மிகுந்த பக்தி சிரத்தையுடன் இராமலிங்க சுவாமிகள் செல்லுமிடங்களுக்கெல்லாம் சென்று இலக்கண, இலக்கிய விஷயங்களிலெல்லாம் சுவாமிகளுக்கு ஊன்றுகோலாயிருந்து, அவர்களுடைய சரித்திரம் பரக்க வழங்குவதற்கும் காரணமாயிருந்தனர். இவர் போன்ற சிஷ்யர்கள் சுவாமிகளது புகழமுதைத் தமிழ்நாடு முழுவதும் பருகி இன்புறும்படி செய்து வந்தனர்” (மேலது, ப. 183)

வள்ளலார் குறித்த வையாபுரிப்பிள்ளையின் கட்டுரையில் இராமலிங்க அடிகளின் ஆறாவது திருமுறை குறித்த நிலைப்பாடு என்ன என்பது பற்றி எந்தக் கருத்தும் இடம்பெறவில்லை. ஆனால், வள்ளலாரின் செயல்பாடு தமிழகத்தில் நிலைபெற்ற முறைமையை ஆய்வுப் பூர்வமாக விளக்கியுள்ளார்.

கா. அப்பாதுரையார் சன்மார்க்க நூற்றாண்டு மலரில் எழுதிய ஆங்கிலக் கட்டுரையில் “ஒரு குறிப்பிட்ட களத்தில் சீர்திருத்தவாதிகள் நடத்தும் சீர்திருத்தம் சமயசார்பற்ற செயல்பாடாகும். அவர்களுடைய இயக்கம் மதத்தோடு தொடர்புடையது கிடையாது. ஆனால் இராமலிங்க அடிகளாருக்குச் சமூக சீர்திருத்தம் என்பது சமய நெறியின் அங்கமாகும். சொல்லப்போனால் அதுவே மெய்ஞான அனுபவத்தின் உச்சகட்டம். அவருடைய களப்பணி தன்னுடைய முன்னோடிகளைவிட ஒருபடி முன்னேறிச்சென்று உலகப்பொதுமறையான திருக்குறளில் சொல்லப்பட்ட மானுடம் என்னும் மெய்ஞானத்திற்குள் தன் இலக்கை நிர்ணயித்தது.” (ப.மு.வா., ப. 56) என்று குறிப்பிட்டுள்ளார். இதில் அப்பாதுரையார் சீர்திருத்தவாதிகள் என்றாலே சமயச் சார்பற்று இருக்கும் நிலையில் வள்ளலார் சமயச் சார்புடைய சீர்திருத்தவாதி என்று அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்திருப்பது கவனத்திற்குரியது. சீர்திருத்தவாதிகளுக்கு வள்ளலார் விலக்கானவர் என்று கூறுவது போலத் தோன்றுகிறது.

மு. அருணாசலம் இராமலிங்க அடிகளை மேற்கண்ட நால்வரும்

அணுகிய முறைமையினின்றும் முற்றிலும் மாறுபட்டுள்ளார். அவர் வள்ளலாரின் சமகாலத்தில் வாழ்ந்த மிக முக்கிய ஆளுமைகளான மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஆறுமுக நாவலர் ஆகியோருடன் ஒப்பிட்டும் தமிழகக் களநிலவரத்தை உணர்த்தும் விதத்தில் Saint Ramalinga - His Times and Messages என்ற கட்டுரையினை எழுதியுள்ளார். அதில் "தமிழ் இலக்கிய வரலாற்றில் வேறு எந்த அடியார் அல்லது இலக்கியத் துறையைச் சேர்ந்தவர்களின் கருத்துகளும் இந்த அளவிற்குத் திரித்து நடைமுறைக்கு அப்பாற்பட்டு மூடநம்பிக்கைகளாக மாற்றம் அடைந்ததில்லை. இவரது காலத்தைச் சேர்ந்த மற்ற இருவரின் வாழ்வு குறித்து இப்படிப்பட்ட புனைவுகள் ஏற்படவில்லை. இராமலிங்கம் என்பவர் வெறும் இராமலிங்கம் பிள்ளை மாத்திரமே. ஆனால் அவரது பாடல்களில் இருந்த எளிமை மக்களை என்றும் இல்லாதது போல் ஈர்த்தது. எனவே அவரை சுவாமி என்றும் துறவி என்றும் அழைத்து வந்தனர். அதனைத் தொடர்ந்து அவர் குறித்துப் பல கட்டுக்கதைகள் தோற்றுவிக்கப்பட்டு அவரை ஒரு தெய்வீக சக்தியுடையவர் எனவும் பல அற்புதங்களை நிகழ்த்தக் கூடியவர் எனவும் மக்கள் நம்பத் தொடங்கினர். அவர் மக்களின் நோய்களையும் வேதனைகளையும் துடைத்தெறியும் வல்லமை படைத்தவர் என நம்பத் தொடங்கினர். அவரது பாடல்களைப் படித்து கருத்துகளை நடைமுறை வாழ்வில் கடைபிடிப்பதைவிட இந்தக் கட்டுக்கதைகளை நம்புவது எளிதான காரியமாக இருந்தது" (ப.மு.வா.,ப.47) என்று பதிவு செய்துள்ளார். மேலும் இக்கட்டுரையில் சைவ சமயத்தை முறையாகப் பின்பற்றி வாழ்ந்தவராகவே மு. அருணாசலம் குறிப்பிடுவதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

மேற்கண்ட ஐந்து தமிழ் ஆளுமைகளும் வள்ளலாரைத் தங்களது ஆய்வியல் நெறியில் நின்று இராமலிங்க அடிகளின் பன்முகத்திறத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். அதனுள்மு. அருணாசலம் சமகால நிலவரத்தோடு வள்ளலாரையும் அவரது சைவக்கொள்கைகளை விளக்கிச்செல்ல மற்ற நால்வரின் கருத்திலும் நேரடியாகவோ, மறைபொருளாகவோ சைவ சமயத்தின் தாக்கம் இழையோடிக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. இது வள்ளலார் குறித்த ஆய்வு மேற்கொள்ளும் எதிர்கால ஆய்வாளரிடையே தாக்கத்தை ஏற்படுத்தும்.

## இராமலிங்கரின் ஆக்கமும் சைவ அச்சுப்பண்பாடும்

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் சைவ நூல்களின் அச்சுப்பண்பாடு என்ற ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட அத்தனைப் பொருத்தப்பாடுகளும் இராமலிங்க அடிகளின் ஆக்கங்களுக்கும் பொருந்தி வருகின்றன. ஒரே ஒரு வேறுபாடுதான் எஞ்சி நிற்கிறது. அது சைவ வழிபாடாகப் பண்பாடாக உருவானது. இது தனிமனித வழிபாடாகப்

போற்றப்படுகிறது. இதில் சில விதிவிலக்குகளும் உண்டு. இந்த கட்டுரையின் தொடக்கத்தே குறிப்பிட்டதைப் போல இது சரியா? தவறா? என்று விவாதிப்பதைவிட அது உருவாகி வளர்ந்த தன்மையினைப் புரிந்து கொள்வது அவசியம். இந்தப் பின்னணியில் அச்சு சார்ந்த மரபில் வள்ளலாரின் ஆக்கங்ளைக் காண்போம்.

வள்ளலார் ஆக்கங்கள் எப்படி அச்சுக்குள் வந்தது, அதில் வள்ளலார் இருக்கும் போது அச்சுக்கு வந்தது எவை? அவரது இறப்பிற்குப்பின் வந்தது எவை? ஆறாவது திருமுறை எப்போது யாரால் அச்சிடப்பட்டது? ஆறு திருமுறைகளும் சேர்ந்து அச்சிட்டு எத்தனைப் பேர் வெளியிட்டுள்ளனர்? வள்ளலார் ஆக்கங்களோடு அவரது வரலாறு மற்றும் பிற செய்திகளை இணைத்தும் சைவ நாயன்மார்களின் பாடல்களோடு இராமலிங்கரின் பாடல்களைச் சேர்த்தும் நூல்களை வெளியிட்டுள்ளனர். இதுபோன்ற தன்மை எப்படி உருவாகி வளர்ந்துள்ளது? என்ற எண்ணற்ற கேள்விக்கான விடையை “சிதம்பரம் இராமலிங்கம் எனும் வள்ளலார் கைநூல்”(சி.ரா. வ.கை.) என்னும் நூலினை அச்சு ஊடகப் பின்புலத்தில் நோக்கினால் மேற்கண்ட கேள்விக்கான பதிலை நோக்கிப் பயணிக்க முடியும்.

## முதன்முறை அச்சாக்கப் பின்னணி

வள்ளலார் பாடல்களை நூலாக அச்சிட இறுக்கம் இரத்தின முதலியார் ஏழு ஆண்டுகள் தவமிருந்து வள்ளலாரிடமிருந்து அனுமதியைப் பெற்றுள்ளதை 1867ஆம் ஆண்டுதிருவருட்பா முதற்புத்தகத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. இதில் வள்ளலார் மற்ற உயிர்களிடத்தில் காட்டிய கருணையை பாடல்கள் வெளியீட்டிலும் காட்டச் செய்துள்ளார் இரத்தின முதலியார். இதனை, “திருவருட்பாவை வெளியிடுவதில் ஏழாண்டுகள் இரத்தின முதலியார் வள்ளலாரிடம் அனுமதி வேண்டி தவங்கிடந்தார். இறுதியில் நாளும் ஒருவேளையே உண்பதென்று நோன்பு பூண்டு வருந்தி அரிதின் முயன்று திருவருட்பாவை முதன்முதலில் அச்சிட்டு வெளிக்கொணர்ந்தார்.”(சி.ரா.வ.கை, ப. 31). இதில் நான்கு திருமுறைகள் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் ‘திருவருட்பா வரலாறு’ என்னும் தலைப்பில் அறுபத்தாறு பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சைவ நாயன்மார்களின் பாடல்களை அவர்களது வரலாற்றோடு அச்சிடும் மரபு சைவ நூல்களில் பின்பற்றும் முறைமை வள்ளலாரின் திருவருட்பாவின் முதல் பதிப்பில் பின்பற்றப்பட்டிருப்பது நோக்கத்தக்கது.

## அருட்பாவின் ஆறாந்திருமுறை அச்சாக்கப் பின்னணி

முதல் ஐந்து திருமுறைகளை அச்சிட்டு வெளியிட உதவிய தொழுவூர் வேலாயுத முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார், புதுவை வேலு முதலியார்,

சிவானந்தபுரம் செல்வராய முதலியார், மயிலை சிக்கட்டி சோமசுந்தர செட்டியார் முதலிய யாவரும் ஆறாம் திருமுறையை அச்சிட்டு வெளியிட விரும்பவில்லை. இதனை, "சமரச வேதசன்மார்க்க சங்காபிமானிகளாகிய வேலூர் பத்மநாப முதலியார், பெங்களூர் இராகவலு நாயகர் வேண்டுகோள்படி, சென்னைக் கவர்மெண்டு நார்மல் பாடசாலைத் தமிழ்ப்புலவர் சோடசாவதானம் தி.க. சுப்பராயரெட்டியார் பார்வையிட்டு, மேற்படி சமரச வேதசன்மார்க்க சங்காபிமானி, திரிசிரபுரம் ம.லோகநாத செட்டியாரால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது" (மேலது, ப. 33). 1885ஆம் ஆண்டு முதன்முதலாக ஆறாம் திருமுறை அச்சிடப்பெற்றது.

## வள்ளலார் வரலாறு கட்டமைப்பும் அச்சு ஊடகமும்

வள்ளலாரின் வரலாற்றைக் கட்டமைப்பதில் பதிப்புகளின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இதனைப் பிருங்கி மாநகர இராமசாமி முதலியார் தாம் கொண்டு வந்த பதிப்புகளின் வழியாகச் செய்துள்ளார். இவரது செயல்பாடுகள் சைவ அச்சு நூல்களை வெளியிட்ட முறைமைகளோடு ஒத்த தன்மையுடையதாயிருக்கின்றது. அதில் சைவ நூல்களில் சைவ நூல்களோடு தொடர்புடைய பிற தகவல்களையும் இணைத்து நூலாக்குவர். அதே தன்மையை இவரும் பின்பற்றியுள்ளார். அப்பதிப்பில் "ஆறு திருமுறைகளும் சேர்ந்த இம்முதற்பதிப்பில்தான் வள்ளலாரின் திருவுருப்படமும் இராமசாமி முதலியாரால் இருபத்தாறு பக்கங்களில் எழுதப்பட்ட வள்ளலாரின் வரலாறும் (இராமலிங்க பிள்ளையவர்களின் சரித்திரச் சுருக்கம்) முதன்முதலில் அச்சிடப்பெற்றன. இவ்வரலாறு இராமசாமி முதலியாரால் பின்பு பதிப்பிக்கப்பெற்ற 1896ஆம் ஆண்டு திருவருட்பா பதிப்பிலும், பின்னர் வெளிவந்த பி.வே. நமசிவாய முதலியார், ஒ. ஆதிமூல முதலியார் ஆகியோர் பதிப்பித்த பதிப்புகளில் தொடர்ந்து இடம்பெற்றுள்ளது. இவற்றுடன்தொழுவூரார் பாடிய திருவருட்பா வரலாறும், பொன்னேரியார் பாடிய திருவருட்பிரகாச வள்ளல் ஞானசிங்காதன் செங்கோலாட்சி, தண்டபாணிசுவாமிகள் பாடிய அனுபவப் பதிகம், பிருங்கியார் எழுதிய திருவருட் பிரகாச வள்ளல் திருவுருத்தன்மை விண்ணப்பம் ஆகியவை நூலினிறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. 1891இல் ஆடூர் சபாபதி சிவாசாரியாரால் பதிப்பிக்கப்பட்ட வள்ளலாரின் குடும்பகோரம் என்னும் சிறுபிரசுரமும் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது"(மேலது, ப. 35). இது தனிப்பட்ட இராமலிங்க அடிகளார் வரலாறாக மட்டுமில்லாமல், அவரைப் பின்பற்றுபவர்கள், வழிபடுபவர்கள், அவரது திருவுருவக்கட்டமைப்பு ஆகிய அனைத்தும் திருவருட்பா மூலத்துடன் கூடிய பதிப்பாக மாறிவிடுகிறது. வெறும் திருவருட்பா மூலப்பிரதியை படிப்பதும் புரிந்துகொள்வதும் என்பதிலிருந்து இப்பிரதி முற்றிலும் மாறி விடுகிறது. இத்தன்மை அச்சு ஊடகத்தாலே சாத்தியப்படுகிறது.

## திருவருட்பா சுத்தப்பிரதி உருவாக்கப் பின்னணி

பிருங்கி இராமசாமி முதலியார் 1896இல் திருவருட்பா முழுவதையும் பதிப்பித்துள்ளார். அதில் பதிப்பிப்பதற்கான காரணத்தை விளக்கியுள்ளார். அதில் பொருளாசைக்காக அச்சிடவில்லையென்றும் சுத்தப்பிரதியாக அனைவருக்கும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு பதிப்பிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். சமகாலத்தில் வெளிவந்த திருவருட்பா பிரதிகளே அவரை இப்பணியைச் செய்ய வைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அதில் "இச்சென்னையின்கண் எழுத்துவாசனை யின்னதென்றறியாத சில பாலியச் சிறுவர்கள், பொருளாசையென்னும் பேய்பிடித்தாட்டுவதன் மயமாய் நின்று, முன்னச்சிட்டு வெளிப்படுத்தியாக, மேல்கண்ட (இவரது) பிரதியுள்ளதை மட்டும், பெரும்பிழையாகவும் தாறுமாறாகவும் அச்சடுக்கி, ஒன்றுக்குமுதவாத (புரூப்ஷீட்) என்னும் மட்டக்கடிதத்திற் பதிப்பித்திருக்கின்றனர். அப்பதிப்பின் பிழைகளையும் குறைவு நிறைவுகளையும் யான் வெளிப்படுத்தியிருக்கும், 'சூளையார் பதித்த, தெரிபிழை விளக்கமென்னும்' சிறு புத்தகத்தாலறியலாம். அதைக் கண்ணுறு மொவ்வொருவரும், அப்புத்தகம் இனாமாகக் கிடைப்பதாயிருந்தாலும், அதைக் கைநீட்டிவாங்கவே கருதார்களென்பது எனது கொள்கை. ஏனெனில் பெரியோர் வாக்கானெழுந்த திருப்பாசுரங்களைப் பிழைபடப் படிப்பவர்களுடைய கழுத்தில் எமதூதர்கள் தமது பாசக்கயிற்றைக் கட்டித் தாறுமாறாக விழுத்து வருத்துவரென்னும் பிரமாணத்தைக் கருதியேயாம். இவையனைத்து முணர்ந்த நண்பர்களனைவரும், சிவாநுபூதிச் செல்வராய் விளங்கும் அருட்பெருஞ்சித்தரோதிய வித்திருட்பாச் சுத்தப்பிரதியை அன்புடன் கைக்கொண்டு பிரதிதினமும் பாராயணஞ் செய்து திருச்சிற்றம்பலமுடையார் திருவருள் பெறுவார்களாக." (மேலது, பக் 36 - 37) என்று குறிப்பிட்டுள்ளார். அதில் தவறான பிரதிகளைப் படிக்க மாட்டார்கள் என்பதற்கு இப்பதிப்பாசிரியரின் விளக்கம் பயமுறுத்தும் வகையில் உள்ளது.

## இராமலிங்கபிள்ளையும் இராமலிங்கசுவாமியும்

சிதம்பரம் இராமலிங்கம்பிள்ளை என்ற பெயரானது 'சிதம்பரம் இராமலிங்க சுவாமி' என்று குறிப்பிடப்பட்டது பற்றிய தகவல் 1924ஆம் ஆண்டு ச.மு. கந்தசாமிப்பிள்ளையால் கொண்டுவரப்பட்ட பதிப்பினில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பதிப்பில் வள்ளலாரோடு வாழ்ந்தவர்கள் பலரை நேரில் சந்தித்து வள்ளலாரின் வாழ்கையை வரலாற்றை எழுதியுள்ளார். இதுவே வள்ளலாரின் உண்மையான வரலாறாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும் இப்பதிப்பில் சீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறைகண்ட வாசகம், தமிழ் என்பதன் உரை, வள்ளலார் உபதேசித்த உண்மைநெறி ஆகியவற்றை நூலின் முற்பகுதியில் சேர்த்துள்ளார். இந்தப் பகுதி வள்ளலாரை வாசிப்பவருக்கு முக்கியமானபகுதி. இதுவே ஒரு வாசகனுக்கு வள்ளலார் எப்படிப்பட்டவர் என்பதை உணர்த்துவதாகும். இந்த நூலில்தான் முதன்முதலாக வள்ளலாரின் பெயர்

மாற்றி அழைக்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் “வடலூர் சத்தியஞான சபையின் படம் முதன்முதலாக இப்பதிப்பில் அச்சிடப் பெற்றதோடு, எல்லாவற்றிற்கும் மேலாக வள்ளலாரின் பெயரை ‘சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை’ என்று அச்சிடும் முறையை நீக்கி ‘சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்’ என்று முதன்முதலில் இப்பதிப்பில்தான் அச்சிடப்படுகிறது” (மேலது, பக். 40 - 41) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## திரட்டுகள் மற்றும் வடிவம்சார் இராமலிங்க அச்சு நூற்கள்

திரட்டுகள் மற்றும் வடிவம் சார்ந்த நூல்கள் என்பவை பயன்படுத்துதலை நோக்கமாகக்கொண்டு உருவாக்கப்படுபவை. இவ்வகையான வாசிப்புமரபு என்பது அச்சு ஊடகத்தின் அறிவுக்கொடையாகும். அச்சு ஊடகம் இல்லையென்றால் இதுபோன்ற வாசிப்பு அனுபவம் சாத்தியமில்லை. சைவ அச்சு நூல்களில் இவ்வகையான வாசிப்பு மரபு வளமாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.(பார்க்க - தமிழ் அச்சுப்பண்பாட்டு வரலாறு சைவ சமயம் (1800-1950)) அதனுடைய உடனிகழ்வாகவே வள்ளலாரின் வடிவம்சார் நூல்களையும் நோக்க வேண்டும்.

இராமலிங்க அடிகளாரின் வடிவம்சார் நூல்கள் திரட்டுகள், கையடக்கப்பதிப்பு, பையடக்கப்பதிப்பு மற்றும் சிறுவெளியீடுகளாக வெளிவந்துள்ளன. அதில் இராமலிங்க சுவாமிகளின் சிவநாமாவளித்திரட்டு என்னும் நூல் உருவாக்கப்பட்ட நோக்கம் முக்கியத்துவம் வாய்ந்தது. அதில் “வள்ளலார் பாடிய திருவருட்பா ஆறு திருமுறைகளினின்றும் திரட்டப்பட்ட சிவபக்திப் பாடல்களைத் தொகுத்து முப்பத்தாறு பக்கங்களில் சிவநேயச் செல்வர் யாவரும் சதாபடனஞ்செய்து சிவனருள் பெறும் நோக்கத்தோடு சிறுவெளியீடாக அதிக சொற்ப விலைக்கு இந்நூல் வழங்கப்பட்டிருக்கிறது. இந்நூலின் முகப்பு அட்டையில் “சிவநாமாவளித்திரட்டு என்று வழங்கிவந்த பெயரை மாற்றி வெவ்வேறு பெயர்களமைத்துச் சிலர் அச்சிட்டிருப்பதால் இச்சுத்தமான பதிப்பைக் கவனித்து வாங்கும்படிக் கோருகின்றனன்” (மேலது, ப. 87) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பல நூல்களில் ‘சிவநாமவளித்திரட்டு’ என்று கூறாமல் ’நாமவளித்திரட்டு’ என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் இங்கு கவனிக்கத்தக்கது.

திருவருட்பாத் திரட்டு திரட்டப்பெற்றதின் நோக்கம், திரட்டப்பெற்ற முறைமை, திரட்டப்பெற்றதகான காரணம் ஆகியவற்றை அந்நூலின் முன்னுரையிலிருந்து அறிய முடிகின்றது. அதில் “தொழுவூர் வேலாயுத முதலியார் நமது இராமலிங்க சுவாமிகள் மீது வைத்துள்ள அன்பின் மிகுதியை நாம் தெரிந்து கொள்ளுமாறு மிகச் சிரமத்தோடு பிழையின்றி அச்சிட்டிருக்க, நாம் அவற்றிற் சிலவற்றையெடுத்துத் திருவருட்பாத்திரட்டு, என்று பெயர்புனைந் தச்சியற்றிய தெற்றுக்கெனின் அன்னோர் ஒரே கட்டமாகப்

பதிப்பித்த ஆறுதிருமுறைகளையும் வாங்குதல் தணிகர்கே இயலுமன்றி ஏனையோர்க்கு கஷ்ட சாத்தியமாதல் பற்றியும், இது சொற்சுவை பொருட்சுவைகளும் சுவாநுபூதியும் அமைந்த தோத்திரமாக விருத்தலால், ஒவ்வொருவரும் இதனைப்பெற்று பாராயணஞ் செய்ய வேண்டுமென்னும் கருத்தானும், பல்லோர் இவ்வாறு பதிப்பித்துத்தரக் கேட்டுக்கொண்டமையானும் இந்நூலைப் பிழையின்றி அச்சிட்டுப் பூச்சிக்கத்தக்க அழகிய நான்கு திருவுருவப்படங்களும் மமைத்து முடித்தோம்" (மேலது, பக் 87-88) என்று குறிப்பிட்டுள்ளார்.

தேவாரத் திரட்டுகளோடு இராமலிங்க அடிகளின் பாடல்களையும் இணைத்து சைவத்திரட்டுகள் உருவாக்கப்பட்டுள்ளன. ம. மாதவகிருஷ்ண முதலியார் உருவாக்கிய தேவாரத் தோத்திர திரட்டில், "இஃது சைவசமயாசாரிகளாகிய நால்வரது சரித்திரமும் நால்வர் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருவாசகத் திருமுறைகளினின்றும் தாயுமானவர் திருப்பாடல்களினின்றும், இராமலிங்க சுவாமி திருவருட்பாவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனவற்றை ஒருங்குசேரத் திரட்டி" (மேலது, ப. 91) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சைவ நூல்கள் அச்சிட்டு பரவலான காலத்தில் இராமலிங்க அடிகளின் நூல்களும் பரவலாக அச்சாக்கம் பெற்றுள்ளன. சைவத்திரட்டு நூல்களில் இராமலிங்க அடிகளின் பாடலும், இராமலிங்கர் பாடலுக்கு 'சிவநாமாவளித்திரட்டு' என்று பெயர் சூட்டுதலும் நிகழ்ந்துள்ளதை மேலே உள்ள திரட்டுகளின் மூலம் அறிய முடிகின்றது.

## தொகுப்பாக,

- சைவக்கொள்கையான அன்புநெறி, வள்ளலாரிடம் கருணையாகவும் இரக்கமாகவும் வெளிப்பட்டுள்ளது. ஆனால் அன்பு என்பதனை நேரடியாகக் கருணை, இரக்கம் என்று உணரமுடியவில்லை.

- வள்ளலாரைத் திரு.வி.க. கொல்லாமைக் கொள்கை முன்னோடியாகவும், தெ.பொ.மீ. அன்பு நெறிப் பரப்பாளராகவும் வையாபுரிப்பிள்ளை தமிழ்ப் பக்தி மரபை உள்வாங்கியவராகவும் கா. அப்பாதுரையார் சீர்திருத்தவாதிகளுள் சமய சீர்திருத்தவாதியாகவும் மு. அருணாசலம் துறவியாகவும் இருந்துள்ளார் என்பதைத் தங்களது கருத்துகளாகப் பதிவு செய்துள்ளனர். இதில் ஆறாம் திருமுறை குறித்து எந்த கருத்தையும் யாரும் பதிவிடவில்லை.

- பத்தொன்பதாம் நூற்றாண்டின் சைவ மரபின் அடையாளமாக வள்ளலார் கட்டமைக்கப்பட்ட தன்மையை, சைவ வழிபாடு சார்ந்தும் சைவ

அச்சுப்பண்பாடு சார்ந்தும் பதிவு செய்யப்பட்டுள்ளதை வள்ளலாரின் அச்சு ஆக்கங்களோடும் வழிபாட்டு முறைமையோடும் தொகுத்து நோக்கும்போதும் வளமாகவே வெளிப்பட்டுள்ளதைத் தரவுகளின்வழி அறிய முடிகின்றது.

அன்புநெறி சைவக்கொள்கை மூலமும் அறிஞர்களின் கருத்துகளின் வழியும் அச்சு ஊடகத்தின் மூலம் வள்ளலார் பரவியிருக்கும் நிலையினையும் இணைத்து நோக்கினால் வள்ளலாரின் சைவ நேய ஒருமைப்பாடு தமிழகத்தில் வலுவாக நிலைப்பெற்றுள்ளதை தரவுகளின்வழி அறிய முடிகின்றது.

பத்தொன்பதாம்நூற்றாண்டுதமிழ்ச்சமூகத்தில்மிகமுக்கியமானபுலமையாளர்களாகச் செயல்பட்ட சைவப் புலமையாளர்கள் பல்வேறு நெறிகளையுடைய பாட்டும் தொகையான பதினெண் மேற்கணக்கு நூல்களைச் சிவபெருமானுடன் தொடர்புடைய சங்க இலக்கியங்களாக்கினர். சொற்களைப் பல்வேறு வகையில் புரிந்துகொள்ள வாய்ப்பளிக்கும் திருக்குறளையும் அதனை இயற்றிய திருவள்ளுவரையும் சைவராக்க முயற்சித்தனர். கபாலீசுவரர் கோவில் தேர்த் திருவிழாவில் 63 நாயன்மார்களோடு சேர்ந்து அறுபத்து நான்காம் நாயனாராக திருவள்ளுவ நாயனார் உலா வருதல் இங்குக் குறிப்பிடத்தக்கது.அதேபோல் இராமலிங்க அடிகளாரின் ஐந்து திருமுறைகளைப் பரப்புவதில் சைவப் புலமையாளர்கள் காட்டிய அக்கறையை ஆறாம் திருமுறையைப் பரப்புவதில் காட்டவில்லை என்பதையும் அவரைச் சைவராகவே தங்கள் பதிப்புகள்வழி நிலைநாட்டவும் முயன்றனர் என்பதையும் இக்கட்டுரைவழி அறிந்துகொள்ள முடிகிறது.

பயன்பட்ட நூல்கள்


(1) 1999, வள்ளலார் எழுதிய உரைநடை நூல்கள், திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள், மீனாகோபால் பதிப்பகம், சென்னை

(2) 2012, தமிழ்ச் சுடர் மணிகள், பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.

(3) 2018, தமிழ் அச்சுப்பண்பாட்டு வரலாறு சைவசமயம் (1800 - 1950), முனைவர் கு. கலைவாணன், சந்தியா பதிப்பகம், சென்னை.

(4) 2018, சிதம்பரம் இராமலிங்கம் எனும் வள்ளலார் ; பன்முக வாசிப்பு, வி. தேவேந்திரன், நெய்தல் பதிப்பகம், சென்னை.

(5) 2018, சிதம்பரம் இராமலிங்கம் எனும் வள்ளலார் கைநூல், வி. தேவேந்திரன், நெய்தல் பதிப்பகம், சென்னை.



# புத்தகப் பேழை

## அந்நியமாதல்




பொருளாதாரம், அரசியல், தத்துவம், அறவியல், அழகியல், வரலாறு ஆகியவற்றை ஒன்றிணைத்து மார்க்சியத்தை ஈடு இணையற்ற புரட்சிகரத் தத்துவக் கோட்பாடாகக் காட்டும் முதல் தமிழ் நூலாகிய 'அந்நியமாதல்' எனும் இந்நூலின் முதல் பதிப்பு வெளியாகி ( 1979 ) ஏறக்குறைய 43 ஆண்டுகளுக்கு பிறகு க்ரியா வெளியீடாக - இரண்டாம் பதிப்பாக - தற்பொழுது இந்நூல் வெளிவந்துள்ளது.

' பொருளாதார, தத்துவக் கையெழுத்துப் படிகள் 1844 ' ( Economic and Philosophical Manuscripts 1844 - எனும் மார்க்சின் நூல் அறிவுத்துறையில் மாபெரும் அதிர்வுகளை உருவாக்கிய முக்கியப் படைப்பாகும். அதன் சாரமான அந்நியமாதல் எனும் கருத்தாக்கம் குறித்து நாடறிந்த மார்க்சிய அறிஞர் **எஸ்.வி. ராஜதுரை** அவர்கள் இந்நூலில் தெளிவு படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் அதிகம் பேசப்படாத அல்லது தவறாகப் பேசப்படும் மார்க்சின் இயற்கை குறித்த கரிசனம் பற்றிய விவரங்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது இப்புத்தகத்தின் மற்றுமோர் சிறப்பம்சமாகும்.

இந்நூலின் முதல் பதிப்பினைப் போலவே, இரண்டாம் பதிப்பும் மார்க்சியம் பற்றிய விவாதங்களைத் தூண்டிவிடும் என்ற பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்நூலைப் படிக்கும் பொழுதே, ‘பொருளாதார, தத்துவக் கையெழுத்துப் படிகள் 1844‘ எனும் நூலின் மெய்யான தமிழாக்கம் இதுவரை தமிழில் வரவில்லையே என்ற ஆதங்கம் மேலிடுகிறது. இதற்கான முன்னெடுப்புகள் கடந்த காலத்தில் அவ்வப்பொழுது மேற் கொள்ளப் பட்டிருந்தாலும், எதுவும் நிறைவடையவில்லை.

எனவே எஸ்.வி.ஆர். அவர்களே இம்மாபெரும் பணியையும் மேற்கொள்ள வேண்டும் என ‘புதுமலர் இதழ் சார்பாக இத்தருணத்தில் வேண்டுகிறோம்.

பக்கங்கள் - 304
விலை - ரூ.350.
வெளியீடு - க்ரியா
தொடர்புக்கு - crea@crea.in

---

# பேரரசின் சிதைவுகள்



புரட்சியாளர்களின் கனவு உலகாக நெடுங்காலம் விளங்கிய சோவியத் குடியரசு வீழ்ச்சியுற்று ஏறக்குறை ஆறு ஆண்டுகளுக்குப் பின்னால் 1997 ஆம் ஆண்டில் இரசிய அரசியல் அறிஞர் கோர்கி ஐ.மிர்ஸ்கி அவர்களால் எழுதப்பட்டது இந்நூலாகும். ஆங்கிலத்திலிருந்து **க. விஜயகுமார்** மூலம் தமிழாக்கம் செய்யப்பட்டுத் தமிழோசைப் பதிப்பகம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த15 குடியரசுகள், இப்பொழுது இறையாண்மையுள்ள தனித்தனி நாடுகளாக மாறிவிட்டன. அந்நாடுகள் இரசியாவுடன் முன்பு எவ்விதமான உறவைக் கொண்டிருந்தன? இப்பொழுது நிலைமை எப்படி மாறி உள்ளது? என்பவை குறித்தும், அந்நாடுகள் எதிர்கொள்ளும் அரசியல், பொருளாதாரச் சிக்கல்கள், அந்த நாடுகளுக்குள்ளேயே நடைபெறுகின்ற இன, அரசியல் மோதல்கள், உள்நாட்டுப் போர்கள் ஆகியவற்றிக்கான பின்னணியை இந்நூல் பகுப்பாய்வு செய்கிறது.

குறிப்பாக இனக்குழுக்கள், இனம், அரசு உருவாக்கம், தேசம், தேசப்பற்று, தேசியவாதம் ஆகியவை குறித்து நூலாசிரியர் கோர்கி ஐ. மிர்ஸ்கி, பல அறிஞர்களின் கருத்துக்களை மேற்கோள்களோடு விளக்குகிறார். 'தேசிய இனப்பிரச்சனையில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் தவறாமல் படித்தறிய வேண்டிய நூல் இது' என மொழிபெயர்ப்பாளர் குறிப்பிடுகிறார்.

பக்கங்கள் - 296
விலை - ரூ.320.
தொடர்புக்கு - 97884 59063
வெளியீடு - தமிழோசைப் பதிப்பகம், கோவை.

---

## மணிமேகலை - தமிழ்அறம்




மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய 'மணிமேகலை' காப்பியம் குறித்த **ஆ.கிருட்டிணன்** அவர்கள் எழுதிய இந்நூல், தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு குறித்த செய்திகளைக் கொண்டுள்ள காத்திரமானதோர் ஆய்வு நூலாகும். மணிமேகலை கூறும் பௌத்த அறம் என்பது தமிழ் அறம் என இந்நூல் வெளிப்படுத்துகிறது.

திருக்குறள், புறநானூறு மற்றும் பிற சங்கப்பாடல்களின் அறக்கோட்பாடுகள் மணிமேகலையில் எவ்வாறு உட்செறிந்துள்ளன என்பதை ஒப்பிட்டு இந்நூல் பேசுகிறது. பார்ப்பனிய ஒழிப்பு, வர்ணகுல ஒழிப்புப் பற்றிப் பேசும் மணிமேகலையைத் தமிழ் கூர் நல்லுலகு பயன்படுத்திக் கொள்ளாதது குறித்து நூலாசிரியர் கேள்வி எழுப்புவது கருதத்தக்கது.


தவிரவும், பௌத்தத்திற்கும் தமிழ் மரபுக்கும் இருந்த நல்லுறவு இதில் தெளிவு படுத்தப் பட்டுள்ளது. எனவே 'புத்தரின் கையடக்கமான பிடக நெறி எனும் நான்கு பேருண்மைகளை வைத்துக் கொண்டு, மணிமேகலை காப்பியத்தை உருவாக்கிய சாத்தனாரின் மொழியையும், அறிவையும் தமிழ்

மக்களிடையே கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்‘ எனும் வேட்கையோடு உருவாக்கப் பட்டுள்ள இந்நூல், மணிமேகலை பற்றிய ஆய்வு நூல்களில் குறிப்பிடத்தக்கதாகும்.

பக்கங்கள் - 156
விலை - ரூ.160.
தொடர்புக்கு - 80155 31019.
வெளியீடு - மருது பதிப்பகம், ஈரோடு....

---

# தமிழ் பயிற்றுமொழி - கனவும் நனவும்




தமிழ்நாடு டாக்டர் எம் ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகச் சிறப்புநிலைப் பேராசிரியராக விளங்கும் முனைவர் **டாக்டர் சு. நரேந்திரன்** அவர்கள் ஆங்கில முறை மருத்துவர் மட்டுமல்ல, தமிழ் பயிற்றுமொழி குறித்துப் பல்லாண்டுகளாக வலியுறுத்தி வரும் நற்றமிழ் அறிஞர் ஆவார். மருத்துவக் கல்வியைத் தமிழில் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்த முடியும் என்பது குறித்த இவரது ஆய்வு நூல் இத்தருணத்தில் நன்றியுடன் நினைவுகூரத் தக்கதாகும். தவிரவும், தனது ஆங்கில முறை மருத்துவம் குறித்தும் நூல்களை எழுதிப் பல்வேறு பரிசுகளை வென்றவர்.

தமிழ்வழிக் கல்வி குறித்த வரலாற்றை நூலாசிரியர் மிக விரிவாக இப்படைப்பில் தொகுத்துள்ளார். தவிரவும், இப்பொருள் சார்ந்து அமைக்கப்பட்ட ஆணையங்கள் குறித்தும், அவற்றின் பரிந்துரைகள் குறித்தும் விரிவான பதிவுகள் இதில் உள்ளன.

தவிரவும், தமிழ் பயிற்று மொழி பற்றி உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு குறித்த விமர்சனங்கள் மிகவும் பயனுடையவையாகும். அவை எதிர்காலத்திற்கான புதிய திறப்புகள் என்றே கருத வேண்டும்.

வெளிநாட்டில் தமிழ் பயிற்று மொழியாக இருப்பது பற்றிய விவரங்களும், உலக நாடுகளில் தாய் மொழிக் கல்வி குறித்த விவரங்களும் பலரும் அறிய வேண்டிய செய்திகள் ஆகும்.
பயிற்று மொழியாக மட்டுமல்லாமல், ஆட்சிமொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் தமிழ் வர வேண்டியதன் தேவையை இந்நூல் வலியுறுத்துகிறது.

நீட் தேர்வு குறித்து நூலாசிரியர் முன்வைக்கும் பரிந்துரை குறிப்பிடத் தக்கது.‘ ஒன்றிய அரசின் அறிக்கை, சுதேச மொழியிலும் தொழில்நுட்பக் கல்வியைக் கற்பிக்கலாம் என்று சொல்லும் நிலையில், நாம் ஏன் மருத்துவக் கல்வியைத் தமிழில் தொடங்கக்கூடாது? தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வியைத் தொடங்கும் நிலையில் நிச்சயமாக வெளி மாநிலத்தவர்கள் நீட் எழுதித் தமிழ் வழியில் படிக்க முன்வர மாட்டார்கள். 100 விழுக்காடு இடங்களும் நமக்கே கிடைத்துவிடும். இக்காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்கு நீட் தேர்வுக்கு விலக்குக் கிடைத்தாலும் அதையும் மனமுவந்து ஏற்றுக் கொள்வோம்‘ எனும் அவரது முன்வைப்பு கருதத்தக்கது.

பக்கங்கள் - 304
விலை - ரூ.340.
வெளியீடு - என் சி பி எச், சென்னை.

❖ ❖ ❖

# வள்ளலாரின் படைப்புகள்

| | |
|---|---|
| (1) பாடல்கள் | திருஅருட்பா ஆறு திருமுறைகளாக வகுக்கப்பெற்றவை. |
| (2) பாடல்கள் | ஆறு திருமுறைகளிலும் சேராதவை, |
| (3) விண்ணப்பங்கள் | பெருமான் இறைவனிடத்துச் செய்து கொண்டவை (உரை நடை). |
| (4) கடிதங்கள் | பெருமான் தம் கைப்பட எழுதியவை. |
| (5) கட்டளைகள் | தாம் நிறுவிய நிலையங்களின் நடை முறைகளைக் குறித்து எழுதியவை. |
| (6) பத்திரிகைகள் | சுற்றறிக்கைகளும் அழைப்பிதழ்களும் |
| (7) உபதேசங்கள் | உடன் கூட்டத்தாராலும் கேட்டவர்களாலும் எழுதிவைக்கப் பெற்றுள்ள குறிப்புகள்: |

(8) உரைநடை 1. மனுமுறைகண்ட வாசகம்.
2. ஜீவகாருண்ய ஒழுக்கம்.

(9) நூல்கள்

(1) 'தமிழ்' என்ற சொல்லுக்கு வரைந்த உரை.
(2) பெரிய புராணம் முதற் பாடல் முதற் சொல்லாகிய ‘உலகெலாம் என்பதற்கு வரைந்த விளக்க உரை.
(3) ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி.
(4) தொண்டமண்டல சதகத்தின் நூற்பெயரிலக்கணமும், கடவுள் வாழ்த்துப் பாடலுக்குச் செய்த உரையும்.
(5) பொன்வண்ணத் தந்தாதியின் இருபத்திரண்டாம் பாடலுக்குச் செய்த உரை. வேதாந்த தேசிகரின் குறட்பா ஒன்றுக்கு வரைந்த உரை.

(10) பதிப்பித்த நூல்கள்
1. ஒழிவிலொடுக்கம் (1851)
2. தொண்டமண்டல சதகம்(1855)
3. சின்மய தீபிகை(1857)

(11) பிற - மருந்துச்சரக்குகளின் குண அட்டவனை முதலியன.

பெருமானின் அருளிச் செயல்கள் அனைத்தும் அச்சிடப் பெற்று நூல்களாக வெளிவந்துள்ளன.

திருஅருட்பா ஆறு திருமுறைகளும் இரண்டு தொகுதிகளாக (இரண்டு புத்தகங்களாக) அச்சிடப்பெற்று வழங்கி வருகின்றன. முதல் ஐந்து திருமுறைகள் ஒரு தொகுதி, ஆறாம் திருமுறை ஒரு தொகுதி, ஆக இரண்டு புத்தகங்கள்.

உரைநடை அருளிச்செயல்களில் சில ஐந்து திருமுறைத் தொகுதியிலும், சில ஆறாம் திருமுறைத் தொகுதியிலும்

சேர்க்கப்பெற்று வழங்கின. அப்படியும் உரைநடைப்பகுதி அனைத்தும் முழுமையாக, முறையாக வெளிவராதிருந்தன. இது முன்னைய நிலை. உரைநடை ஆக்கங்கள் அனைத்தையும், "திருஅருட்பா உரைநடைப்பகுதி" என்ற பெயருடன் ஒரே புத்தகமாக யாம் முதன்முதலில் வெளியிட்டோம்(1978). இப்போது வள்ளற்பெருமானது அருளிச்செயல்கள் அனைத்தும் மூன்று தொகுதிகளாக(புத்தகங்களாக) வழங்கி வருகின்றன.

(1) திருஅருட்பா முதல்ஐந்து திருமுறைகள்
(2) திருஅருட்பா ஆறாம் திருமுறை
(3) திருஅருட்பா உரைநடைப்பகுதி

இம் மூன்றும் செம்பதிப்பாக, ஆராய்ச்சிப் பதிப்பாக, நம்மால் நமது சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலைய வெளியீடாக வெளியிடப்பெற்றுள்ளன.

(நன்றி - வள்ளலார் இராமலிங்க அடிகள் வரலாறு - முனைவர் ஊரன் அடிகளார்)

❖ ❖ ❖

